தமிழ்மணி மாலை

ஐந்தாம் படிவம்

பொது

பழனியப்பா பிரதர்ஸ்
திருச்சி & சென்னை - 5

தமிழ் மணி மாலை

ஐந்தாம் படிவம் : பொதுப் பகுதி

தொகுத்தோர் :

வித்துவான் **திரு. ஐயன்பெருமாள் கோனார்**

தமிழ் விரிவுரையாளர், புனித சூசையப்பர் கல்லூரி, திருச்சி

வித்துவான் **த. கி. குப்புசாமி ஆழ்வார்**

தலைமைத் தமிழாசிரியர், புனித சூசையப்பர் உயர்நிலைப்பள்ளி, திருச்சி

பழனியப்பா பிரதர்ஸ்

தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி & *சேப்பாக்கம்*
சென்னை-5

பதிப்புரிமை] 1954 [ரூ. 1—2—0

முகவுரை

மாணவர்கட்குத் தமிழ்மொழியில் ஆர்வமும் புத்துணர்ச்சியும் உண்டாகும் வகையில் சென்னை அரசியல் கல்வித் துறையினர் அண்மையில் (27-1-54) வெளியிட்டுள்ள புதிய பாடத் திட்டத்தை ஒட்டியும், பள்ளியிறுதித் தமிழ்த்தேர்வு பாட புத்தக அமைதியை மேற்கொண்டும் 'தமிழ் மணி மாலை' என்னும் இப்புத்தக வரிசை வெளி வருகின்றது. அவ்வரிசையுள் இப்புத்தகம் ஐந்தாம் படிவம் பொதுப் பகுதிக்குரியது.

பாமணி மாலைப் பகுதியில் பழங்கால, இடைக்கால, இக்கால நூல்களிலிருந்து மாணவர் தகுதிக்கேற்பச் செய்யுட்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. உரைமணி மாலைப் பகுதியில் இலக்கியம், கலை, நாடகம், கதை, பிரயாணம் சொற்பொழிவு, கடிதம் முதலிய பலவகைக் கட்டுரைகள் தொகுக்கப் பெற்றுள்ளன.

செய்யுட் பகுதி ஒவ்வொன்றிலும் சுருக்கமான நூல் வரலாறு, ஆசிரியர் வரலாறு, அரும்பதவுரை, பயிற்சி வினாக்களும், உரைநடைப் பகுதியில் அரும்பதவுரை, பயிற்சி வினாக்களும் மாணவர் நலங்கருதிச் சேர்க்கப் பெற்றுள்ளன.

எமது வேண்டுகோட்கிணங்கி இந்நூலில் சேர்த்துக் கொள்ளும்படி தத்தம் கவிதைகளையும் கட்டுரைகளையும் வழங்கிய பேரறிஞர்கட்கு எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இதனை வெளியிட்ட பழனியப்பா பிரதர்ஸ் உரிமையாளரும் எமது உழுவலன்பருமாகிய உயர்திரு. செ. மெ. பழனியப்பச் செட்டியார் அவர்களுக்கும் எமது நன்றி உரியதாகும்.

நன்முறையில் அமைக்கப்பட்டுள்ள இப்புத்தகத்தைக் கல்வியதிகாரிகளும் கல்வி நிலையத் தலைவர்களும், தமிழாசிரியர்களும் ஆதரித்து எங்களை ஊக்குமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

திருச்சிராப்பள்ளி
10—10—54

திரு. ஐயன்பெருமாள் கோனார்
த. கி. குப்புசாமி ஆழ்வார்

உள்ளுறை

பாமணி மாலை

THE MADURA TAMIL SANGAM

எண்	பொருள்	பக்கம்
I.	**வாழ்த்து**	
1.	திருவாசகம்	1
2.	நாலாயிர திவ்யப் பிரபந்தம்	2
3.	இரட்சணிய யாத்திரிகம்	3
4.	தமிழ்த்தாய் வாழ்த்து	3
II.	**அறவுரை**	
1.	திருக்குறள்	5
2.	நாலடியார்	9
3.	பழமொழி	11
III.	**கதை**	
1.	சிலப்பதிகாரம்	13
2.	கம்பராமாயணம்	18
3.	வில்லிபுத்தூரார் பாரதம்	24
4.	தேம்பாவணி	29
IV.	**சிறுநூல்கள்**	
1.	நால்வர் நான்மணிமாலை	34
2.	தமிழ்விடு தூது	36
3.	ஆற்றுப்படை	38
4.	திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் ...	39
V.	**புனைந்துரை**	
1.	நாட்டுவளம்	41
2.	செந்நெல் வளர்தல்	41
3.	காவிரிப் பூம்பட்டினக் கடைத்தெரு ...	42
4.	குறக்குடியின் இயல்பு	43
VI.	**பல்சுவை**	
1.	மதுரைமா நகரம்	44
2.	சடையப்பவள்ளல் பெருமை	45
3.	நூல்பயில் இயல்பு	46
4.	பாணனும் விறலியும்	46
5.	உத்தமன் காந்தி	47

உரைமணி மாலை

எண்	பொருள்	பக்கம்
1.	**வாழ்க்கையின் அடிப்படை ஒழுக்கம்** *திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார், பி. ஏ., பி.எல்.*	48
2.	**வால்மீகியும் கம்பரும்** *திரு. சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார்*	53
3.	**தமிழிசை** *திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், பி.ஏ., பி.எல்.*	58
4.	**குண்டலகேசி** *திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், எம். ஏ.*	63
5.	**தம்பிக்கு—கடிதம்** *டாக்டர். திரு. மு. வரதராசனுர், எம். ஏ.,எம். ஓ. எல்.*	68
6.	**யாதும் ஊரே யாவரும் கேளிர்** *திருமதி. மேரி. மாசில்லாமணி அம்மையார், எம். ஏ.*	75
7.	**சக்தி** *திரு. ஜி. தாமோதரன், ஆசிரியர், கலைக்கதிர்*	80
8.	**உழவப் புலவன்** *புலவர் திரு. வ. சுப. மாணிக்கம், எம். ஏ.*	90
9.	**சிறையிருந்த செல்வி** *திரு. ரா. பி. சேதுப்பிள்ளை,பி. ஏ., பி. எல்.*	
10.	**தமிழ் இசைக்கருவிகள்** *வித்துவான் திரு. ஐயன்பெருமாள் கோனுர்*	102
11.	**சுப்பிரமணிய பாரதியார்** *டாக்டர். உ. வே. சாமிநாதையர்*	
12.	**கிராமச் சிறு கைத்தொழில்** *திரு. ச. முத்தையா, எம். ஏ.*	113

தமிழ்மணி மாலை

ஐந்தாம் படிவம் - பொதுப் பகுதி

பாமணி மாலை

1. வாழ்த்து

1. திருவாசகம்

திருவாசகம் : அழகிய மொழிகளமைந்த பாக்களாலாகிய நூல். இது சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாவதாகும். ' திருவாசகத் திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் ' என்பது இந்நூலின் சிறப்பை விளக்க வழங்கும் பழமொழியாகும். இப்பாடப் பகுதி ' பிடித்த பத்து ' என்னும் பதிகத்தில் உள்ளதாகும்.

மாணிக்கவாசகர் : இவர் பாண்டிய நாட்டில் திருவாதவூரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர். அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராயிருந்தவர். திருப்பெருந்துறையில் சிவபெருமான் குருவடிவமாக எழுந்தருளி ஆட்கொள்ளும் பேறு பெற்றவர். மாணிக்கம் போன்ற திருப்பாடல்களை இவர் அருளிச் செய்தமையால் இவருக்கு மாணிக்க வாசகர் என்னும் பெயர் உண்டாயிற்று. இவரது காலம் கி. பி. 3-ஆம் நூற்றாண்டென்பர். 9-ஆம் நூற்றாண்டென்பாரும் உளர்.

தாயினும் சாலச் சிறந்தவன்

பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே ! சிவபெரு மானே !
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

—மாணிக்கவாசகர்

அருஞ்சொற் பொருள்

நினைந்து - பசிக்குங் காலமறிந்து. பரிந்து - அன்புகொண்டு இரங்கி. ஊன் - உடம்பு ; உள்ளொளி - ஞானம். உலப்பு - கெடுதல்.

2. நாலாயிர திவ்யப் பிரபந்தம்

நாலயிரதிவ்யப் பிரபந்தம்: வைணவ சமயத்தைச் சார்ந்த ஆழ்வார்கள் பன்னிருவர் அருளிச் செய்த நாலாயிரம் அருங்கவிகளையுடைய நூல். இந்நூல் முதலாயிரம், பெரிய திருமொழி இயற்பா, திருவாய் மொழி என நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. இவற்றில் ஒரு பகுதியாகிய பெரிய திருமொழியில் உள்ளது இப்பாசுரம்.

திருமங்கையாழ்வார்: இவர் சோழ நாட்டில் திருமங்கை என்னும் நாட்டிலே கள்ளர் குடியில் பிறந்தவர். இயற் பெயர் நீலன். குமுத வல்லியை மணந்தவர். சிலகாலம் சோழனிடம் படைத்தலைவனாக இருந்தவர். பிறகு திருமங்கை நாட்டு மன்னனாக நியமிக்கப்பட்டவர். வழிப்பறி முதலியன செய்தும் திருமால்பணி செய்தவர். இவரது காலம் கி. பி. 8-ஆம் நூற்றாண்டு என்பர்.

திருவரங்கன் திருவருள்

கடிகொள் பூம்பொழில் காமரு பொய்கை
வைகு தாமரை வாங்கிய வேழம்
முடியும் வண்ணமோர் முழுவலி முதலை
பற்ற மற்றது நின்சரண் நினைப்பக்
கொடிய வாய்விலங் கின்னுயிர் மலங்கக்
கொண்ட சீற்றமொன் றுண்டுள தறிந்துன்
அடிய னேனும்வந் தடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே 4

—**திருமங்கையாழ்வார்**

அருஞ்சொற் பொருள்

கடி - மணம். **காமரு** - விரும்பத்தக்க. பொய்கை - மடுவில். வைகும் - இருக்கின்ற. வாங்கிய - பறித்த. வேழம் - கஜேந்திரன் என்னும் யானை. **சரண்** - திருவடிகள். விலங்கின் - முதலையின். மலங்க - கலங்கும்படி. சீற்றம் - கோபம். **அணி பொழில்** - அழகிய சோலை. அம்மான் - இறைவன். சீற்றம் உண்டு உளது அறிந்து - உன்னுடைய கோபம் யானையைப்பற்றிய முதலையைக் கொன்று, அந்த யானையைக் காப்பாற்றியுள்ளது என்பதை அறிந்து.

3. இரட்சணிய யாத்திரிகம்

இரட்சணிய யாத்திரிகம் : இரட்சிப்பு அடைய வேண்டிய ஆத்மா வினது யாத்திரையைப் பற்றிக் கூறும் நூல். இது ஆங்கிலத்திலுள்ள Pilgrims progress என்னும் நூலின் வழிநூலாகும்.

எச். ஏ. கிருஷ்ணபிள்ளை: இவர் பாளையங்கோட்டைக்கு அருகிலுள்ள ரெட்டியார் பட்டியில் பிறந்தவர். வைணவராயிருந்து கிருஸ்தவரானவர். 'கிருஸ்தவக் கம்பர்' எனப்படுபவர். இவரது காலம் 1827-1900.

குமாரசாமி வணக்கம்

உலகமகிழ்ந் தீடேறப் பரலோக
வாசிகளுக் குவகை யேற
அலகையுளந் திகிலேற அகண்டபரி
பூரணனு ரருள்மெய் வாக்கு
விலகிலதாய் நிறைவேறத் துதியேற
நரவுருவாய் விளங்கி யன்பாற்
சிலுவைமிசை யேறியமெய்ஞ் ஞானசூ
ரியனடியைச் சிந்தை செய்வாம்.

—எச். ஏ. கிருஷ்ணபிள்ளை

அருஞ்சொற் பொருள்

ஈடேற - உய்ய. பரலோக வாசிகள் - மேலுலகத்திலுள்ளவர். அலகை - பேய். திகில் - அச்சம். அகண்டபரிபூரணன் - நீக்கமற நிறைந்தவன். நரவுரு - மனித வடிவம்.

4. தமிழ்த்தாய் வாழ்த்து

இச்செய்யுளை இயற்றியவர் யோகி சுத்தானந்த பாரதியார். இவரது இயற்பெயர் வேங்கடரமணன் என்பதாம். இவர் சிவகங்கையிலுள்ள ஜடாதாருக்குக் காமாட்சியம்மாளிடம் தோன்றியவர் ; தமிழ், ஆங்கிலம், பிரஞ்சு முதலிய பன்மொழிகளில் வல்ல புலவர். துறவற நெறியினர் ; சிறந்த யோகி ; பிறப்பு ; 11-5-1897.

இன்னிசை அணிந்த பொன்னிளஞ் செல்வி ;
இனிமையே தன் பெய ராளுள் ;
மன்னுல கெல்லாம் வணங்கிடத் தக்க
பொதுமறை யருளிய வாணி ;

பன்மொழிக் குயர்ந்த தொன்மொழி யரசி ;
பரமனின் வரம்பெற்ற புதல்வி ;
தன்னிக ரற்ற தமிழெனும் அமுதத்
தாய்மலர் அடிபணிந் துய்வாம்.

—யோகி சுத்தானந்த பாரதியார்

அருஞ்சொற் பொருள்

இன்னிசை - இனிய ஒலி. பொன் - அழகு. மன் - நிலைபெற்ற. பொதுமறை - திருக்குறள். உய்வாம் - வாழ்வோம்.

பயிற்சி வினாக்கள்

திருவாசகம்:

1. சிவபெருமான் தமக்கு எத்தகைய அருள் புரிந்ததாக மாணிக்க வாசகர் கூறியுள்ளார் ?
2. பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடையவன் ஈசன்— விளக்குக.

நாலாயிர திவ்யப் பிரபந்தம்:

1. திருமங்கையாழ்வார் திருவரங்கப் பெருமான் அடியிணை யடைந்தமைக்குக் கூறுங் காரணம் யாது ?
2. கொடியவாய் விலங்கின் உயிர் மலங்கக் கொண்ட சீற்றம் ஒன்று உண்டு — விளக்கவுரை தருக.
3. வேழம் முடியும் வண்ணம் ஓர் முதலை பற்ற — கதைக் குறிப்பு வரைக.

இரட்சணிய யாத்திரிகம்

1. சிலுவை மிசை ஏறிய மெய்ஞ்ஞான சூரியன் யார்? அவர் நர வுருவாய் விளங்கியமையால் ஏற்பட்ட நன்மைகள் யாவை ?
2. இரட்சணிய யாத்திரிகம் - குறிப்பு வரைக.

தமிழ்த்தாய் வாழ்த்து :

1. இனிமையே தன்பெயராளுள் - யார் ?
2. தமிழ்த்தாயின் பெருமைகளை ஆசிரியர் எங்ஙனம் தெரிவித் துள்ளார் ?

II. அறவுரை

1. திருக்குறள்

திருக்குறள் : சிறந்த குறள் வெண்பாக்களினாலாகிய நூல். திரு-அடைமொழி. குறள்-குறுகிய (இரண்டு) அடிகளையுடைய ஒருவகை வெண்பா. இதற்கு முப்பால், பொய்யாமொழி, பொதுமறை, தமிழ் மறை முதலிய பெயர்கள் வழங்குகின்றன. இந்நூல் சாதி மத கால வேறுபாடின்றி யாவராலும் எக்காலத்தும் படிக்கப்படும் உலகப் பொது நூலாகும். இதனை இலத்தீன் முதலிய பல மொழிகளில் மொழி பெயர்த்துள்ளனர். இந்நூல், அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்ற முப்பகுதிகளை யுடையது.

திருவள்ளுவர் : இவருடைய பிறப்பு முதலிய வாழ்க்கை வரலாறு கள் தெளிவாய்த் தெரியவில்லை. ஆனால், இவரைப் பற்றி வழங்குகின்ற கதைகள் பலவாம். நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர் முதலியன இவரது சிறப்புப்பெயர்களாம், இவர் காலம் கி. பி. 2-ஆம் நூற் றுண்டிற்கு முன் என்பர்.

குடிமை

ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். 1

நகையீகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு. 2

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரிதல் இன்று 3

மானம்

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. 4

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்
கெட்டான் எனப்படுதல் நன்று. [நிலையே 5

மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்
பீடழிய வந்த விடத்து. [தகைமை 6

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 7

பெருமை

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். 8

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. 9

சான்றாண்மை

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண். 10

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. 11

ஆற்றுவா ராற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. 12

பண்புடைமை

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. 13

நண்பாற்று ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்று ராதல் கடை. 14

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று. 15

நாணுடைமை

பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி என்னும் உலகு. 16

பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்க துடைத்து. 17

குடிசெயல்வகை

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். 18

நல்லாண்மை என்ப தொருவற்குத் தான் பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல். 19

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. 20

—திருவள்ளுவர்

அருஞ்சொற் பொருள்

குடிமை—உயர்ந்த குடியின்கண் பிறந்தாரது தன்மை,

1. வாய்மை - உண்மை. இழுக்கார் - வழுவமாட்டார்.

2. வகை - கூறு. வாய்மைக்குடி - எல்லாக்காலத்தும் திரிபில்லாத குடியிற் பிறந்தவர்.

3. வழங்குவது - கொடுக்கும் பொருள். உள்வீழ்ந்தக்கண்ணும் - சுருங்கியவிடத்தும். பழங்குடி - தொன்றுதொட்டு வருகின்ற குடியிற் பிறந்தவர். பண்பின் தலைப்பிரிதல் இன்று - தம் பண்பினின்று நீங்குதல் இலர்.

மானம்—எஞ்ஞான்றும் தம் நிலையிற் றிழாமையும், தாழ்வு வந்த விடத்து உயிர்வாழாமையுமாகிய தன்மை.

4. பெருக்கத்து - நிறைந்த செல்வமுள்ள காலத்து. சிறிய சுருக்கத்து - குறைந்த வறுமை உண்டான காலத்து. உயர்வு - பணியாமை.

5. ஒட்டார் – தன்னை இகழ்வார். அந்நிலையே கெட்டான் - (அது செய்யாது) முன்னை நிலையில் நின்று இறந்தான்.

6. ஊன் ஓம்பும் - (பயனில்லாத) உடம்பைக் காக்கும். மருந்தோ - (பின்னும் இறவாமைக்கு) மருந்தாமோ. பெருந்தகைமை - உயர்குடிப் பிறப்பு. பீடு - தன் வலியாகிய மானம்,

7. மயிர் நீப்பின் - தன் மயிர்த்திரளின் ஒரு மயிர் நீங்கினும். வாழா - உயிர் வாழாத. மானம் வரின் - (உயிர் நீக்கத் தான்) மானம் எய்தும் எல்லை வரின்.

பெருமை—நற்குணங்களால் பெரியாரது தன்மை.

8. சிறப்பு - சிறப்பியல்புகள். ஒவ்வா - ஒப்பாகார்

9. ஆம்: அசைநிலை. பெருமை - பெருமையுடையவர். சிறுமை - சிறுமையுடையவர். அணிதல்-தமக்கு மேன்மையை ஏற்றிக்கொள்ளுதல்.

சான்றாண்மை—பல குணங்களாலும் நிறைந்து அவற்றை ஆளுந் தன்மை.

10. ஒப்புரவு - உலகநடையினை அறிந்து செய்தல். கண்ணோட்டம் - தாட்சணியம். சால்பு ஊன்றிய தூண் ஐந்து என மாறுக. ஊன்றிய - தாங்கிய.

11. நோன்மை - தவம்.

12. ஆற்றல் - வல்லமை. பணிதல் – (தம் கருமத்திற்குத் துணையாவாரைத்) தாழ்ந்து கூட்டிக்கொள்ளுதல். மாற்றுரை - பகைவரை. மாற்றும் - பகைமை நீக்குகின்ற.

பண்புடைமை—எல்லாரியல்புகளையும் அறிந்து ஒழுகுதல்.

13. ஆன்றகுடி - (உலகத்தோடு) அமைந்த குடி. அமைதல் - ஒத்து வருதல். வழக்கு - நன்னெறி.

14. ஆற்றாரகி - செய்யாமல். நயமில - அன்பில்லாதவற்றை; பகைமையை. பண்பு ஆற்றாரதல் - பண்புடையவராய் ஒழுகாதிருத்தல்.

15. நன் பால் - நல்ல பசுவின்பால். கலம் தீமையால் - கலத்தின் குற்றத்தால். திரிந்தற்று - கெட்டதுபோலும். கலந்தீமை என்பது கலத் தீமை என்பதன்விகாரம்.

நாணுடைமை—உயர்ந்தோர், தமக்கு ஒவ்வாத செயலில் நாணுதல் உடையராந் தன்மை.

16. உறைபதி - உறைவிடம்.

17. அறம் நாணத் தக்கது - அறம் விட்டுநீங்கத் தக்க குற்றத்தை.

குடிசெயல்வகை—தான் பிறந்த குடியை உயரச்செய்தலின் திறம்.

18. குடிசெய்வல் - (என்குடியினை) உயரச் செய்வேன். தெய்வம் - ஊழ். மடி - ஆடை. தற்று - இறுக உடுத்துக்கொண்டு.முன் நடப்பவரின் செயல் ஊழ்மேல் ஏற்றப்பட்டது.

19. இல் - குடியினை. ஆண்மை - ஆளுந்தன்மையை. ஆக்கிக் கொளல் - தனக்கு உளதாக்கிக்கொள்ளுதல். குடியினை ஆளுந்தன்மை யாவது, குடியில் உள்ளவரை உயரச்செய்து தன்வழிப்படுத்துதல்.

20. அமரகத்து – போர்க்களத்தில். வன்கண்ணர் போல - (போர் தாங்குதல்) வன்கண்ணர்மேலது ஆறுபோல. தமரகத்தும் – குடியின் கண் பிறந்த சுற்றத்தாருள்ளும். ஆற்றுவார்மேற்று - பொறுக்கவல்லவர் மேலது. பொறை - குடியின் பாரத்தைப் பொறுத்தல்; குடியைத் தாங்குதல்.

போர்க்களத்துச் சென்றவர் பலராயினும், போர்தாங்குவார் வன்கண்ணரான சிலரே யாதல்போல, ஒரு குடியிற்பிறந்தவர் பலராயினும் அதனைத் தாங்கும் ஆற்றல் உள்ளவர் சிலரேயாவர் என்பது கருத்து.

2. நாலடியார்

நாலடியார் : நான்காகிய அடிகளைக்கொண்ட வெண்பாக்களாலாகிய நூல். இது பதினெண் கீழ்க்கணக்கினுள் முதலாவதாக வைத்தெண்ணப்படுவது : 400 பாடல்களையுடையது ; அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்ற முப்பெரும் பிரிவுகளையுடையது. 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்பது இதன் பெருமையை விளக்கும் பழமொழிகளில் ஒன்று. இந்நூல் போப்பையர் அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இதனை இயற்றியவர் சமண முனிவர்கள். இவர்கள் காலம் 1800 ஆண்டுகளுக்கு முன் என்பர்.

கல்வியே அழியாப் பொருள்

வைப்புழிக் கோட்படா; வாய்த்தீயின் கேடில்லை;
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்;
எச்சமென ஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற. 1

கல்வியே உயர்ச்சிக்குக் காரணம்

களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத்தோ ராயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும். 2

குடிப்பிறந்தார் தன்மை

ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉந் திங்கள்போல்
செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார். 3

சிற்றறிவுடையார் தன்மை

தாமேயும் இன்புறார் தக்கார்க்கும் நன்றாற்றார்
ஏமஞ்சார் நன்னெறியுஞ் சேர்கலார்—தாமயங்கி
ஆக்கத்துள் தூங்கி அவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னார். 4

தானே தன் உயர்வுக்குக் காரணம்

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்,—நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான். 5

—சமண முனிவர்

அருஞ்சொற் பொருள்

1. விச்சை - கல்விகள். வைப்பு உழி - வைக்கப்பட்ட இடத்தில். கோள்படா -(பிறரால்) கவரப்படமாட்டா, செறின்-(பொறாமை காரணமாகக்) கோபித்தாலும். வவ்வார்—அபகரிக்கமாட்டார். எச்சம் — சம்பாத்தியத்தில் மிச்சப்பட்டு நிற்பது. இச்செய்யுள் கல்விப் பொருளுக்கும் செல்வப்பொருளுக்குமுள்ள வேற்றுமையைக் கூறுவதால் **வேற்றுமையணி**. எச்சம் - எஞ்சு, பகுதி. கோள் - முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

2. களர் —(இழிவான) உவர் நிலம். கடை நிலத்தோர் — இழிவான வகுப்பிற் பிறந்தவர். தலைநிலம்—மேன்மையான இடம், பிறப்புப் பற்றி உயர்வு, தாழ்வு பாராட்டாமல் கல்விச் சிறப்பால் நன்கு மதிக்க வேண்டும் என்பது கருத்து.

3. ஒருபுடை - ஒருபகுதி ஞாலம் — பூமி, செல்லாமை - வறுமை. செவ்வன் — நன்றாக. ஒப்புரவு — உபகாரம். இச்செய்யுள் உவமையணி.

4. நன்று ஆற்றார்—தானம் செய்யமாட்டார், ஏமம்சார்—(உயிர்க்குப்) பாதுகாப்பாகப் பொருந்திய, ஆக்கம் — செல்வம். அவத்தம் - வீண்.

5. நிறுப்பானும் — வைப்பவனும், ஒருவனுடைய உயர்வு, தாழ்வுகட்கு அவனுடைய அறிவும், அறிவின்மையுமே காரணம்என்பது கருத்து. "பெருமைக்கும், ஏனைச் சிறுமைக்கும்தத்தம், கருமமே கட்டளைக் கல்" என்பது திருக்குறள்.

3. பழமொழி

பழமொழி : பழமொழியை இறுதியில் கொண்ட நானூறு வெண் பாக்களால் ஆகிய நூல். பழமை+மொழி ; இது சங்கத் தொகை நூல் களுள் பதினெண் கீழ்க் கணக்கைச் சார்ந்தது.

முன்றுறை அரையனார் : இவர் பாண்டிய நாட்டிலுள்ள முன்றுறை என்னும் பதியின் அரசர். சைன மதத்தினர், இவரது காலம் 1800 ஆண்டுகட்கு முன்னர் என்பர்,

குலவித்தை கல்லாமல் வருதல்

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும். 1

கல்லாரிடம் கட்டுரைத்தல் பொல்லாதாம்

கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை ஒருவர்க்கு—நல்லாய்
இழுக்கத்தின் மிக்க இழிவில்லை இல்லை
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு. 2

தன்சொல்லாலே தன்னைத் துயர்ப்படுத்தல்

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயாற் கெடும். 3

பெருஞ்செல்வர் தரித்திரப்பட்டாலும் தாழார்

நாடறியப் பட்ட பெருஞ்செல்வர் நல்கூர்ந்து
வாடிய காலத்தும் வட்குபவோ—வாடி
வலித்துத் திரங்கிக் கிடந்தே விடினும்
புலித்தலையை நாய்மோத்த லில். 4

அற்பரிடத்தில் அதிகாரம் கொடார்

உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமி லுள்ளத்த னாகி—நடக்கையின்
ஒள்ளிய னல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல். 5

—முன்றுறையரையனார்

அருஞ்சொற் பொருள்

1. உரைமுடிவு காணான் இளமையோன் - உரைத்துக் கொண்ட வழக்கினது வார்த்தை முடிவைக் கண்டறியக் கூடாதவனான இளமைப் பருவத்தான். நரைமுது மக்கள் – நரை மயிருள்ள முதியோர். உவப்ப – மகிழும் வகை. சோழன் – கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழ மன்னன். விச்சை - வித்தை. பாகம்படும் - செம்பாகமாக அமையும்.

2. கட்டுரை – உறுதிச்சொல். இழுக்கம் - ஒழுக்கமில்லாமை.

3. துயர்ப்படுக்கும் – துன்பத்தின்கண் அகப்படுக்கும். நுணல் - தவளை.

4. நல்கூர்ந்து – தரித்திரமடைந்து. வட்குபவோ – (பிறர் ஒருவருக்குத் தாழ்வரோ?) தாழார். வலித்து – (நரம்பு) மேலெழுந்து. திரங்கி – சுருங்கி. மோத்தல் – மோந்து பார்த்தல்.

5. நடக்கையின் ஒள்ளியன் அல்லான் - ஒழுக்கத்தால் மேன்மையில்லாதவன்.

பயிற்சி வினாக்கள்

திருக்குறள்

1. குடிப் பிறந்தார்க்குரிய இயல்புகளைத் தொகுத்துரைக்க.
2. ஊனோம்பும் வாழ்க்கை விரும்பார்—யார்? எப்பொழுது?
3. கவரிமாவின் இயல்பு யாது? இது யாருக்கு உவமையாகும்.
4. பெரியோர் சிறியோர் தன்மைகள் யாவை?
5. சான்றாண்மையுடையோர் இயல்புகள் யாவை?
6. பண்புடைமை என்றால் என்ன?
7. நன்பால் கலந்தீமையால் திரிந்தற்று—எது?
8. நாணுக் குறைபதி யார்?

நாலடியார்

1. கல்வியே அழியாப்பொருள் எனப்படுவது ஏன்?
2. குடிப்பிறந்தார், புல்லறிவினர் இயல்புகள் யாவை?
3. உப்பு, நெல்—இவற்றைக் கொண்டு விளக்கப்படுவதென்ன

பழமொழி

1. நரைமுடித்துச் சொல்லால் முறை செய்தான் யார்? இவன் வரலாற்றிலிருந்து நீவிர் அறிவதென்ன?
2. நுணலும் தன் வாயாற் கெடும், புலித்தலையை நாய் மோத்தலில், குரங்கின்கை கொள்ளி கொடுத்துவிடல்—இவை விளக்கும் பொருள்களைத் தெரிவிக்க.

III. கதை

1. சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் : சிலம்பினது அதிகரித்தலையுடைய நூல். சிலம்பு காரணமாக விளைந்த கோவலனது வரலாற்றைச் சொல்லுவதால் இந்நூல் சிலப்பதிகாரம் என்னும் பெயர் பெற்றது. இது ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. இக்காப்பியம் தமிழ்நாட்டு முடிமன்னர் மூவர்க்கும் உரியது. சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்து விளங்குவது.

இளங்கோவடிகள் : இவர் சேர நாட்டை யாண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு நற்சோணையிடம் தோன்றியவர் ; தம் தமயன் சேரன் செங்குட்டுவன் பொருட்டு இளமையிலேயே துறவு பூண்டவர்; சமண சமயத்தினர் ; காலம் கி. பி. 2–ஆம் நூற்றாண்டு.

கண்ணகி வழக்குரைத்தது

கண்ணகி வாயிற் காவலனிடம் கூறுதல்

'வாயி லோயே! வாயி லோயே!
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே!
'இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாள்,' என்று
அறிவிப்பாயே! அறிவிப் பாயே!' என,

வாயிலோன் அரசனுக்கு அறிவித்தல்

வாயிலோன்,
...*'வாழி; எங் கொற்கை வேந்தே! வாழி;*
தென்னம் பொருப்பின் தலைவ! வாழி;
செழிய! வாழி; தென்னவ! வாழி;
பழியொடு படராப் பஞ்சவ! வாழி;

அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்;
அறுவர்க் கிளைய நங்கை, இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு, சூருடைக்

கானகம் உகந்த காளி, தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணும் அல்லள் ;
செற்றனள் போலும் ! செயிர்த்தனள் போலும் !
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்;
கணவனை இழந்தாள் கடையகத் தாளே;
கணவனை இழந்தாள் கடையகத் தாளே,' என,

கண்ணகியை அரசன் வரவழைத்து வினுதல்

'வருக மற்றவள்; தருக ஈங்,'கென
வாயில் வந்து கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி,
'நீர்வார் கண்ணை! எம்முன் வந்தோய் !
யாரை யோநீ? மடக்கொடி யோய்!' என,

கண்ணகி தன் வரலாற்றை அறைதல்

'தேரா மன்ன! செப்புவ துடையேன்:
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்,
வாயிற் கடைமணி நடுநா நடுங்க

ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத்
தான்தன்,
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே; அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி,

வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்ன! நின்னகர்ப் புகுந்திங்கு
என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி,
நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி;
கண்ணகி என்பது என்பெய ரே', என,

பாண்டியன் பதிலளித்தல்

'பெண் அணங்கே!
கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று;
வெள்வேற் கொற்றம் காண்' என, ஒள்ளிழை

கண்ணகி உண்மையினை எடுத்துரைத்தல்

'நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!
என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே,' என,

பாண்டியன் பதிலுரைத்தல்

'தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி;
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே;
தரு'கெனத் தந்து தான்முன் வைப்ப,

அரசன் உண்மை அறிதல்

கண்ணகி அணிமணிக் காற்சிலம்பு புடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே;

பாண்டியன் பெருங்கவலை அடைந்து உயிர் நீத்தல்

மணிகண்டு,
தாழ்ந்த குடையன், தளர்ந்தசெங் கோலன்,
'பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன்! யானே கள்வன்!
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதல் பிழைத்தது! கெடுகஎன் ஆயுள்!' என
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே;...

கோப்பெருந்தேவியும் உயிர் நீத்தல்

தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்' என்று
இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

—இளங்கோவடிகள்

அருஞ்சொற் பொருள்

வரி: 1. வாயிலோயே - வாயிற்காவலனே.

2. அறை போகிய - அற்றுப்போன. பொறி அறு - புண்ணியமற்ற

3. இறை முறை - அரச நீதி. பிழைத்தோன் - தவறினவன்.

4. இணை - இரண்டாகிய. இணைச்சிலம்பினுள் ஒன்று ஏந்திய கையள்- அரி - உள்ளிடுபரல்.

5. கடையகத்தாள் - வாயிலினிடத்து இருக்கின்றாள்.

6. தென்னம் பொருப்பு - பொதியில்மலை.

7. செழிய - பாண்டிய.

8. படரா - செல்லாத. பஞ்சவ - பாண்டிய.

9. அடர்த்து - மேற்பட்டு. குருதி - இரத்தம். துணி - துண்டம்.

10. பிடர்த்தலைப் பீடம் - பிடர்த்தலையாகிய பீடம்; பிடர்த்தலை என்றது மயிடாசுரன் தலையை; மடக்கொடியாகிய கொற்றவை (13) என்க.

11. தடக்கை - நீண்டகை.

12. அறுவர்க்கு இளைய நங்கை - சத்தமாதர்களுக்குள் இளையவள்; பிடாரி. இறைவனை - சிவபெருமானை.

13. அணங்கு - பத்திரகாளி. சூர் - அச்சம்.

14. தாருகன் - தாருகாசுரன்.

15. உரம் - மார்பு.

16. 17. இங்குச் சிறப்புவகையாற் கூறப்பட்ட பெயர்களெல்லாம் பொதுவாகக் காளியைக் குறிக்கும் என்ப.

17. செற்றனள் - முகக்கோட்டம் (விகாரம்) உடையவள்; செயிர்த்தனள் - மனத்தில் கோபம் உடையவள்.

18. பொன் தொழில் சிலம்பு - பொன்னாலானதும் தொழிற் சிறப்புள்ளதுமான சிலம்பு.

19. அவள் தருக - அவளை அழைத்து வருக.

20. வாயில் - வாசலில்; வாயிலோன் எனவுமாம்.

21. கோயில் - அரண்மனை. குறுகினள் - குறுகி. அணுகி; முற்றெச்சம். சென்றுழி - சென்றவிடத்து.

22. கண்ணை - கண்ணையுடையாய்.

23. யாரை - ஐ முன்னிலையை விளக்கியது.

24. தேரா - தெளியாத.

25. எள்ளறு - இகழ்தலில்லாத.

26. புள் - பறவை; புறு. புன்கண் - துன்பம். தீர்த்தோன் - சிபி. சிபிச்சக்கரவர்த்தி தன்னையடைந்த புறுவிற்காகத் தன் தசையை அரிந்து கொடுத்து அதன் துன்பத்தைத் தீர்த்தான் என்பது கதை.

27. வாயில் - அரண்மனைவாசல். மணி - ஆராய்ச்சிமணி. நடுங்க - ஒலிக்க.

28. கடைமணி - மணிக்கடை என மாற்றுக. மணிக்கடை - கண் மணியின் கடை. உகுநீர் - சிந்தியநீர்.

29. அரும்பெறற் புதல்வனை - பெறுதற்கரிய புதல்வனை. ஆழி - தேர்உருளை. மடித்தோன் - மனுநீதிச் சோழன்.

30. பெயர் - புகழ்.

31. ஏசா - நிந்தனையில்லாத.

32. மகனை, ஐ அசை.

36. துரப்ப - செலுத்த.

38. பகர்தல் - விற்றல்.

41. கோறல் - கொல்லுதல்.

42. வெள்வேற்கொற்றம் - அரசநீதி. ஒள் இழை - ஒளி பொருந்திய ஆபரணத்தையுடைய கண்ணகி; அன்மொழித்தொகை.

43. நற்றிறம் படரா - நன்னெறியில் செல்லாத.

44. மணி - மாணிக்கம்.

45. தேமொழி - தேன்போலும் இனிய மொழியினை யுடையாள்; உவமத்தொகையன்மொழி.

47. தருகென - கொண்டு வருக என.

48. மணி - மணியாகிய பரலையுடைய.

49. வாய்முதல் - வாயில்.

53. மன்பதை - குடிகள். தென்புலம் - பாண்டியநாடு.

54. என்முதல் - என்னைத்தொடங்கி.

56. குலைந்தனள் - குலைந்து; மனமலைந்து.

57. காட்டுவது - (கணவன்முறைசொல்லிப்) பிறரைக் காட்டுவது

'கணவனை......இல்'என்பது, தந்தை தாய் முதலியோரை இழந் தார்க்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டலாம், கணவனை இழந் தார்க்கு அவ்வாறு காட்டுதல் இயலாது என்னும் பொருளதாம்.

58. இணையடி - கண்ணகியின் இரண்டு பாதங்களை. மடமொழி- கோப்பெருந்தேவி; அன்மொழித் தொகை.

பயிற்சி வினாக்கள்

1. வாயிலோன் பாண்டியனிடம் கண்ணகியின் தோற்றத்தை எவ் வெவ்வாறு எடுத்துரைக்கின்றான்?
2. 'நீ யார்' என்ன பாண்டியனுக்கு கண்ணகி கூறிய வலாற்றைக் வரைக.
3. கண்ணகி தன் கணவன் கள்வனல்லன் என்பதை எவ்வாறு மெய்ப்பித்தாள்?
4. உண்மையுணர்ந்த பாண்டியன் யாது கூறி உயர்நீத்தான்?
5. கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில் - யார் கூற்று? சந்தர்ப் பம் தோன்ற விளக்குக.

2. கம்பராமாயணம்

கம்பராமாயணம் ; கம்பரது ராமாயணம். இராமாயணம் என்பது இராமனது வரலாற்றைக் கூறும் நூல் என்று பொருள்படும். இது, வடமொழியிலுள்ள வான்மீகி ராமாயணத்தின் வழி நூல்; இதிகாசமாகும். இதில் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்தக் காண்டம் என்னும் ஆறு பெரும் பிரிவுகளும், திரு அவதாரப்படலம் முதலாகப் பல சிறு பிரிவுகளும் உள்ளன.

கம்பர் : இவர், சோழ நாட்டில் திருவழுந்தூரில் ஆதித்தனுக்குப் புதல்வராய்த் தோன்றி, திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்பவள்ளலால் ஆதரிக்கப் பெற்றுக் கல்வியிற் பெரியராய் விளங்கியவர். கவிச்சக்கரவர்த்தி எனப் புகழ்பெற்றவர். இவரது பெயர், பிறப்பு முதலியவற்றை பற்றித் தெளிவாம் அறிதற்கில்லை. பலகதைகள் வழங்குகின்றன. இவரது காலம் கி. பி. 12-ம் நூற்றாண்டு என்பர்.

கையடைப் படலம்

தசரதன் கொலு மண்டபம்

நனைவரு கற்பக நாட்டு நன்னகர்
அனைவரும் அணைதர அயிர்க்கும் சிந்தையால்
நினையவும் அரியது விசும்பின் நீண்டதோர்
புனைமணி மண்டபம் பொலிய எய்தியே. 1

தூயமெல் அரியணைப் பொலிந்து தோன்றினன்
சேயிரு விசும்பிடைத் திரியும் சாரணர்
'நாயகன் இவன்கொல்'என் றயிர்த்து நாட்டமோர்
ஆயிரம் இல்லையென் றையம் நீங்கினர். 2

கோசிகன் தோற்றம்

மடங்கல்போல் மொய்ம்பினன் முன்னர், 'மன்னுயிர்
அடங்கலும் உலகும்வே றமைத்துத் தேவரோடு
இடங்கொள்நான் முகனையும் படைப்பன் ஈண்டெனத்
தொடங்கிய கோசிக முனிவன் தோன்றினன். 3

தசரதன் உபசாரம்

வந்துமுனி எய்துதலும் மார்பிலணி ஆரம்
அந்தரநி லத்திரவி அஞ்சஒளி விஞ்ச
கந்தமல ரிற்கடவுள் தன்வரவு காணும்
இந்திரன் எனக்கடி தெழுந்தடி பணிந்தான். 4.

பணிந்துமணி செற்றுபு குயிற்றியவிர் பைம்பொன்
அணிந்ததவி சிட்டினித ருத்தியொ டிருத்தி
இணைந்தகம லச்சரண ருச்சனைசெய் 'தின்றே
துணிந்ததெம்வி னைத்தொடர்' பெனத்தொழுது
சொல்லும். 5

தசரதன் முகமகன் கூறல்

'நிலம்செய்தவம் என்றுணரின் அன்றுகெடி யோய்! என்
நலம்செய்வினை உண்டெனினும் அன்றுநகர் நீயான்
வலஞ்செய்துவ ணங்கஎளி வந்தஇது முந்தெம்
குலஞ்செய்தவம்' என்றினிது கூறமுனி கூறும். 6

கோசிகன் முகமன் கூறல்

'என்னனைய முனிவரரும் இமையவரும்
இடையூறொன் றுடைய ராகில்
பன்னகமும் நகுவெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதும பீடத்
தன்னகரும் கற்பகநாட் டணிநகரும்
அணிமாட அயோத்தி என்னும்
பொன்னகரும் அல்லாது புகலுண்டோ?
இகல்கடந்த புலவு வேலோய்!' 7

இன்தளிர்க்கற் பகநறுந்தேன் இடைதுளிக்கும்
நிழலிருக்கை இழந்து போந்து
நின்றளிக்கும் தனிக்குடையின் நிழல்ஒதுங்கிக்
குறையிரந்து நிற்ப நோக்கிக்
குன்றளிக்கும் குருமணித்தோள் சம்பரனைக்
குலத்தோடும் தொலைத்து நீகொண்டு
அன்றளித்த அரசன்றே? புரந்தரனின்று
ஆள்கின்ற தரச!' என்றான். 8

தசரதன் விழுதல்

உரைசெய்யு மளவினவன் முகநோக்கி
உள்ளத்தி னொருவ ராலுங்
கரைசெய்ய வரியதொரு பேருவகைக்
கடல்பெருகக் கரங்கள் கூப்பி
அரைசெய்தி இருந்தபய னெய்தினன்மற்று
இனிச்செய்வ தருளு கென்று
முரைசெய்து கடைத்தலையான் முன்மொழியப்
பின்மொழியும் முனிவன் ஆங்கே. 9

கோசிகன் விருப்பம்

'தருவனத்துள் யானியற்றும் தகைவேள்விக்கு
இடையூருய்த் தவஞ்செய் வோரை
வெருவரச்சென் றடைகாம வெகுளியென
நிருதரிடை விலக்கா வண்ணம்
செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதி' என உயிர்இரக்கும்
கொடுங்கூற்றின் உளையச் சொன்னான். 10

தசரதன் துன்ப நிலை

எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையில் கனல்நுழைந்தால்
எனச்செவியில் புகுத லோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
ஆருயிர்நின் றூச லாடக்
கண்ணிலான் பெற்றிழந்தான் எனஉழந்தான்
கடுந்துயரம் கால வேலான். 11

தசரதன் விண்ணப்பம்

தொடையூற்றில் தேன்துளிக்கும் நறுந்தாரான்
ஒருவண்ணம் துயரம் நீங்கிப்
'படையூற்றம் இலன்சிறியன் அவர்பெரியோர்
பணிஇதுவேல் பனிநீர்க் கங்கை

புடையூற்றும் சடையானும் புரந்தரனும்
வெருண்டெழுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூருய் யான்காப்பன்
பெருவேள்விக் கெழுக ' என்ருன். 12.

கோசிகன் கோபம்

என்றனனென் றலுமுனிவோ டெழுந்தனன்மண்
படைத்தமுனி இறுதிக் காலம்
அன்றெனஆம் எனஇமையோர் அயிர்த்தனர் மேல்
வெயில்கரந்த தங்கும் இங்கும்
நின்றனவும் திரிந்தனமீ நிவந்தகொழுங்
கடைப்புருவம் நெற்றி முற்றச்
சென்றனவந் ததுநகையும் சிவந்தனகண்
இருண்டனபோய்த் திசைகள் எல்லாம். 13

வசிட்டன் கூற்று

கறுத்த மாமுனி கருத்தை உன்னி'நீ
பொறுத்தி' என்றவற் புகழ்ந்து 'நின்மகற்கு
உறுத்தல் ஆகலா உறுதி எய்துநாள்
மறுத்தி யோ ?' என வசிட்டன் கூறினன். 14

பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்
ஐய! நின்மகற் களவில் விஞ்சைவந்து
எய்து காலமின் றெதிர்ந்த தென்னவே. 15

இராமன் வருகை

குருவின் வாசகம் கொண்டு கொற்றவன்
' திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்றெ'ன
'வருக என்றனன்' என்ன லோடும்வந்து
அருகு சார்ந்தனன் அறிவின் உம்பரான். 16

கையடை

வந்த நம்பியைத் தம்பி தன்னொடு
முந்தை நான்மறை முனிக்கே காட்டி "நல்
தந்தை நீதனித் தாயும் நீஇவர்க்கு
எந்தை! தந்தனன் இயைந்த செய்கெ"ன்றான். 17

அருஞ்சொற் பொருள்

1. நனை - அரும்புகள். கற்பகநாடு - அமராவதிப்பட்டணம். விசும்பு - விண்ணுலகம் புனை - அலங்கரிக்கப்பட்ட.

2. அரியணை - சிங்காதனம். சாரணர் - தேவதூதர். நாயகன் - இந்திரன். நாட்டம் - கண்கள்.

3. மடங்கல் - சிங்கம். மொய்ம்பு - வலிமை. மொய்பினன் - தசரதன். கோசிகன் - விசுவாமித்திரன்.

4. ஆரம் - முத்து மாலை. அந்தரம் - ஆகாயம். இரவி - சூரியன். கந்தமலர் - தாமரை'

5. குயிற்றி - பதித்து. அவிர் - விளங்குகின்ற. அருத்தி - அன்பு தவிசு - ஆசனம்.

6. நெடியோய் - தவத்தாற்பெரியோய். நலம் செய்வினை - நல்வினை முந்து - முற்காலம். செய்வினை - வினைத்தொகை. நிலம் - இடவாகு பெயர்.

7. இகல்கடந்த - பகைவரை வென்ற. பல் நகம் - பலமலைகள். நகும் - சிரிக்கும். பதுமபீடத் தன்நகர் - சத்தியலோகம். புலவு - புலால் நாற்றம். புகல் - அடைக்கலம். நகுவெள்ளி - வினைத்தொகை.

8. குருமணி - சிறந்த மணி. சம்பரன்-ஓர் அசுரன். புரந்தரன் - இந்திரன்.

9. அரைசு - அரசு. முரைசு - முரசு: பேரிகை. இரண்டும் இடைப் போலி.

10. தருவனம் - மரங்களடர்ந்தகாடு. தகை -சிறப்பு. வெருவரல்- அஞ்சுதல் - செம்மல் - இராமன். கூற்று - யமன்.

11. எண்ணிலா - கணக்கற்ற. எண் + இலா. மருமம் - மார் பம். உள் + நிலாவியா - உண்ணிலாவிய. காலவேலான் - யமனை ஒத்த வேலாயுதத்தையுடைய தசரதன். கண்ணிலான் - பிறவிக்குருடன்.

12. பெருவேள்வி - பண்புத்தொகை.

13. மண்படைத்த முனி - விசுவாமித்திரன். கரந்தது - மறைந்தது. மீவந்த - மேல் எறினவாய. நகை - கோபச்சிரிப்பு.

14. கறுத்த - கோபங்கொண்ட. உறுத்தல் ஆகலா உறுதி - பிற ராலே அடைவித்தற்குக்கூடாத நன்மைகள்.

15. மொய்கொள் - பெருமை கொண்ட. வேலை - கடல். விஞ்சை- வித்தை. எதிர்ந்தது - நேர்ந்துள்ளது. எய்துகாலம்: வினைத்தொகை.

16. குரு - வசிட்டர். திருவின்கேள்வன் - இராமனை.

17. நம்பி - ஆடவரில் சிறந்தோன்: இராமன். தம்பி இலக்குமணன். முந்தை - பழமையான. எந்தை - எம்தந்தை: மருஉப் பெயர்..

பயிற்சி வினாக்கள்

1. தசரதனது சபா மண்டபம் எவ்வாறு புனைந்துரைக்கப் பட்டுள்ளது?

2. தசரதன் அரியணையிலிருந்த தன்மை எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?

3. தசரதன் கோசிக முனிவன் அடிபணிந்த தன்மை எவ்வாறு உவமித்துக் கூறப்பட்டுள்ளது?

4. தசரதன் கோசிக முனிவனுக்குச் செய்த உபசாரத்தையும் கூறிய முகமன் உரையையும் வரைக.

5. கோசிக முனிவன் தசரதனைப் பாராட்டிக் கூறிய மொழிகள் யாவை?

6. 'இனிச் செய்வதருள்க' என்று வேண்டிய தசரதனுக்குக் கோசிகன் கூறியது யாது?

7. கோசி முனிவன் இராமனைத் தருமாறு கேட்டவுடன் தசரதன் அடைந்த துன்பம் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

8. தசரதன் தானே வந்து வேள்வியைக் காப்பதாகக் கூறியதற்குக் காரணங்கள் யாவை?

9. கோசிக முனிவன் கொண்ட பெருங் கோபத்தையும் அதனால் உண்டான குழப்பத்தையும் தெரிவிக்க.

10. வசிட்ட முனிவர் இராமனைக் கோசிகருடன் அனுப்புமாறு தசரதனுக்குக் கூறிய உறுதி மொழிகளை வரைக.

11. தசரதன் இராமக்குவரைக் கோசிக முனிவரிடம் கையடை செய்த தன்மையை வரைக.

12. பின்வரும் உவமைகளை உபமேயங்களோடு பொருத்திக் காட்டுக:

    i. தவஞ்செய் வோர்கள் வெருவரச் சென்றடைகாம வெகுளி, யென ii. மருமத்தில் எறிவேல் பாய்ந்த புண்ணிலாம் பெரும் புழையில் கனல் நுழைந்தாலென, iii. கண்ணிலான் பெற்றிழந்தானென. iv. பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய் மொய்கொள் வேலைவாய் முடுகுமாறுபோல,

13. மண் படைத்த முனி - வரலாறு யாது?

14. இடஞ் சுட்டுக: i. இன்றே துணிந்த தென்வினைத் தொடர்பு ii. அரசெய்தி யிருந்த பயனெய்தினன்.

3. வில்லிபுத்தூரார் பாரதம்

வில்லிபுத்தூரார் பாரதம் : வில்லிபுத்தூர் ஆழ்வாரால் இயற்றப்பட்ட பாரதம். பரதனது வமிசத்தில் பிறந்தவரது வரலாற்றைக் கூறும் நூல் பாரதமாகும். இதற்கு முதல் நூல் வடமொழியில் வியாசரால் இயற்றப் பட்ட மகாபாரதமாகும். வில்லிபுத்தூரார் பாரதம் ஆதிபருவம் முதல் சௌப்திக பருவம் வரையில் பத்து பருவங்களையும், 4351 பாடல்களையும் உடையது, இப்பாடப் பகுதி கன்ன பருவத்தில் பதினேழாம் போர்ச் சருக்கத்தில் உள்ளது.

வில்லிபுத்தூரார் : இவர், திருமுனைப்பாடி நாட்டிலுள்ள சனியூரில் வைணவ அந்தண குலத்தில் வீரராகவாச்சாரியாருக்குப் புதல்வராகப் பிறந்தவர். இவரை ஆதரித்தவன் வக்கபாகை வரபதியாட்கொண்டான் என்னும் சிற்றரசன். இவரது காலம் ஏறக்குறைய 500 ஆண்டுகட்கு முன்னர் என்பவர்.

கன்ன பருவம்

கண்ணன் கன்னனிடம் வருதல்

அத்தவெற் பிரண்டு விற்கிடை யெனப்போய்
ஆதவன் சாய்தல் கண்டருளி
முத்தருக் கெல்லா மூலமாய் வேத
முதற்கொழுந் தாகிய முதல்வன்
சித்திரச் சிலைக்கை விசயனைச் "செருநீ
யொழி"கெனத் தேர்மிசை நிறுத்தி
மெய்த்தவப் படிவ வேதியனாகி
வெயிலவன் புதல்வனை யடைந்தான். 1

இயைந்ததொன்று அளிக்க வேண்டுதல்

"தாண்டிய தரங்கக் கருங்கட லுடுத்த
தரணியிற் றளர்ந்தவர் தமக்கு
வேண்டிய தருதி நீயெனக் கேட்டேன் ;
மேருவி னிடைத்தவம் பூண்டேன்
ஈண்டிய வறுமைப் பெருந்துய ருழந்தேன்
இயைந்ததொன் றிக்கணத் தளிப்பாய்
தூண்டிய கவனத் துரகதத் தடந்தேர்ச்
சுடர்தரத் தோன்றிய தோன்றல்!" 2

கன்னன்பாற் கண்ணன் விரும்பிய பொருள்

என்றுகொண் டந்த அந்தணன் உரைப்ப
இருசெவிக் கமுதெனக் கேட்டு
வென்றிகொள் விசயன் விசயவெங் கணையான்
மெய்தளர்ந் திரதமேல் விழுவோன்
நன்றென நகைத்துத் "தரத்தகு பொருணீ
நவில்"கென நான்மறை யவனும்
"ஒன்றிய படிநின் புண்ணியம் அனைத்தும்
உதவு"கென் றலுமுள மகிழ்ந்தான். 3

கன்னன் கூறுதல்

"ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
யகத்ததோ புறத்ததோ வறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்
ஓவிலா தியான்செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன் கொள்கநீ யுனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகரலன் என்றூற்
புண்ணியம் இதனினும் பெரிதோ!" 4

கன்னன் தன் இதய இரத்தங்கொண்டு தானம் அளித்தல்

என்னமுன் மொழிந்து கரங்குவித் திறைஞ்ச
இறைஞ்சலர்க் கெழிலியே றனையான்
கன்னனை யுவகைக் கருத்தினல் நோக்கி,
கைப்புன லுடன்றரு" கென்ன
அன்னவன் இதயத் தம்பின்வாய் அம்பால்
அளித்தலும் அங்கையால் ஏற்றான்
முன்னமோ ரவுணன் செங்கைநீர் ஏற்று
மூவுல கமுமுடன் கவர்ந்தோன். 5

வரங்கேட்குமாறு கண்ணன் கன்னனுக்குக் கூறுதலும் கன்னன் கேட்டலும்

மல்லலந் தொடையல் நிருபனை முனிவன்
மகிழ்ந்து "நீ வேண்டிய வரங்கள்
சொல்லுக வுனக்குத் தருதும்"என் றுரைப்பச்
சூரன்மா மதலையுஞ் சொல்வான்
"அல்லல்வெவ் வினையால் இன்னமுற் பவமுண்
டாயினு மேழெழு பிறப்பும்
இல்லையென் றிரப்போர்க் கில்லையென் றுரையா
இதயம்நீ யளித்தருள்" என்றான். 6

கண்ணன் வரம் அளித்தல்

மைத்துனன் உரைத்த வாய்மைகேட் டையன்
மனமல ருகந்துகந் தவனைக்
கைத்தல மலரான் மார்புறத் தழுவிக்
கண்மலர்க் கருணைநீ ராட்டி
"எத்தனை பிறவி யெடுக்கினும் அவற்றுள்
ஈகையுஞ் செல்வமு மெய்தி
முந்தியும் பெறுதி முடிவில்"என் றுரைத்தான்
மூவரும் ஒருவனும் மூர்த்தி. 7

கண்ணன் அளித்த தரிசனம்

போற்றிய கன்னன் கண்டுகண் களிப்பப்
புணரிமொண் டெழுந்தகார் முகிலை
மாற்றிய வடிவும் பஞ்சவா யுதமும்
வயங்குகைத் தலங்களு மாகிக்
கூற்றுறழ் கராவின் வாயினின் றழைத்த
குஞ்சர ராசன்முன் அன்று
தோற்றிய படியே தோற்றினன் முடிவுந்
தோற்றமு மிலாதபைந் துளவோன் 8

கன்னன் அடைந்த மகிழ்ச்சி

அமரரா னவரும் அமரயோ னிகளும்
அமரருக் கதிபனு னவனும்
கமலநான் முகனும் முனிவருங் கண்டு
கனகநாண் மலர்கொடு பணிந்தார்

"சமரமா முனையிற் றனஞ்செயன் கணையாற்
சாய்ந்துயிர் விடவும் செங்கண்
அமலநா ரணனைக் காணவும் பெற்றேன்"
என்றுதன் னகமிக மகிழ்ந்தான். 9

கன்னன் கூறுதல்

"தருமன்மகன் முதலான அரிய காதல்
தம்பியரோ டமர்மலைந்து தறுகணுண்மைச்
செருவிலென துயிரனைய தோழற் காகச்
செஞ்சோற்றுக் கடன்கழித்தேன் தேவர்கோவுக்கு
உரைபெறுநற் கவசகுண் டலமும் ஈந்தேன்
உற்றபெரு நல்வினைப்பே றுனக்கே தந்தேன்
மருதிடைமுன் தவழ்ந்தருளுஞ் செங்கண் மாலே!
மாதவத்தால் ஒருதமியன் வாய்ந்த வாறே. 10

—வில்லிபுத்தூராழ்வார்

அருஞ்சொற் பொருள்

1. அத்தவெற்பு - சூரியன் மறையும் மேற்கு மலை. வில்கிடை - வில் கிடக்கு மளவு தூரம். ஆதவன் - சூரியன். முத்தர் - முத்தி யுலகத்தை அடைந்தவர். சித்திரம் - அழகிய. சிலை - வில். செரு - போர். படிவம் - தவக்கோலம். வெயிலவன் புதல்வன் - சூரியன் மகனான கன்னன்.

2. தாண்டிய - மோதுகிற. தரங்கம் - அலை. ஈண்டிய - மிக்க. உழந்தேன் - அனுபவித்தேன். இயைந்தது ஒன்று - (உன்னால்) கொடுக்கக் கூடியதொரு பொருளை. கவனம் - நடை. துரகதம் - குதிரைகள் சுடர் - சூரியன். தோன்றல் - கன்னனே!

3. விசய வெங்கணை - வெற்றிபொருந்திய கொடிய அம்புகளால் நவில்க - சொல்லுக. ஒன்றிய - (இதுவரையில்) சேர்ந்திருக்கும்.

4. நயக்கும் - விரும்பிக்கொடுக்கும். பக்குவம் - சமயம். ஒவு இலாது - ஒழிதல் இல்லாமல்; மிச்சமில்லாதபடி. இதனினும் - உனக்குக் கொடுக்கும் இச்செயலினும்.

5. இறைஞ்ச - வணங்க. இறைஞ்சலர்க்கு - தன்னை வணங்காத பகைவர்களுக்கு. எழிலி ஏறு அனையான் - மேகத்தில் தோன்றும் இடியை ஒப்பவனான கண்ணன். கைப்புனல் - கையினால் தாரை வார்க்கும் நீர். இதயத்து அம்பின்வாய் - (தன்) நெஞ்சில் தைத்த அம்பின் வழியே வெளி வரும். அம்பால் - நீரினால்; செந்நீரினால் - இரத்தத்தால். முன் - முன்பு (வாமனாவதாரத்தில்). அவுணன்-மாவலிச் சக்கரவர்த்தி.

6. மல்லல் அம்தொடையல் - வளப்பத்தையுடைய அழகிய மாலையைச் (சூடிய). நிருபன் - அரசன்; கன்னன். சூரன் மாமதலை - சூரியனது சிறந்த மகனான கன்னன். அல்லல் - பிறவித் துன்பங்களுக்குக் காரணமான, உற்பவம் - பிறப்பு.

7. மைத்துனன் - கன்னன். குந்திதேவி கண்ணனுக்கு அத்தையாதலின் அவள் மகனான கன்னன் அவனுக்கு மைத்துனனாவான். உகந்து-மிகமகிழ்ந்து. கைத்தலமலரால் - மலர்போன்ற கையால். மூவர்-அயன், அரி, அரன். ஒருவனும் மூர்த்தி - ஒருவனான வடிவுடையவன்.(கண்ணன்)

8. புணரி - கடல்நீரை. கார்முகில் - கரியமேகத்தை, மாற்றிய - (கருநிறத்தில் தனக்கு ஒப்பாகாதென்று) நீக்கிய. பஞ்சாயுதம் - ஐந்து படைகள்; சங்கு, சக்கரம், கதை, வாள், வில். வயங்கு - விளங்கும். கூற்று உறழ் கராவின் - எமனை ஒத்த முதலையின். குஞ்சாராசன் - கஜேந்திரன். முடிவும் தோற்றமும் இலாத - இறப்பும் பிறப்பும் அற்ற. பைந்துளவோன் - பசுமையான துளசிமாலை அணிந்த கண்ணன்.

9. அமரயோனிகளும் - ஏனைத் தேவசாதிகளும். அமரருக்கு அதிபனவன் - இந்திரன். கனகம் - பொன்மயமான. நாள்மலர் - அன்றுபூத்த மலர். மா சமர முனையில் - பெரிய போர்க்களத்தில், தனஞ்சயன் - அருச்சுனன். அமலன் - குற்றமற்றவன்.

10. தருமன் மகன் - தருமபுத்திரன். அமர்மலைந்து - போர்செய்து தறுகண் ஆண்மை செருவில் - அஞ்சாமையோடு கூடிய வீரப்போரில். தோழன் - துரியோதனன், தேவர்கோ - தேவேந்திரன். உரைபெறு - புகழ்பெற்ற. முன் முன்பு (கிருஷ்ணவதாரத்தில்) மருது இடை - இரட்டை மருத மரங்களினிடையிலே. வாழ்ந்த ஆறு ஏ - பெருவாழ்வை அடைந்த விதம் என்னே!

பயிற்சி வினாக்கள்

1. முத்தருக் கெல்லாம் மூலமாய் வேத முதற் கொழுந்தாகிய முதல்வன் யார்? அவன் போர்க் களத்தில் கன்னனை அடைந்தது ஏன்?
2. கண்ணன் கன்னனிடம் சென்று என்ன கூறினான் என்ன வேண்டினான்?
3. புண்ணியம் அனைத்தும் உதவுக என்ற கண்ணனுக்குக் கன்னன் கூறியது யாது?
4. முன்னமோர் அவுணன் செங்கை நீரேற்று மூவுலகமுமுடன் கவர்ந்தோன் — கதைக் குறிப்பு வரைக.
5. கன்னன் கண்ணனிடம் வேண்டிய வரம் யாது? கண்ணன் அளித்த வரம் யாது?
6. கண்ணன் கன்னனுக்கு அளித்த காட்சியை விவரிக்க,
7. திருமாலின் திருவுருவைக்கண்ட கன்னன் அடைந்த மகிழ்ச்சியை விவரிக்க,
8. கன்னன் மாதவத்தால் தான் வாழ்ந்தவாற்றை எங்ஙனம் தெரிவிக்கின்றான்?

4. தேம்பாவணி

தேம்பாவணி : தேம்பா+அணி : வாடாத மலர் மாலை போன்ற பாமாலையாகிய நூல். இந்நூல் ஏசுநாதரின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரின் வரலாற்றைக் கூறுவது. இது முப்பத்தாறு படலங்களை யுடையது. இப்பாடப் பகுதி வளன்சனித்த படலம் என்னும் பகுதியில் உள்ளது.

வீரமாமுனிவர் : இவர் இத்தாலி நாட்டினர். கான்ஸ்டென்டின் ஜோஸப் பெஸ்கி என்பது இவரது இயற்பெயர். தமிழ் நாட்டில் கிறித்துவ மதத்தைப் பரப்ப வந்த இவர், தமிழ் நூல்களை முற்றக் கற்றுப் பல தமிழ் நூல்களைச் செய்துள்ளார். இவரது காலம் கி. பி. 1680 - 1742.

தாவீதும் கோலியாத்தும்

தாவீதன் சிறப்பு

அருளொடு வீங்கிய வகத்தி னன்றுளி
மருளொடு வீங்கிய மழைக்கை யான்மலர்ச்
சுருளொடு வீங்கிய தொடையல் மார்பினன்
பொருளொடு வீங்கிய பொறைப்பு யத்தினன். 1

பகைசெய்வார்க் கிடியெனப் படிந்து போற்றிய
தகைசெய்வார்க் கமுதென நாமத் தன்மையான்
நகைசெய்வார்க் கிளவலாய் நடத்தும் வேலிலான்
மிகைசெய்வான் ஆண்மையை விளம்ப னன்றரோ. 2

சவூலாண்ட காலத்தில் பிலித்தையர் எதிர்த்தல்.

மறைவ ழங்கிய வள்ங்கோ னாட்டிடை சவூலாண்ட
முறைவ ழங்கிய கால்மறை பகைத்தனர் முகினின்
றுறைவ ழங்கிய வொப்பெனச் சரமழை வழங்கிப்
பொறைவ ழங்கிய பிலித்தையர் போர்செய
வெதிர்த்தார். 3

கோலியாத்து என்னும் இராக்கதனும் எதிர்த்தல்

வேலி யாற்கது விடாத்திரு நகரெலாம் நடுங்க
மாலி யாற்கதிர் வகுத்தவா ளேந்தினர் நாப்பண்
ஆலி யாற்கரிந் தகல்முகி லுருக்கொடு வேய்ந்த
கோலி யாற்றெனுங் கொடியதோ ரிராக்கத னெதிர்த்
தான். 4

கோலியாத்து போர்க்குக் கூவி யழைத்தல்

கூர்த்த போர் செயக் கூடினர்க் கொருவன்வந் தெய்திச்
சீர்த்த நானவன் சிறந்தபோர் தனித்தனித் தாக்கத்
தோர்த்த பாங்கினர் தொழும்பரென் றுருகுவ ரென்று
வார்த்த வோகையா னகைத்திகழ் வறைந்தறைந் தழைப்
பான். 5

சவூல் கூற்று

தாங்கு வாரிலாச் சாற்றிய வுரைகள்கேட் டெவரும்
நீங்கு வாரென நிருவனு மயருதன் னெஞ்சிற்
கேங்கு வானெவ னெதிர்ந்தவவ் வரக்கனை வென்றால்
ஆங்கு நானவற் கென்மக ளளிக்குவே னென்பான். 6

தாவீதன் அஞ்சினோர் சொல்லைக் கேட்டல்

இன்ன வாய்ப்பக றுற்பது மிரிந்தபின் னண்ணர்
முன்னர் மூவரே முரண்செயப் போயின ரவரைத்
துன்ன வாசையாற் றுடர்ந்திள தாவீத னெய்தி
யன்ன யாவையு மஞ்சின ரறைதலுங் கேட்டான். 7

தாவீதன் கடவுளையும் இகழும் கயவன் யார் எனல்

கேட்ட வாசகங் கிளர்திற னெஞ்சிடத் தெரியை
யீட்ட லாமென வெழுந்துள கினைந்தவை யாக்கிக்
காட்ட வாய்மையிற் கடந்தவல் கடவுளை நகைப்ப
வேட்ட லால்விளி விழுங்கிய கயவனு ரென்றான். 8

அரக்கனை வெல்வேன் எனல்

" கைவ யத்தினுற் கருத்திடத் துடலினுங் கோங்கும்
பொய்வ யத்தினன் புகைந்தசொற் கஞ்சுவ தென்னே?
மெய்வ யத்தினல் விழைசெய மாவதோ? கடவுள்
செய்வ யத்தினுற் சிறுவனுன் வெல்லுவேன் " என்றான்.

சவூல் தாவீதனை வினவல்

என்ற தண்ணல்கேட் டிவன்றனைக் கொணர்மினென் றிசைப்பச்
சென்ற வன்னகற் சேடனை நோக்கலும் " நீயோ
பொன்ற வுன்னினாய் ! பொருப்பினைப் பெயர்த்தெறிந் துவமை
வென்ற திண்மையான் வெகுளிமுன் னீயெவன் " என்றான். 10

தாவீதன் அரக்கனை வெல்லமுடியுமெனல்

"ஏந்த லீரடி யிறைஞ்சிய விளவலு மறைவான்
காய்ந்த தோற்பகை கடுத்ததன் பவஞ்செயின் மீட்டு
வேய்ந்த தோர்படை வேண்டுமோ கடவுளைப் பகைத்து
வாய்ந்த வாண்மையை மறுத்தனை யெவன்வெல்லா னையா!"

தாவீதன் கவணொடு செல்லலும் ஆரவாரமும்

தெரிந்த வாய்ந்தவைஞ் சிலையொடு கவணெடுத் தெவரும்
இரிந்த பாலனை நோக்கியுள் ளதிசயத் திரங்க
விரிந்த வாசையால் வேதிய ராசியை க்கூறப்
பிரிந்த காலொலி பெருகவாங் கனைவரு மார்த்தார். 12

கவண்கல் தாக்க, அரக்கன் வீழ்தல்

கல்லை யேற்றலுங் கவணினைச் சுழற்றலு மக்கல்
ஒல்லை யோட்டலு மொருவருங் காண்கில ரிடிக்குஞ்
செல்லை யொத்தன சிலைநுதற் பாய்தலு மன்னான்
எல்லை பாய்ந்திரு ளிரிந்தென வீழ்தலுங் கண்டார். 13

அரக்கன் தலையை தாவீதன் கொய்தல்

கடையு கத்தினிற் கருமுகி லுருமொடு விழும்போற்
படைமு கத்தினிற் பார்பதைத் தஞ்சவீழ்ந் தனன்றன்
புடைய கத்தினிற் புணர்ந்தவா ளுருவியென் றெய்வ
முடையு ரத்தினை யுணர்மினென் றிருஞ்சிரங் கொய்தான். 14

தாவீதன் அரசனுதல்

கொய்தவாண் முடிதிரண்ட குப்பைக ளேறி வெய்யில்
செய்தவாண் முடியைச் சூடிச் சிறந்தவா சனத்திலோங்
[கிப்
பெய்தவா ளெளியோ டாய்ந்த பெருந்தயை பிலிற்றுஞ்
[செங்கோல்
எய்தவா னிறையோ னுண்மை எய்தியே அரச னுனன்.

—வீரமாமுனிவர்

அருஞ்சொற் பொருள்

1; வீங்கிய - நிறைந்த. துளி மருளொடு - நீர்த்துளியின் மிகுதியால், மழை கையான் - மேகம்போன்ற கையையுடையவன், தொடையல் - (வெற்றி) மாலை, பொருளொடு - பொன்னுல், பொறை - மலையை ஒத்த.

2. படிந்துபோற்றிய - வணங்கித் துதித்த, நாமம் தன்மையான் - அச்சத்தை - விளைத்தலோடு இனிய தன்மையும் உடையவனுகி, நகை செய்வார்க்கு - (தன்னை) ஏளனஞ் செய்யும் பகைவர்க்கு (கோலியாற்றுக்கு). இளவல் ஆய் - சிறுவனுயிருந்தே, நடத்தும் - (பகைவர் உடலில்) செலுத்துகின்ற, மிகை செய்வான் - வேதனையைச் செய்பவனது.

3. மறை - சத்தியவேதம்; நாட்டிடை - (சூதேய) நாட்டில், உறை வழங்கிய – மழை பெய்வதற்கு. பொறை வழங்கிய - மலைகளில் வாழ்ந்த, சத்திய வேதத்தை யனுசரித்துச் சூதேய நாட்டை சவுலாண்டபோது வேதத்திற் பகைகொண்டு மழைபோல் அம்புகளை விடுபவர்களாகி மலைகளில் சஞ்சரிப்பவரான பிலித்தையர் போர் செய்யுமாறு எதிர்த்து வந்தனர் என்பது இச்செய்யுளின் திரண்ட பொருள். சூதேய நாடு - Judaes. சவுல் – King Saul, பிலித்தையர் - Philistines.

4. கதுவிடா - அழியாத, வேலியாலுல் - மதிளினுல், மாலி - சூரியன், நாப்பண் - நடுவில், ஆலி - நீர், வேய்ந்த - தோன்றிய.

5. கூர்த்த - மிகுந்த, சீர்த்த - சிறப்புற்ற, தோர்த்த - தோற்ற. தொழும்பர் - அடியவர், ஒகையான் - மகிழ்ச்சியோடு, (தோர்த்த என்பது தோற்ற என்பதன் மரூஉ) அறைந்து அறைந்து - அடுக்குத் தொடர் பன்மை குறித்தது.

6. தாங்குவார் - எதிர்ப்பவர், இலா - இல்லாமை தோன்ற, நிருபன் - சவுலரசன், அயரு - தளர்கின்ற.

7. இரிந்தபின் - கழிந்த பின்பு, அண்ணர்மூவர் - மூன்று அண்ணன்மார்கள். முரண்செய - போர் செய்யும்படி, துன்ன - கிட்டுவதற்கு. ஈசாய் என்பவன் தாவீதனுக்குத் தகப்பன், ஈசாய்க்கு எட்டுப் பிள்ளைகள் இருந்தனர். அவருள் முதல் மூன்று பிள்ளைகளான எலியப், அபினதாப், ஷம்மா என்போர் சவுலுக்குத் துணையாய்ப் படையிற் சேர்ந்து போர் புரியச் சென்றிருந்தனர். எட்டாவது புதல்வன் தாவீதன்.

8. கிளர் - கொந்தளிக்கின்ற, எரியை - கோபத்தீயை, வாய்மையில் கடந்த- சொல்லுக்கடங்காத. வேட்டலால் - விரும்பியதனால், விளி விழுங்கிய - சாவினால் விழுங்கப்பட்ட (மரணத்துக்கு ஆளாகப்போகிற), கயவன் - மூடன்.

9. கை வயத்தினால் - தனது கை வல்லமையால். ஊங்கு - மிகுதியும். பொய் வயத்தினன் - பொய்யான வல்லமையையுடையவனை கோலியாத்து. புகைந்த - சினந்து கூறிய. என்னோ - என்ன காரணம்? மெய் வயத்தினால் - உடல் வல்லமையொன்றினால். விழை - விரும்புகின்ற. வயம் - வெற்றி.

10. அண்ணல் - (பெருமையுள்ளவனான) சவூல். பொன்ற - நீயே உனக்கு அழிவைத் தேடிக்கொள்ள. திண்மையான் - வலிமையுடையவனை கோலியாத்து. எவன் - எம்மாத்திரம்?

11. ஏந்தல் - சவூலரசன். பவம் - பாவம். ஓர் பகை - ஒப்பற்ற பகையின் செயலை. மறுத்தனை - மறுத்தவனை அந்தக் கோலியாத்தை.

12. வாய்ந்த - தக்க, ஐஞ்சிலை - ஐந்து கற்கள். கவண் - கவண் என்னும் கல் சுழற்றும் கருவி.

13. ஒல்லை ஒட்டலும் - வேகமாகச் செலுத்துதலையும். இடிக்கும் செல் - இடிக்கின்ற மேகம். எல்லை பாய்ந்து - சூரியன் பாய்தலால்.

14. உரும் - இடி. படைமுகம் - சேனைகள் நிற்கும் போர்க்களம். புடையகத்தினில் - இடப்புறத்தில். இருஞ்சிரம் - பெரிய தலை.

15. வெய்யில் செய்த - ஒளியைச் செய்த. பிலிற்றும் - ஊற்றுகின்ற.

பயிற்சி வினாக்கள்

1. தாவீதன் இயல்பை விவரிக்க.
2. கோலியாத்தின் தோற்றத்தையும் அவன் சவூல் மன்னனை எதிர்த்துக் கூறிய மொழிகளையும் வரைக.
3. கோலியாத்தை யான் வெல்வேன் என்று தாவீதன் கூறக் காரணமென்ன?
4. 'நீயோ பொன்ற உன்னினாய்' என்ற சவூலுக்குத் தாவீதன் கூறிய விடை யாது?
5. தாவீதன் கோலியாத்தை வெல்லக் கொண்டு சென்ற படை யாது?
6. தாவீதன் கோலியாத்தை வீழ்த்திய தன்மையை விவரிக்க.
7. கடையுகத்தினில் கருமுகில் உருமொடு விழும் போல் — இவ்வுவமையை விளக்கி உவமேயத்தோடு பொருத்துக.

IV. சிறு நூல்கள்

1. நால்வர் நான்மணி மாலை

நால்வர் நான்மணி மாலை : சைவ சமய குரவர்களாகிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர் என்னும் நால்வரையும் பற்றி முறையே வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்னும் நால்வகைச் செய்யுட்களும் அந்தாதித் தொடையாக வரப் பாடப் பெற்ற நாற்பது பாடல்களைக் கொண்ட நூல். இந்நூல் 'பெரிய புராண சாரம்' என வழங்கும்.

சிவப்பிரகாச சுவாமிகள் : இவர் காஞ்சியில் குமாரசாமிப் பண்டாரம் என்பவருக்குப் புதல்வராய்த் தோன்றியவர். வீர சைவ மதத்தினர். இவரது ஆசிரியர் வெள்ளியம்பலவாணத் தம்பிரான். இவரை ஆதரித்தவர் துறைமங்கலம் அண்ணாமலை ரெட்டியார். இவர் நன்னெறி முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார். இவர் காலம் 17-ஆம் நூற்றாண்டு என்பர்.

வெண்பா-திருஞானசம்பந்தர்

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு—நாவான்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் றண்டை
வெறித்தண் கமலமே **வீடு.** 1

கட்டளைக் கலித்துறை-திருநாவுக்கரசர்

வீட்டி*ற்கு வாயி லெனுந்தொடை சாத்துசொல் வேந்த*
வாட்டிற்கு வல்ல வொருவற்கு ஞான வமுதுதவி [பொது
நாட்டிற் கிலாத குடர்நோய் நினக்குமுன் னல்கினுமென்
பாட்டிற்கு நீயு மவனுமொப் பீரெப் **படியி***னுமே,* 2

ஆசிரிய விருத்தம்-திருநாவலூரர்

படியி*லா நின்பாட்டி லாரூர*
னனிவிருப்பன் பரம னென்ப
தடியனே னறிந்தனன்வான் றொழுமீச
னினைத்தடுத்தாட் கொண்டு மன்றித்

தொடியுலா மென்கைமட மாதர்பா
னினக்காகத் தூது சென்று
மிடியிலா மனைகடொறு மிரந்திட்டு
*முழன்றமையால் **விளங்கு** மாறே* 3

ஆசிரியப்பா–திருவாதவூரர்

***விளங்கி**ழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்*
காரண னுரையெனு மாரண மொழியோ
வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணன்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே. 4

அருஞ்சொற் பொருள்

1. மணி நீர் - பளிங்குபோலத் தெளிந்த நீர். பொய்கைக் கரை - சீர்காழியில் உள்ள பிரம தீர்த்தக் கரை. ஞானப்பால் - உமையம்மை சிவ ஞானத்தோடு குழைத்து ஊட்டிய பால். பிரான் - திருஞான சம்பந்தர். வெறி - நறுமணம். கமலம் - செந்தாமரை போன்ற திருவடிகள்.

2. வாயில் - வழி. தொடை - பாமாலை. சொல் வேந்தர் - திருநாவுக்கரசர். பொது - சபை. ஆட்டிற்கு வல்லன் - ஆடல் செய்ய வல்ல சிவ பெருமான். ஒருவன் – திருஞான சம்பந்தன். நாட்டிற்கு - உலகில். குடர் நோய் - சூலை நோய். எப்படியினும் - எல்லா வகையானும்.

3. படி - ஒப்பு. ஆரூரர் - நம்பியாரூரர் என்னும் சுந்தர மூர்த்திகள். மாதர் - பரவை நாச்சியார். மிடி - வறுமை. இரந்து இட்டும்-யாசித்துக் கொண்டு வந்து உணவளித்தும். உழலுதல் - வருந்துதல்.

4. விளங்கிழை - உமாதேவியார். பகிர்ந்த - பங்கிட்டுக் கொண்ட. உரை எனும் ஆரண மொழியோ - திருவாக்கு என்று சொல்லப்படுகின்ற வேத வாக்கோ. ஆதி - முதல்வனாகிய சிவபெருமான். வாதவூரண்ணல் - மாணிக்கவாசகர். நெக்கு - குழைந்து. தொடு மணல் கேணியில்-தோண்டுகின்ற மணற்கேணி நீர் சுரக்குமாறு போல. மன்பதை - மக்கட் கூட்டம். மற்றையர் - அன்பராகாதார்.

2. தமிழ் விடு தூது

தமிழ் விடு தூது : தமிழைத் தூதாக விடுத்ததைக் கூறும் நூல். மதுரை சோமசுந்தரக் கடவுளிடத்துக் காதல் கொண்ட ஒரு தலைவி தமிழை அக்கடவுளிடத்துத் தூது விடுத்ததாக இந்நூல் அமைந்துள்ளது. இது இருநூற்று அறுபத்தெட்டு கண்ணிகளாலாகியது. இதனை இயற்றிய ஆசிரியர் இன்னார் என்பது தெரியவில்லை.

மண்ணிற் புகழுருவாய் வாழ்வதற்கும் வாழுநர் [யுனைக்
விண்ணிற்போய்த் தேவுருவாய் மேவுதற்கும்—எண்ணி 1

கொண்டுபுகழ் கொண்டவர்க்கே கூடுமுனைக் கூடாத
தொண்டருக்குத் தென்பாலே தோன்றுமால்—
[தண்டமிழே 2

ஈங்குனது சங்கத்தா லீச ருயர்ந்தாரோ ?
ஓங்குமவ ரானீ யுயர்ந்தாயோ ?—பூங்கமல 3

வீடாளும் வாணியங்கை மேலே யிருந்தாயோ ?
ஏடாக உன்மே லிருந்தாளோ ?—ஆடரவத் 4

தாழ்பாய லாளரைநீ தானே தொடர்ந்தாயோ ?
சூழ்பாயோ டுன்னைத் தொடர்ந்தாரோ?-வாழ்வேயென் 5

றோதி முனிகேட்க உனைமுருகர் சொன்னாரோ ?
சோதி யவரைநீ சொற்றனையோ ?—பேதியா 6

நேசருனக் கேபொருளாய் நின்றாரோ ? நீண்மதுரை
வாசருக்கு நீபொருளாய் வந்தாயோ ?—பாசமுறும் 7

என்செய்தி நீகண் டிரங்குவது நீதியல்லால்
உன்செய்தி நானோ உரைசெய்வேன் ?-இன்சொல்லால் 8

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தகவென்ற—சொற்குள்ளே 9

எல்லார்க்கும் புத்தி யியம்பிக் கரையேற்ற
வல்லா யுனக்குரைக்க வல்லேனோ ?—சொல்லியவுன் 10

ஈரடிக்குள் ளேயுலக மெல்லா மடங்குமெனின்
நேரடிக்கு வேறே நிலனுண்டோ ? 11

அருஞ்சொற் பொருள்

1, 2 : வாழுநர் - (புகழுருவினராய்) வாழ்பவர். தே உரு ஆய் மேவுதற்கும் - தேவ உருவத்தைப் பெற்றிருப்பதற்கும். புகழ் கொண்டவர்க்கே கூடும் - (தமிழ்ப் பாடல்களால் பாடப்பெற்ற) புகழ் உள்ளவர்க்கே முடியும். தென் பாலே-நரகமே.

3, 4 : சேர்க்கை-பற்று. சிவபிரான் தமிழ்ச் சங்கத்தில் ஒருவராக (இறையனாராக) இருந்ததால் உயர்ந்தாரா அல்லது தமிழிடத்தில் பற்றுவைத்ததால் உயர்ந்தாரா ? வீடு ஆளும் - (தான் வாழும்) மனையாகக் கொண்டுள்ள. அம் கை மேலே இருந்தாயோ - அழகிய கையில் (ஏட்டுப் புத்தகமாய்த்) தங்கியிருந்தாயோ ? ஏடு ஆக - பனையோலை (தன் கையில்) இருக்க. ஆடு அரவம் - (படமெடுத்து) ஆடும் அனந்தன்.

5. தாழ் பாயல் ஆளரை - தங்கும் பாயாகக் கொண்டுள்ள திருமாலை. நீ தொடர்ந்தாயோ - நீ பின் சென்றாயோ ? சூழ் பாயோடு உன்னைத் தொடர்ந்தாரோ - (அல்லது திருமால்) படுக்கையோடு உன்னைத் தொடர்ந்து சென்றாரோ ? (கச்சிப் பதியில் வாழ்ந்த கணி கண்ணன் என்னும் திருமாலடியாரைப் பல்லவ அரசன் நாட்டை விட்டுச் செல்லுமாறு உத்தரவிட, அது கேட்ட திருமழிசைப் பிரான் பகவானை நோக்கிப் "பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்" என்றதும் திருமால் அவர் பின் தொடர்ந்தார் என்பதும் பின்பு படுத்துக்கொள்' என்று அவர் மாற்றிப் பாட மீண்டும் கச்சிக்கு எழுந்தருளினார் என்பதும் இங்குக் குறிக்கப் பட்டுள்ளன.)

6. முனி - அகத்திய முனிவர். உனை முருகர் சொன்னாரோ - உன்னை முருகக் கடவுள் அம்முனிவருக்கு உபதேசித்தாரோ ? சொற்றனையோ - புகழ்ந்து பாடினாயோ ? பேதியா - மாறுபடாத.

7. நேசர் - அன்புடைய சொக்க நாதர். பொருளாய் - அர்த்தமாய். வாசர் - வாழும் சொக்கர். பாசம் உறும் - (உன்னிடம்) பற்றுக்கொண்டுள்ள.

8. உன் செய்தி - உனக்குச் சொல்லவேண்டிய செய்தியை (நீ எனக்குச் செய்யவேண்டிய காரியத்தை).

9, 10. 'கற்க.........தக':—குறள். தக - ஏற்றபடி, சொல்லிய - யாவராலும் புகழ்ந்து சொல்லப்படுகின்ற.

11. ஈரடி - ஈரடியாலான குறள். நேரடி -நான்கடிப்பா. வள்ளுவர் ஈரடிக் குறளினால் உலகத்தார் நினைப்பன எல்லாவற்றையும் அளந்து ஓர்ந்து கூறினார். அவர் போன்றார் ஈரடிக்கு இருமடங்காகிய நான்கடிப் பாவினால் கூறத் தொடங்கினால், அளந்து ஓர்ந்து கூற வேறு உலகு இல்லையே என்பது கருத்து.

3. ஆற்றுப்படை

ஆற்றுப்படை: வள்ளல் ஒருவனிடத்துப் பரிசில் பெற்று வரும் பாணன் விறலி புலவர் முதலியோருள் ஒருவர், பரிசில் பெற வருபவருக்குத் தனக்குப் பரிசில் அளித்த வள்ளலையும் அவனது தலைநகர் முதலியவற்றையும் சிறப்பித்துக் கூறி, அவன்பால் செல்லுமாறு வழிப்படுத்துவதைக் கூறுவது. (ஆற்றுப் படை - வழிப்படுத்தல்) இது, புலவராற்றுப் படை, பாணாற்றுப் படை, விறலியாற்றுப்படை முதலிய பல வகைப்படும். இச் செய்யுளை இயற்றியவர் கம்பர் என்பர்.

பாணாற்றுப்படை

தேருளைப் புரவி வாரணத் தொகுதி
திரைகள் கொண்டுவரு மன்னநின்
தேயமே துனது நாமமே துபுகல்,
' செங்கை யாழ்தடவு பாணகேள் :
வாருமொத் தகுடி நீருநா மும
தேவனு ரைநகர் காவலன்,
வாணபூ பதிம கிழ்ந்த ளித்தவெகு
வரிசை பெற்றுவரு புலவன்யான் ;
நீருமிப் பரிசு பெற்று மீளவர
லாகுமே குமவன் முன்றில்வாய்
நித்திலச் சிகர மாடமா ளிகை
நெருங்கு கோபுர மருங்கெலாம்
ஆருநிற் குமொரு வேம்பு நிற்குமுயர்
பனையு நிற்குமத னருகிலே
அரசிருக் குமர சைச்சுமந் தசில
அத்தி நிற்குமடை யாளமே.'

—கம்பர்.

அருஞ்சொற்பொருள்

உளை - குதிரையின் தலையை அலங்கரிக்கும் தலையாட்டம். இது குஞ்சம் போன்றது ; புரவி-குதிரை ; வாரணம் - யானை; தொகுதி-கூட்டம் ; திரை- அரசருக்குச் செலுத்தப்படும் இறைப் பணம்; யாழ் தடவு - வீணை மிழற்றும்; பாணர்–பண்டைத் தமிழகத்தில் வாழ்ந்த ஒருவகைச் சாதியார் ; காவலன் - அரசன் ; வரிசை - பரிசு ; நித்திலம் - முத்து ; சிகரம் - கோபுரம் ; மருங்கு - வீதி ; ஆரு - ஆத்தி மரம் ; (ஆத்திமாலையணிந்த சோழன்); வேம்பு - வேப்ப மரம் (வேப்பமாலையணிந்த பாண்டியன்); பனை - பனை மரம் (பனை மாலையணிந்த சேரன்); அரசு இருக்கும் - அரச மரங்கள் இருக்கும் (அரசர்கள் இருப்பார்கள்); அத்தி - அத்தி மரம் (யானை.)

4. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ்

திருச்செந்தூர்முருகன் பிள்ளைத் தமிழ்: திருச் செந்தூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமான்மீது பாடப்பட்ட பிள்ளைத்தமிழ் என்னும் நூலாகும். பிள்ளைத்தமிழ் என்பது பாட்டுடைத் தலைவரைக் குழந்தையாகப் பாவித்துக் காப்பு முதலிய பத்துப் பருவங்கள் அமைய நூறு ஆசிரிய விருத்தங்களால் பாடப்படுவது. இது, ஆண்பாற் பிள்ளைத் தமிழ் பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகைப்படும்.

பகழிக்கூத்தர் : இவர் இராமநாதபுரத்தில் உள்ள சன்னசிக் கிராமத்தில் தருப்பாதனர் என்னும் வைணவ அந்தணருக்குப் புதல்வராகப் பிறந்தவர்.

சிற்றிற் பருவம்

பொன்னின் மணக்கும் புதுப்புனலில்
புடைசூழ் பணில முத்தெடுத்துப்
புறக்கோட் டகமுண் டாக்கிவலம்
புரியைத் தூதைக் கலமமைத்துக்
கன்னி மணக்கும் கழனியிற்செங்
கமலப் பொகுட்டு முகையுடைத்துக்
கக்குஞ் செழுந்தேன் உலையேற்றிக்
கழைநித் திலவல் சியைப்புகட்டிப்
பன்னி மணக்கும் புதுப்பொழிலில்
பலபூப் பறித்துக் கறிதிருத்திப்
பரிந்து சிறுசோ றடுமருமை
பாராய் அயிரா வதப்பாகன்
சென்னி மணக்கும் சேவடியால்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெரியுந் திருச்செந்தூர்ச்
செல்வா! சிற்றில் சிதையேலே.

—பகழிக் கூத்தர்

அருஞ்சொற் பொருள்

புனல் - நீர். புடை - பக்கம். பணிலம் - சங்கு. வலம்புரி - வலப்புறமாக முறுக்கியுள்ள சங்கு. கலம் - பாத்திரம். முகை - மொட்டு. கழை - கரும்பு. நித்திலம் - முத்து. வல்சி - சோறு. கறி திருத்தி - கறி சமைத்து. பரிந்து - விரும்பி. அடும் - சமைக்கும். அயிராவதம் - வெள்ளை யானை. பாகன் - இந்திரன். சென்னி - தலை. சிறு இல் - சிறு வீடு. சிதையேல் - அழிக்காதே.

பயிற்சி வினாக்கள்

நால்வர் நான்மணி மாலை :

1. நான்மணிமாலையின் இலக்கணத்தை வரைக.
2. இயல்பாவால் மொழிஞானப் பாலுண்டு நாவால் மறித்து எம் செவியமுதாய் வார்த்தபிரான்-இத்தொடரின் பொருளை வரைக.
3. சம்பந்தர் ஞானப்பாலுண்ட வரலாற்றை வரைக.
4. என்பாட்டிற்கு நீயும் அவனும் ஒப்பீர் எப்படியினுமே—இதன் பொருளை நயந்தோன்ற விளக்கி வரைக.
5. இறைவன் நாவுக்கரசருக்கு நாட்டுக்கிலாத சூடர்நோய் நல்கிய வரலாற்றை வரைக.
6. ஆரூர ! படியிலா நின்பாட்டில் பரமன் நனிவிருப்பன் என்பதை அடியனேன் விளங்குமாறு அறிந்தனன்—ஆசிரியர் தாம் அறிந்தமைக்குக் கூறுங் காரணங்கள் யாவை ?
7. ஈசன் சுந்தரரைத் தடுத்தாட் கொண்டது, மடமாதர்பால் தூது சென்றது, மனைகள் தோறும் இரந்திட்டது ஆகிய வரலாறுகளை வரைக.
8. வேதத்தினும் சிறந்தது திருவாசகம் என்பதை ஆசிரியர்எங்ஙனம் உணர்த்துகின்றார்.
9. விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட் காரணன்—வரலாற்றை வரைக.

தமிழ்விடு தூது :

1. உனைக் கொண்டு புகழ் கொண்டவர்க்கே கூடும்- கூடுவது யாது?
2. வாணியங்கை மேலே யிருந்தாயோ ஏடாக உன்மே லிருந்தாளோ-விளக்கி வரைக.
3. ஆடரவத் தாழ்பாயலாளரை நீ தானே தொடர்ந்தாயோ - வரலாற்றை வரைக.
4. உன் ஈரடிக்குள்ளே யுலக மெல்லா மடங்கு மெனின் நேரடிக்கு வேறே நிலனுண்டோ—விளக்கி வரைக.

ஆற்றுப்படை :

1. ஆற்றுப்படையின் இலக்கணம் யாது ?
2. ஒரு பாணன் மற்றொரு பாணனுக்கு வாண பூபதியின் இடத்தை எவ்வாறு அடையாளங் கூறினன் ?
3. ஆருநிற்கும் ஒரு வேம்பு நிற்குமுயர் பனையுநிற்கும் அதனருகிலே அரசிருக்கு மரசைச் சுமந்த சில அத்தி நிற்கும்—விளக்கி வரைக.

திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ் :

1. பிள்ளைத்தமிழின் இலக்கணங் கூறுக.
2. சிறுமியர் தாம் சிறுசோறடும் அருமையை எவ்வாறு முருகனுக்கு உணர்த்துகின்றனர் ?
3. அயிராவதப்பாகன்—யார் ?

V. புணர்ந்துரை

1. நாட்டு வளம்

இச்செய்யுள், ஏமாங்கத நாட்டின் வளத்தைக் கூறுவதாகும். சீவக சிந்தாமணி என்னும் நூலில் உள்ளது. திருத்தக்கதேவரால் இயற்றப் பெற்றது.

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசி தறிவாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற் றிசைபோய துண்டே.

—திருத்தக்கதேவர்

அருஞ்சொற் பொருள்

காய்மாண்ட - காயாகி முற்றிய. தெங்கின்பழம் - தேங்காய் நெற்று. கமுகு - பாக்கு. பூ - பொலிவு. தீந்தேன்தொடை - இனிய தேன் போன்ற மதுரமான நீரையுடையகுலை. வருக்கை - பலாப்பழம். இசையால் - புகழால்.

பயிற்சி வினா

ஏமாங்கத நாட்டு வளத்தை விவரிக்க.

2. செந்நெல் வளர்தல்

இச்செய்யுள், நைடதம் என்னும் நூலில் உள்ளது. நிடதநாட்டில் விளைந்த செந்நெல்லின் சிறப்பைப் புனைந்துரைப்பது. இதனை இயற்றியவர் அதிவீரராமபாண்டியர்.

விழுந்த அஞ்சிறை வண்டினம் மிதிப்பமெல் லரும்பு
கிழிந்து வார்தரு தேறலும் கிளர்சினைப் பலவின்
பழங்க ளிந்துவீழ் தேறலும் பழனங்கள் தோறும்
வழிந்து பாய்தலின் வானுற வளர்வன செந்நெல்

—அதிவீர ராமபாண்டியர்

அருஞ்சொற் பொருள்

சிறை - சிறகு. இனம் - கூட்டம். அரும்பு - மொட்டு. வார்தரு - ஒழுகுகிற. தேறல் - தேன். சினை - கிளை. பலவின்பழம் - பலாப்பழம். பழனம் - வயல்.

பயிற்சி வினா

செந்நெல் வளர்ந்த தன்மையை விவரிக்க.

3. காவிரிப்பூம்பட்டினக் கடைத்தெரு

இது, பத்துப்பாட்டு என்னும் தொகை நூலில் ஒன்றாகிய பட்டினப் பாலை என்னும் பாடலில் உள்ள ஒரு பகுதியாகும். காவிரிப்பூம் பட்டினக் கடைத்தெருவின் இயல்பைப் புனைந்துரைப்பது. இதனை இயற்றியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த வாரமு மகிலும்
தென்கடல் முத்தும் குணகடற் றுகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு.

—உருத்திரங் கண்ணனார்

அருஞ்சொற் பொருள்

நீர் – கடல். கால் - காற்று. பரிபுரவி - சொல்லுதலையுடைய குதிரை. கருங்கறி மூடை - கரிய மிளகு மூட்டைகள். வடமலை - இமயமலை. குடமலை - பொதியமலை; காவிரிப்பூம் பட்டினத்தின் தென்மேற்கிலுள்ளது. இதனைக் குடமலை எனவுங் கொள்ளலாம். ஆரம் - சந்தனம். குணகடல் - கிழக்குக் கடல். துகிர் - பவழம். வாரி - பொருள். ஈழம் - இலங்கை. காழகம் - கடாரம்; இது மலேயா தீபகற்பத்தில் உள்ள தென்பர். ஆக்கம் - நுகர்பொருள். தலை மயங்கிய - கலந்து நிறைந்த. நனந்தலை மறுகு - அகன்ற இடங்களையுடைய தெரு.

பயிற்சி வினாக்கள்

1. காவிரிப்பூம் பட்டினத்துக் கடைத்தெரு வளத்தாற் சிறந்து விளங்கிய நிலையை விவரிக்க.
2. குறிப்பு வரைக : வடமலை, குடமலை, காழகம்.

4. குறக்குடியின் இயல்பு

இச்செய்யுள், மீனாட்சியம்மை குறம் என்னும் நூலில் குறத்தி தன் குடியின் இயல்பைப் புனைந்து கூறுவது. இதனை இயற்றியவர் குமர குருபரர்.

கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக்
கிழங்குகல்லி எடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்
கொடியில்வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறும்
தேறலும்வாய் மடுப்போம்
பசுந்தழையும் மரவுரியும்
இசைந்திடவே உடுப்போம்
செழுந்தினையும் நறுந்தேனும்
விருந்தருந்தக் கொடுப்போம்
சினவேங்கைப் புலித்தோலின்
பாயலிற்கண் படுப்போம்
எழுந்துகயல் கணிகாலில்
விழுந்துவினை கெடுப்போம்.
எங்கள்குறக் குடிக்கடுத்த
இயல்பிதுகாண் அம்மே !

—குமரகுருபரர்

அருஞ்சொற் பொருள்

விழுந்த - ஊன்றிய. கல்லி - தோண்டி. தேறல் - தேன். விருந்து- விருந்தினர். பாயல் - படுக்கை. கயற்கணி - கயல் போன்ற கண்ணை யுடையவள் மீனாட்சி. அடுத்த – ஏற்ற.

பயிற்சி வினா

குறக்குடிக்கு அடுத்த இயல்பைக் குறத்தி எவ்வாறு கூறுகின்றாள் ?

VI. பல்சுவை

1. மதுரைமாநகரம்

மதுரைமாநகர்: இது வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் இயற்றிய பாவலர் விருந்து என்னும் நூலில் அடங்கியுள்ள பதினான்கு பகுதிகளுள் ஒன்று. இது, மதுரையில் பாண்டித்துரைத் தேவர் தமிழ்ச் சங்கம் நிறுவப் பெருமுயற்சி செய்த காலத்தில், ஊக்கமின்றியிருந்த மதுரைமாநகரினரை ஊக்குதற் பொருட்டு இயற்றப்பட்டது.

புலவர் நாவிற் பொருந்திய மதுரை

உயர்நிலை தவறி நயமெலாம் தொலைந்து
வீழ்நிலை யுற்றனை மேதக்க மதுராய்
எவன்கொலோ இவ்வா றவநிலை எய்தினை
மறையெலாம் புகழும் இறையனார் என்னும்
நறுந்தமிழ்ப் புலவர் சிறந்துவீற் றிருந்த
வளநக ராகிய மதுரையும் நீகொலோ 1

நற்றமிழ்க் கீரனைப் பெற்ற மதுரை

ஆல வாயின் அவிர்சடைக் கடவுளை
ஏலவா தித்த இன்றமிழ்க் கீரன்
வந்தவ தரித்த மதுரையும் நீகொலோ 2

தண்டமிழ்ச் சாத்தனைக் கொண்டமதுரை

பதினெண் கூலமும் இதன்கண் உளவெனச்
சாற்றுவார் போலச் சாத்தனார் என்னும்
மேற்றகைப் புலவர் வேட்டினி திருந்து
மதுரநூல் யாத்த மதுரையும் நீகொலே 3

—சூரியநாராயண சாஸ்திரியார்

அருஞ்சொற் பொருள்

1. நயம் - நன்மை. வீழ்நிலை - இழிந்த நிலைமை. மேதக்க - மேன்மை வாய்ந்த. மதுராய் - மதுரைமா நகரமே. எவன்கொலோ - ஏனோ. அவநிலை - கேடான நிலைமை. இறையனார் - சிவபெருமான்.

2. ஆலவாய் - மதுரை. அவிர் - விளங்குகின்ற. ஏல - பொருந்த. கீரன் - நக்கீரன்.

3. கூலம் - தானியம். மேற்றகை - மேலான தகுதிவாய்ந்த. வேட்டு - விரும்பி. மதுரநூல் - மணிமேகலை.

2. சடையப்ப வள்ளல் பெருமை

பரராச சிங்கன் என்னும் ஈழத் தரசன் சடையப்ப வள்ளல் அளித்த நெற் கொடையால் ஈழ நாடு பஞ்சம் நீங்கிச் செழிப்புற்ற போது அவ் வள்ளலின் பெருமையைப் பாராட்டிப் பாடியதாகும் இப்பாடல்.

கொடையிற் சிறந்த சடையன்

இரவுநண்பக லாகிலென்பகல்
இருளறுவிர வாகிலென்
இரவியெண்டிசை மாறிலென்கடல்
ஏழுமேறிலென் வற்றிலென்
மரபுதங்கிய முறைமைபேணிய
மன்னர்போகிலென் ஆகிலென்
வளமையின்புறு சோழமண்டல
வாழ்க்கை காரணமாகவே
கருதுசெம்பொனின் அம்பலத்திலோர்
கடவுணின்று நடிக்குமே
காவிரித்திரு நதியிலேயொரு
கருணைமாமுகில் துயிலுமே
தருவுயர்ந்திடு புதுவையம்பதி
தங்குமானிய சேகரன்
சங்கரன்தரு சடையனென்றொரு
தருமதேவதை வாழவே

—பாராச சிங்கன்

அருஞ்சொற் பொருள்

இரவி - சூரியன். மரபு - குலம். முறைமை பேணிய - செங்கோல் முறைப்படி பாதுகாக்கின்ற. பொன்னின் அம்பலம் - பொற்சபை. கடவுள் - நடராசப் பெருமான். கருணைமாமுகில் - அருள் நிறைந்த மேகம்; திருவரங்கநாதன். தரு - மரங்கள். புதுவை - புதுச்சேரி. மானிய சேகரன் - பெருமை பொருந்திய தலைவன்.

3. நூல்பயில் இயல்பு

இது நன்னூல் என்னும் இலக்கண நூலில் உள்ளது. மாணாக்கர் நூல்களைக் கற்கவேண்டிய முறைகளை யுணர்த்துவது. இதனை இயற்றியவர் பவணந்தி முனிவர்.

நூல்பயில் இயல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை
கடனாக் கொளினே மடம்நனி இகக்கும்.

—பவணந்தி முனிவர்

அருஞ்சொற் பொருள்

பயில்தல் - படித்தல். நுவலின் - சொன்னால். வழக்கு - நூல் வழக்கு, உலக வழக்கு. பாடம் - பழம்பாடம். ஆசான் - ஆசிரியன். அமை வர-பொருந்த. அம்மாண்புடையோர் - நல்ல மாணாக்கர். பயிறல்- பழகுதல். விடுத்தல் - விடை கூறல். கடனா - கடமையாக. மடம் - அறியாமை. நனி இகக்கும் - மிகவும் நீங்கப் பெறுவான்.

4. பாணனும் விறலியும்

ஈழநாடு சென்று அந்நாட்டு மன்னனைப் பாடி யானைப் பரிசு பெற்று வந்த அந்தகக் கவி வீரராகவ முதலியார், தாம் பெற்று வந்த பரிசைக் குறித்துத் தம் மனைவியிடம் தம்மைப் பாணனாகவும் அவளைப் பாணியாகவும் கொண்டு உரையாடியதை உணர்த்துவது இப்பாடல்.

இம்பர்வா னெல்லையிரா மனையே பாடி
என்கொணர்ந்தாய் பாணாநீ யென்றாள் பாணி
வம்பதாங் களப மென்றேன் பூசுமென்றாள்
மாதங்க மென்றேன்யாம் வாழ்ந்தே மென்றாள்
பம்புசீர் வேழமென்றேன் றின்னு மென்றாள்
பகடென்றே னுழுமென்றாள் பழனந் தன்னை
கம்பமா வென்றேனற் களியா மென்றாள்
கைம்மாவென் றேன்சும்மா கலங்கி னாளே.

—அந்தகக் கவி வீரராகவ முதலியார்

அருஞ்சொற் பொருள்

இம்பர் – இவ்வுலகம். இராமன் - ஈழநாட்டு மன்னன். பாணன் - பண்பாடுபவன். பாணி - பாணன் மனைவி; விறலி. வம்பு - புதுமை. களபம் - யானை; சந்தனம். மாதங்கம் - யானை; மாற்றுயர்ந்த தங்கம். பம்பு—வலிமை. வேழம் - யானை; கரும்பு. பகடு - யானை; காளை. கம்பமா-யானை; கம்பு மாவு. கைம்மா - யானை.

5. உத்தமன் காந்தி

இப்பாக்கள் "தமிழன் இதயம்" என்னும் நூலில் உள்ளவை; காந்தியடிகளின் பெருமையைக் கூறுவன. இவற்றை இயற்றியவர் நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை அவர்கள்.

கவிபாடிப் பெருமை செய்யக் கம்பனில்லை
கற்பனைக்கிங் கில்லையந்தக் காளிதாசன்
செவிநாடும் கீர்த்தனைக்குத் தியாக ரில்லை
தேசீயப் பாரதியின் திறமு மில்லை
புவிசூடும் அறிவினுக்கோர் புதுமை தந்து
புண்ணியமும் கண்ணியமும் புகழுஞ் சேர்ந்த
உவமானம் வேறெவரும் உரைக்க வொண்ணு
உத்தமராங் காந்தியரை உவந்துபேச. 1

சொல்லுவது எல்லார்க்கும் சுலப மாகும்
சொன்னபடி நடப்பவர்கள் மிகவும் சொற்பம்
எல்லையின்றி நீதிகளை எழுதுவார்கள்
எழுதியது பிறருக்கே தமக்கென் றெண்ணுர்
தொல்லுலகில் நாமறிந்த தலைவர் தம்முள்
சொன்னதுபோல் செயல் முயன்ருர் இவரைப்போல
இல்லையெனும் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி
இந்தியத்தாய் உலகினுக்கே ஈந்த செல்வம். 2

—**நாமக்கல் கவிஞர்**

அருஞ்சொற் பொருள்

புவி - உலகம். கண்ணியம் - பெருமை.

பயிற்சி வினுக்கள்

1. மதுரைமாநகரின் பழம் பெருமைகளை ஆசிரியர் எவ்வெவ்வாறு குறித்துள்ளார்?
2. இரவு நண்பகலாகிலென் பகலிருளரு விரவாகிலென் - இவ்வாறு பரராச சிங்கன் கூறக்காரணம் என்ன?
3. நடராசப் பெருமான் நடிப்பதற்கும் திருவரங்கநாதன் துயில்வதற்கும் ஆசிரியர் என்ன காரணங் கற்பிக்கின்ருர்?
4. அறிவு நிரம்புதற்கு மாணவர் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் யாவை?
5. யானையைக் குறிக்கும் சொற்கள் யாவை? அவை குறிக்கும் வேறு பொருள்கள் யாவை?
6. உத்தமன் காந்தியின் பெருமையைக் கவிஞர் எவ்வாறு பாராட்டுகின்ருர்?

உரை மணி மாலை

1. வாழ்க்கையின் அடிப்படை ஒழுக்கம்

திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் பி.ஏ., பி.எல்.

பைக்காரா மின்சார திட்டத்தைப்பற்றி அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். பைக்காரா என்பது பாய்க்கரை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபு, பாய்க்கரை நதி பல ஆயிரக்கணக் கான ஆண்டுகளாக ஓடிக்கொண்டிருக்கிறது. மழைக் காலத் தில் தண்ணீர் நிறைந்து, புரண்டு ஓடி, மலைகளைத் தாவித்தாவி விழுந்து, ஓடைகளாகச் சில இடங்களில் சிதைந்து சென்று கொண்டுவந்தது. ஆனால், இவ்வளவு ஆண்டுகள் அதன் மூலம் மின்சாரம் உண்டாக்கப்படவில்லை. சமீப காலத்தில் சில விஞ்ஞான சாஸ்திர நிபுணர்கள் ஒரு இரகசியத்தைக் கண்டு பிடித்தார்கள். இந்தத் தண்ணீரைச் சிதறிப் போகாமல் அணைகள் போட்டுத் தடுத்து, அதைக் குழாய்கள் மூலம் கொண்டுபோய்க் கீழே சில யந்திரங்களின்மேல் செலுத்து வதனால் பெரிய யந்திரங்கள் சுழற்றப்பட்டு, மகத்தானதொரு சக்தியை உண்டாக்க முடியுமென்பதை அவர்கள் கண்டுபிடித் தார்கள். எனவே, பாய்க்கரை நதியில் இருந்த தண்ணீரைச் சிதறவெட்டாமல் தடுத்தார்கள். பல இடங்களிலிருந்தும் தண் ணீர் அங்குவந்து சேரும்படி ஏற்பாடு செய்தார்கள். நதியை அணைபோட்டுத் தடுத்து, தண்ணீரைப் பெரிய குழாய்களின் மூலம் பல நூற்றுக்கணக்கான அடிகள் கீழே கொண்டுபோனார்கள். கொண்டு போய் அங்கே இவற்றிற் காக உண்டாக்கப்பட்ட யந்திரங்களின் மூலம் செலுத்தினார்கள். இப்பெரிய யந்திரங்கள் இந்த வேகங் காரணமாகச் சுழன்றன. அந்த யந்திரங்கள் சுழன்ற வேகத்தில் மின்சாரம் உண்டா யிற்று. அந்த மின்சாரத்தின் அளவு மகத்தானதாக இருந்தது. தென்னிந்தியாவில் பல பாகங்களுக்கும் அந்த மின்சார சக்தி கொண்டுபோகப்பட்டு, பல ஊர்களுக்கு விளக்கும் விசிறி களும் கிடைத்ததுடன், பல ஊர்களில் பெரிய பெரிய பஞ்சாலை கள், கரும்பு ஆலைகள், அரிசி அரைக்கும் யந்திரங்கள்,

தொழிற்சாலைகள் முதலியன வேலை செய்வதற்கும் பயன் பட்டுக் கொண்டிருக்கிறது.

இவ்வளவு காலம் இதன் நீர் பயன்படாமல் இருக்க, இப்பொழுது மாத்திரம் இந்தப் பாய்க்கரை நதிக்கு இவ்வளவு வேகம் வந்ததன் காரணம் என்னவென்று நீங்கள் கேட்கலாம். முன்னால் அந்தத் தண்ணீர் பலவாறாகச் சிதறிப் போய்க் கொண்டிருந்தது. ஆனால், இப்பொழுது அதன் வேகத்தைச் சிதறாமல் தடுத்து ஒருமுகமாகச் செலுத்தியதினால் அதன் தண்ணீருக்கு முன்னைவிடப் பன்மடங்கு சக்தி உண்டாயிருக்கின்றது. சிதற விட்டதனால் அதன் சக்தி குறைந்தது; சிதற வொட்டாமல் தடுத்து ஒருமுகமாகச் செலுத்தியது காரணமாக அதன் சக்தி பன்மடங்கு அதிகரிக்கின்றது.

நாம் அனைவரும் சூரிய வெளிச்சத்தின் தன்மையை அநுபவித்திருக்கிறோம். ஆனால், சூரிய வெளிச்சத்தினால் சாதாரண இளவெயிலில் நெருப்பை உண்டாக்க முடியும் என்று சொன்னால் அது சாத்தியம் என்று நாம் நினைக்கமாட்டோம். நெருப்பு வேண்டுமென்றால் அதற்கு வேறு கருவியைக் கொண்டுவந்து தீப்பெட்டியின் உதவியினால்தான் நெருப்பை உண்டாக்கவேண்டும். ஆனால், விஞ்ஞான சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கும் உண்மை வேறுவிதமாக இருக்கிறது. சூரிய வெளிச்சத்தை ஒரு பூதக்கண்ணாடி மூலம் செலுத்தினால், கொஞ்ச நேரத்தில் நெருப்பு உண்டாகி, பஞ்சு அல்லது காகிதம் எரிந்து சாம்பலாவதைப் பார்க்கலாம்; இது எங்ஙனம் சாத்தியம் ஆகிறது? சூரிய கிரணங்களில் இருக்கக் கூடிய வெப்பம் சாதாரணமாக இருக்கும்போது அது பரவிச் சிதறி விடுகிறது. ஆனால், அந்தப் பூதக் கண்ணாடியின் மூலம் அவைகளைச் செலுத்தும் போது, அவைகள் ஒருங்கே கூட்டப் பெற்று அவற்றில் இருக்கக்கூடிய வெப்பம் அதிகமாகி நெருப்பு உண்டாகிறது.

இந்த இரண்டு உதாரணங்களில் நாம் அறிந்துகொள்ளக் கூடிய பெரிய உண்மை ஒன்று புதைந்து கிடக்கின்றது. சில மனிதர்கள் சிறப்பாக விளங்குகின்றார்கள்; அவர்கள் அறிஞர்களாக இருக்கிறார்கள்; ஆராய்ச்சியில் வல்லுநர்களாகவும்

சிறந்த காரியங்களைச் சாதிப்பவர்களாகவும் இருக்கிறார்கள்; உலகத்திலே எல்லோரும் அவர்களை வணங்குகிறார்கள். ஆனால், சில மனிதர்கள் எங்கும் சிறப்பாக இருப்பதில்லை; எடுத்த காரியம் எதையும் நன்றாகச் செய்வதில்லை. மற்றவர்களுடைய மதிப்புக்கும் ஆளாவது இல்லை; அதற்கு மாறாகப் பலர் கேவலமாக நினைக்கும்படி இருக்கிறார்கள். மனிதர்களுக்குள் ஏன் இந்த வித்தியாசம்? பிறவியிலேயே இந்த வித்தியாசத்துடன் பிறக்கிறார்களா அல்லது அவாகள் வாழ்க்கை காரணமாக இந்த வித்தியாசம் ஏற்படுகிறதா? கடவுள் மக்களைப் பிறப்பிலேயே பட்சபாதத்துடன் பிறப்பிக்கிறாரா? இது பலர் மனதில் எழக்கூடிய கேள்வியாகும். உலகப் பெரியார்களும், நம் உபநிடதங்களும், சாஸ்திரங்களும் இதற்கு ஒரே பதில்தான் கொடுக்கின்றன. எந்த மனிதனும் உயர்ந்த தன்மையை அடையமுடியும்; யாரும் மகத்தான காரியங்களைச் செய்யலாம். அது அவர்கள் வாழ்க்கையையும் பழக்க வழக்கங்களையும் பொறுத்திருக்கிறது. முன்னவர்கள் தங்கள் சக்தியைச் சிதறவொட்டாமல் தடுத்து ஒன்றுபடுத்தி அரிய காரியங்களைச் சாதிக்கக்கூடிய தன்மையைப் பெற்றிருந்தார்கள். எனவே, அந்தக் காரியங்களைச் சாதிக்கிறார்கள். ஆனால், பின்னவர்கள் தங்கள் சக்தியைப் பல ஆயிரக்கணக்கான வழிகளிலே சிதறவிடுகிறார்கள். எனவே, பெரும் காரியங்களைச் சிந்திக்கவும், சிந்தித்த காரியங்களைக் கொண்டு செலுத்தவும் அவர்களுக்குச் சக்தி இல்லாமல் போய்விடுகிறது. அவர்களும் தங்கள் கருத்துக்களைச் சிதறவொட்டாமல் உயர்ந்த எண்ணங்களிலும் காரியங்களிலும் மாத்திரம் செலுத்துவார்களானால், அவர்கள் நிறைந்த சக்தியைப் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை. இதற்காகத்தான் திருவள்ளுவர் கூட,

> "சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
> நன்றின்பால் உய்ப்பது அறிவு"

என்று அருளியிருக்கிறார். "சென்ற இடத்திலே செலவிடாமல் நல்ல காரியங்களில் மாத்திரம் செலுத்துவது அறிவு என்பது ஏன்?" என்று கேட்கலாம். அதற்குப் பதில், அங்ஙனம் செய்வதுதான் மனிதனுக்கு ஆற்றலையும் சக்தியையும் கொடுக்கிறது என்பதாகும். எது நல்லது? எது மனிதனுக்குப் பலத்தையும்

சக்தியையும், ஆற்றலையும், காரியங்களைச் செய்யக்கூடிய சக்தியையும் கொடுக்கின்றதோ அதுதான் ஒருவனுக்கு நல்லது. ஆதலாலே, எந்தப் பழக்க வழக்கங்கள் நமக்கு பலவீனத்தைக் கொடுக்கின்றனவோ அவை கெட்டவை என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

இதற்காகத்தான் வள்ளுவர் வேறோர் இடத்தில்கூட,

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்"

என்று சொன்னார் போலும்! அடக்கம் என்பது நம்முடைய சக்தியைச் சிதறவொட்டாமல் இருக்கக்கூடிய பழக்கமாகும். சக்தி சிதறுகிற மாதிரி நடந்தால் அது அடங்காமையாகும். அடக்கத்தோடு இருப்பவர்கள் பெரிய காரியங்களைச் சாதிப்பார்கள். அடக்கத்தையே ஒழுக்கம் என்ற வேறொரு வார்த்தையிலும் குறிக்கலாம். ஒழுக்கமே மனிதனுடைய உயர்ந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக இருக்கிறது. ஒழுக்க வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் உயர்ந்த காரியங்களைச் செய்வதற்கு அடிப்படையாக இருக்கக்கூடிய சக்தியைப் பெறுவார்கள். ஒழுக்கம் இல்லாதவர்கள் அதிகமான சக்தியைப் பெற்றிருக்க முடியாது.

நம்முடைய தினசரி வாழ்க்கையை நாம் எடுத்துக்கொள்வோமானால், நம்முடைய எண்ணங்களும் கருத்துக்களும் எவ்வளவோ வகையில் சிதறிப் போகின்றன என்பதைக் காண்போம். பல சிறு சிறு விஷயங்களில் நம் மனம் செல்கிறது. சிறு சிறு ஆசைகளில் நம் எண்ணங்கள் செல்கின்றன. சிறு சிறு விஷயங்களில் நம் மனம் ஈடுபட்டு நமது சக்தியை செல விட்டுவிடுகிறோம். இங்ஙனம் சிறு இன்பங்களிலும் சந்தோஷங்களிலும் மனத்தைச் சிதற அடிப்பவர்களுக்குச் சபல புத்தி தான் இருக்கும். அவர்கள் மனம் இவற்றை நாடிக்கொண்டே இருக்கும். இங்ஙனம் இருப்பவர்கள் தங்கள் மனத்தை ஒருமைப்படுத்தி உயர்ந்த விஷயத்தில் செலுத்த முடியாதவர்களாவார்கள். அவர்கள் மனதில் பெரு நோக்கங்கள் இல்லாமல் சிறு சிறு ஆசைகளிலே ஆயுள் முழுவதும் சென்று வீணாகிறது. தங்கள் சிறிய குடும்பத்தைக் காப்பாற்றுவது, சிறு

சந்தோஷங்களை அனுபவிப்பது, சிறு விஷயங்களை நினைப்பது, அவைகளைப் பற்றிப் பேசுவது, இவைகளிலேயே அவர்கள் வாழ்க்கை கழிந்துவிடுகிறது; அதனால் நாளடைவில் அவர்கள் மனமும் பலவீனப்பட்டு உயர்ந்த காரியங்களுக்கும் முயற்சிகளுக்கும் தகுதியற்றவர்களாகப் போய்விடுகிறார்கள். ஆயிரக்கணக்கான பேர்கள் தங்கள் ஆயுளை இங்ஙனம் கழிப்பதை நம் கண் முன்னால் நாம் பார்க்கிறோம். பெரிய காரியங்களை நினைத்து முயற்சி செய்பவர்கள் சிலரே உள்ளனர். அவர்கள் நாளடைவில் தங்கள் ஒழுக்கம் காரணமாகவும் பரிசுத்தமான வாழ்க்கை காரணமாகவும் உயர்ந்ததொரு சக்தியைப் பெற்று, சிறந்த காரியங்களைச் செய்வதைக் காண்கிறோம். 'செயற்கரிய செய்வார்' என்று பொய்யா மொழியார் உரைத்தார் அல்லவா? சாதாரண மனிதர்கள் செயற்கரிய காரியங்களை அவர்கள் தங்கள் வாழ்க்கையில் சாதிப்பார்கள்.

சில தவறான காரியங்களைச் செய்யாமல் இருப்பதை மாத்திரம் ஒழுக்கமென்று சொல்லலாகாது. உயர்ந்த லட்சியத்தில் ஈடுபடுவதே ஒழுக்கத்தின் அறிகுறியாகும்.

எனவே, வாழ்க்கையில் சக்தி உள்ளவர்களாகவும், செல்வாக்கு உள்ளவர்களாகவும், ஆற்றல் படைத்தவர்களாகவும் இருப்பவர்களுக்கு அடிப்படையாக இருப்பவை ஒழுக்கமும் உழைப்புமே யாகும். ஒழுக்கமுள்ள வாழ்க்கையைச் சிறு வயதிலிருந்து நாம் பழகவேண்டியது அவசியம். பலபேர்கள் தவறுதலான வாழ்க்கையில் சென்று சக்தியும் இழந்து, பிற்பாடு அடக்கத்தையும் ஒழுக்கத்தையும் மேற்கொள்ள முன்வருவார்கள். எந்தச் சமயத்தில் திருந்தினாலும் நல்லது என்ற முறையில் அது வரவேற்கப்பட வேண்டியதுதான். ஆனால், இளம் பருவத்தில் ஒழுக்கத்தை மேற்கொள்பவர்கள் தங்கள் சக்தியைச் சிதறவொட்டாமல் தடுத்து, உயர்ந்ததொரு தன்மையைப் பெறமுடியும். சக்தியில் பெரும்பகுதி செலவான பிற்பாடு ஒழுக்கத்தைப் பின்பற்றுவது நன்மை பயந்தாலும், அவ்வளவு நன்மையைப் பயக்கமுடியாது. ஆதலாலே, குழந்தைகளை நாம் வளர்க்கும்போது இளம் பிராயத்திலிருந்து இந்த உயர்ந்த கருத்துக்கள் அவர்கள் மனத்தில் பதியும்படி செய்ய

வேண்டும். ஒழுக்கத்தை ஏற்று நல்ல பழக்க வழக்கங்கள் அவர்கள் வாழ்க்கையில் இருக்கவேண்டியது மிக அவசியமாகும். அதுவே நம் குழந்தைகள் சிறப்பாக வெற்றியுடன் வாழ்வதற்கு அடிப்படையாகும்.

அருஞ்சொற் பொருள்

நிபுணர் – தேர்ந்த அறிவுடையோர். சாத்தியம் – இயலும். மகத்தான – மிகப்பெரிய. சாதிப்பவர் - செய்து முடிப்பவர். சாஸ்திரிகள் – கலைஞர்கள். புதைந்து – மறைந்து. உபநிடதங்கள் – வேதத்தின் ஞான காண்டங்கள். வல்லுநர்-வல்லவர். கேவலமாக – இழிவாக. தீது ஒரீஇ – தீமைகளை விலக்கி. அமரர் – தேவர். ஆரிருள் – நரகம். பலவீனம் – வலுக்குறைதல். லட்சியம் - குறிக்கோள். பொய்யாமொழியார் - திருவள்ளுவர். பிராயம் - வயது.

பயிற்சி வினாக்கள்

1. பைக்காரா மின்சாரத் திட்டத்தைப்பற்றி விவரிக்க.
2. பைக்காரா மின்சாரத்திட்டம், சூரிய ஒளி நெருப்பை உண்டாக்குதல் - இவற்றைக்கொண்டு ஆசிரியர் விளக்கும் உண்மைகள் யாவை ?
3. எந்த மனிதனும் உயர்ந்த தன்மையை அடைய முடியும் என்பதை ஆசிரியர் எங்ஙனம் விளக்குகிறார் ?
4. வாழ்க்கையின் அடிப்படை ஒழுக்கம் என்பதை விவரிக்க.

2. வால்மீகியும் கம்பரும்

சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார்

பிராணிகளுக்கு எலும்பும் சதையும் இருப்பது போல் தாவரங்களுக்கும் உண்டு. சில தாவரங்களுக்கு நம்மைப்போல் உள்ளே எலும்பும் வெளியே சதையும் இருக்கும். வேறு சில வற்றிற்கு உள்ளே சதையும் வெளியே எலும்பும் அமைந்திருக்கும்.

மா, பலா, புளி, தேக்கு முதலிய மரங்களின் சதை அவற்றின் பச்சைப் பட்டை. மரத்தின் உயிர்ச் சத்து பட்டையின் வாயிலாகவே செல்கிறது. மரத்தின் உள்ளே நின்று பாரத்தைத் தாங்கும் நடு மரமே அதனுடைய எலும்பாகும். ஆனால் மரத்துக்கு வேண்டிய உயிர்ச் சத்து மரத்தின் பச்சைப் பட்டையில்தான் பாய்ந்து வருகிறது.

எலும்பு உள்ளேயும் உயிர்ச் சத்து பச்சைப் பட்டையிலு மாக இந்த வகைத் தாவரங்களின் ஜீவனம் நடைபெறுகிறது. இதற்கு நேர்மாருக இருப்பது வாழை, தென்னே, பனே, கமுகு, நெல், புல், சோளம், கரும்பு இவைகளின் அமைப்பு, வெளிப் புறத்தில் எலும்பு, உள்ளே தண்டில் உயிர்.

பனே, தென்னே, வாழை, கரும்பு இவ்வகைத் தாவரங் களேப் போல் பிராணி வர்க்கத்திலும் ஆமை, சங்கு, சிப்பி, கிளிஞ்சல் முதலிய பிராணி வகைகள், உள்ளே உயிரும் வெளியே ஓடுமாக இருக்கின்றன. கிளிஞ்சல், சங்கு முதலிய பொருள்களே நாம் அந்தப் பிராணிகள் செத்த பின்னரே உப யோகப்படுத்துகிறேம். ஆனல் நீரில் உயிருடன் வாழும்போது ஓட்டிற்குள் உயிரும் சதையும் இருக்கும். நம்முடைய எலும்பு உள்ளே இருப்பது போல் இவற்றின் வெளியோடு அவற்றின் எலும்பு. உயிரும் உணர்ச்சியும் சதையும் ஓட்டிற்குள் மூடிக் காக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறே நூல்களேயும் இரு வகையாக வகுக்கலாம். ஒரு வகைக்குச் சொல்லுக்குள் மூடிக் கிடக்கும் பொருளே உயிர். மற்ருெரு வகைக்கு வடிவமே உயிர். விஷயங்களே விளக்கித் தரும் நூல்களான ரசாயனம், வைத்தியம், தேச சரித்திரம், பூகோளம், கணிதம் முதலியவை நூல்களின் பொருளில் உயிர் கொண்ட வகை. பாடல்களும் பெருங் காவி யங்களும் பொருளுக்குக் கவிஞர் தந்த வடிவழகிலேயே தம் உயிரை வைத்து நிற்கின்றன.

செய்யுளேப் பிரித்து உரை நடையில் எழுதினல் அந்தப் பொழிப்புரையில் உயிர் இருக்காது. கவிஞர் கொடுத்த வடி வத்தைச் சேதித்து விட்டால் உயிர் மாண்டு போகிறது. ஒரு கணித நூல் அல்லது வைத்திய நூல் அவ்வாறு அல்ல. மன னம் செய்வதற்காக அதற்கு ஆசிரியர் செய்யுள் வடிவம் தந்தி ருந்தாலும்—பழைய நாட்டுக் கணித நூல்களும் வைத்திய நூல் களும் இவ்வாறே அமைக்கப்பட்டு வந்தன—அவற்றை விரித்து உரை நடையில் எழுதினலும் அதன் உயிர் நீங்காது. பொரு ளிலே உயிர் கிடப்பதால் பொருளோடு உயிர் இணைந்து நிற்கும்.

கம்பன் பாட்டையோ அல்லது பாரதியார் பாட்டையோ உரை நடையில் எழுதினால் பொருளுக்குச் சேதமில்லை. ஆனால் உயிரில்லாத உடல் தான் நிற்கும். உயிரிழந்த பிராணியைப் போல் உரை நடையில் மாற்றி எழுதிய பாடல் கிடக்கும். அதனோடு பதவுரையும், 'விசேஷ' உரையும் இலக்கணக் குறிப்பும் எழுதி விட்டாலோ அது சவச்சோதனை ஆலயமாகத்தான் பயன்படும். பிரேத சோதனையில் அறிவு வளர்ச்சிக்கு மிக்க பயன் உண்டு. ஆனால் அழகில்லை ; ஒளி யில்லை ; உயிரில்லை; பாடலின் தனிப் பயன் இல்லை.

யானை இருந்தாலும் ஆயிரம் வெள்ளி, இறந்தாலும் ஆயிரம் வெள்ளி என்பதுபோல் சில நூல்கள் இரு விதத்திலும் பயன் தரும். காவியங்களையும் பாடல்களையும் அன்னியருக்காக மொழி பெயர்ப்பது தற்கால வழக்கத்தில் பதிந்து போயிருக்கிறது. தமிழருங்கூடக் கம்பனையும் பாரதியையும் திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதில் ஈடுபடுகிறார்கள். சில தமிழர் அவ்விதம் மொழி பெயர்த்ததைப் படிப்பதிலும் ஈடுபடுகிறார்கள். வால்மீகியை நான் சொல்வதும் இந்தக் கணக்கே. ஆனால், மொழி பெயர்த்த ராமாயணத்துக்கும் இறந்து போன யானையைப் போல் கொஞ்சம் விலையுண்டு என்பதைச் சொல்லி விளக்குவதற்காகவே இந்த நீண்ட முன்னுரை.

வால்மீகி பகவான் ராமாயணம் பாடிய காலமும், ஸ்ரீ ராமச்சந்திரன் அவதரித்து இம்மண்ணுலகில் வாழ்ந்த காலமும் ஒன்றே என்பது புராணம் வாசிப்பவர்களுடைய பரம்பரைக் கொள்கை. உலக அனுபவத்தை வைத்து ஆராய்ந்து யோசித்தால், வால்மீகி ரிஷியானவர் ராமாயணம் பாடியதற்கு முன்னமேயே அதாவது புராதன காலந் தொட்டே, சீதாராம சரித்திரம் மக்களிடை எழுத்து வடிவம் பெறாமலே பல நூற்றாண்டுகள் வாய் வழிக் கதையாக வழங்கி வந்திருப்பதாகத் தோன்றுகிறது. கர்ண பரம்பரையாக, முன்னமேயே இருந்த ராம சரிதத்தை எடுத்துக்கொண்டு அதற்கு வால்மீகி பகவான் நூல் வடிவம் கொடுத்தாற்போல் தோன்றுகிறது. இதனாலேயே கதையில் பல சிக்கல்கள் ஏற்பட்டதென்று ஊகிக்கலாம். வாலியைக்

கொன்ற முறை—அதில் நாம் காணும் நியாயக் குறை. சீதையைக் காட்டுக்கு அனுப்பிய அநீதி, இவை போன்ற இன்னும் பல சிக்கல்கள். வாலமீகி ரிஷியின் காவியத்தில் இராமன் ஒரு மகா புருஷன். ஈசுவர அவதாரமாக வைத்து எழுதவில்லை.

சில அதிகாரங்களிலும், இங்குமங்கும் சுலோகங்களிலும் தெய்வ அவதார விஷயத்தைச் சொல்லி வந்தாலும், மொத்தத்தில் மேலே சொன்னபடி வால்மீகி ராமாயணத்தில் காணப்படும் ராமன் ஒரு சிறந்த ராஜகுமாரன். வீர புருஷன். அபூர்வமான தெய்வீக குணங்கள் பெற்றவன். அம்மட்டே; கடவுள் அல்ல.

வால்மீகி முனிவரின் காலத்திலேயே ஸ்ரீராமனைப் பற்றி அவதாரக் கொள்கை ஓரளவு ஜனங்களின் மனத்தில் இருந்து வந்தது. வால்மீகி ராமாயணம் இயற்றிப் பல நூற்றுண்டுகளுக்குப் பிறகு கம்பரும் துளசி தாஸரும் ராமாயணம் பாடினார்கள். இதற்குள் மகாவிஷ்ணுவின் அவதாரமே ஸ்ரீராமன் என்பது நாட்டிலே நன்ருக ஊர்ஜிதப்பட்டுப் போன கொள்கையாகி விட்டது. ராமன் என்ருலும் கிருஷ்ணன் என்ருலும் மகாவிஷ்ணுவே; மகாவிஷ்ணு என்ருல் ராமனே, கிருஷ்ணனே—இந்த நிலைக்கு ஜனங்களின் கொள்கை வந்துவிட்டது. இதற்கு ஏற்ப, பக்தியும் கோயில்களும் வழிபாடும் ஏற்பட்டு ஸ்திரமாகி விட்டன.

மக்களுடைய நம்பிக்கையும் வழிபாடும் இவ்வாறு பரிணமித்து விட்ட பிறகு, கம்பரோ துளசிதாஸரோ மீண்டும் ராமனை எப்படி வெறும் வீரனுக வைத்துப் பாட இயலும்? அப்படிப் பாட முயன்ருலும் அது வீணுகும். கம்பரும் துளசிதாஸரும் பரிபூரண பக்தர்கள்; ஆழ்வார்களே யாவார்கள். தற்கால சரித்திர ஆராய்ச்சியாளர் அல்லது நெடுங் கதை எழுத்தாளர்களைப்போன்றவர்கள் அல்ல! ராமாவதாரத்தை வால்மீகியைப்போல் வெறும் ஒரு வீர புருஷனைப் பற்றிய கதையாக எழுத முடியாத நிலையிலும் காலத்திலும் கம்பர் பாடினுர்: ராமனை மானிடப் பிறவியில் அடைக்கக் கம்பருடைய பக்தி இடம் தராது. ஆனபடியால் கம்ப ராமாயணத்தில் அடிக்கடி

மிக ரசமான இடங்களில் ராமன் மகாவிஷ்ணுவே, கடவுளே, அனைத்திலும் பரவி நிற்கும் பரம்பொருளே என்று வைத்து மனத்தை உருக்கும் முறையில் அற்புத அழகோடு பாடியிருக்கிறார்.

காலத்துக்கும் சூழ் நிலைக்கும் தக்கவாறு உண்மைக் கவிஞர்கள் பாட முடியுமே யொழிய வெறும் வற்றல் ஆராய்ச்சிகளைப் பாட்டாகப் பாட மாட்டார்கள்.

வால்மீகி ராமாயணத்துக்கும் கம்ப ராமாயணத்துக்கும் மற்றொரு பெரும் வித்தியாசம். வால்மீகி பகவான் பாடிய நூல தமிழ் அகவற்பா முறையில் அமையப்பட்டது என்று சொல்லலாம். கம்பர் பாடியது நிருத்தியத்துக்குத் தகுந்த பாட்டு. ஆங்கிலத்தில் சொல்வோமானால், வால்மீகி ராமாயணம் கம்பீர நாதம் பொருந்திய Blank Verse என்றும், கம்பராமாயணம் ஒரு Lyric என்றும் கூற வேண்டும். கம்பருடைய பாட்டுக்கள் ஒவ்வொன்றும் எதுகையும் மோனையும் சந்தமும் கலந்து,பளிச்சுப் பளிச்சென்று ஆபரணங்களைப் பூண்ட மங்கையின் ஆடலைப்போல் மின்னித் துள்ளி நடனமாடுகிறது. தெய்வீக அவதார விஷயத்தை வைத்து உண்டாகும் உணர்ச்சியுடன் நடனச் சுவையும் கலந்து கம்பருடைய ராமாயணம் பேரழகு அடைந்து விளங்குகிறது. ஆனால் அதைத் தமிழ் மக்கள் மட்டுமே அனுபவிக்க முடியும். அதன் அழகு மற்றவர்களுக்குச் சரியாக விளங்காது. கம்பராமாயணத்தை அன்னிய மொழியில் பெயர்த்து எழுதுவதிலாவது தமிழில் செய்யுள் உருவத்திலிருந்து வசனமாக்குவதிலாவது பெரும் பயன் ஒன்றுமில்லை. வசனமாக எடுத்துச் சொல்லி விளக்கி விட்டு, உடனே சரியான முறையில் பாடினால் நல்ல பயன் ஏற்படும்.

அருஞ்சொற் பொருள்

ஜீவனம் - வாழ்க்கை. சேதித்து - சிதைத்து. மனனம்-மனப்பாடம். சவம் - பிணம். புராதன காலந்தொட்டு - பழங்காலந் தொடங்கி. கர்ண பரம்பரை - செவியாறுக. சுலோகம் - வடமொழிச் செய்யுள். ஊர்ஜிதப் பட்டு - உறுதி செய்யப்பட்டு. ஸ்திரமாகிவிட்டது - நிலைத்து விட்டது. பரிணமித்து — வளர்ந்து. பரிபூரண - மிக நிறைந்த. ரசமான-சுவையுள்ள. Blank Verse - மோனை எதுகையில்லாச் செய்யுட்கள். Lyric - பாடுவதற்கிசைந்த காவியம்.

பயிற்சி வினாக்கள்

1. பிராணிகள், தாவரங்கள்—இவை ஒவ்வொன்றிலுமுள்ள இரு வகை யமைப்பு முறைகளைத் தெரிவிக்க.

2. ஆச்சாரியார் நூல்களைப் பிரிக்கும் இருவகை யாவை? ஒவ்வொன்றனையும் உதாரணம் தந்து விளக்குக.

3. பாட்டிற்கும் அதனை உரைநடைப் படுத்திய உரை நடைக்கும் உள்ள வேறுபாட்டைத் தெரிவிக்க.

4. யானை இருந்தாலும் ஆயிரம் வெள்ளி, இறந்தாலும் ஆயிரம் வெள்ளி--இப்பழமொழி எதற்காக எடுத்தாளப்படுகிறது?

5. வால்மீகி ராமாயணத்திற்கும் கம்ப ராமாயணத்திற்கும் உள்ள வேறுபாடுகளைத் தொகுத்துரைக்க.

3. தமிழிசை

ராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரஞ்செட்டியார் பி.ஏ.,பி.எல்.

நமது முன்னோர்கள் தமிழை இயல் இசை நாடகம் என்ற முப்பகுதிகளாக வகுத்து வழங்கினர்; தமிழ்மொழியை முத்தமிழ் என்றும் குறித்தனர். ஆகவே, இம்மூன்று பகுதிகளுக்கும் ஒத்த சிறப்பு இருந்திருக்க வேண்டும். இயற்றமிழுக்கு எத்துணைச் சிறப்புத் தந்தனரோ அத்துணைப் பெருமை இசைக்கும் நாடகத்துக்கும் தந்திருக்கவேண்டும். பண்டைக் காலத்தில் இயற்றமிழுக்கு இலக்கியமும் இலக்கணமும் ஏற்பட்டாற்போல இசைத்தமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் ஏற்பட்டிருந்தன. சிலப்பதிகார உரையுள் அடியார்க்கு நல்லார் **இசை நுணுக்கம்** *முதலிய பல இசைநூல்களைக் குறிப்பிடுகிறார். அவைகளெல்லாம் மறைந்து போயின. இயல் இசை நாடகம் ஆகிய மூன்று பகுதிகளும் ஒருங்கு சேர்த்துச் செய்யப்பெற்ற நூல் ஒன்றே உள்ளது. அதுவே* **சிலப்பதிகாரம்** *என்பது.*

பின்வந்த தமிழ்மக்கள் இசைநூல்களையும் நாடகங்களையும் போற்றாமல் புறக்கணித்துவிட்டதன் காரணம் எளிதிற் புலப்படவில்லை. அரசியற் புரட்சி போன்ற ஏதேனும் ஒரு பெரிய விபத்தினால் இவை மறைந்திருத்தல் கூடும். எல்லாவற்றுக்கும் ஊழின் பெருவலியையே நொந்துகொள்ளவேண்டியிருக்கிறது.

இயல் ஒன்றே உயிர் பெற்று நின்றது. இசையும் நாடகமும் பல நூற்றாண்டுகளாகப் பாராட்டப்படாமற் போயின.

சங்கத்தார் காலத்துக்குப் பிறகு தமிழ்நாட்டில் சைவ வைணவ எழுச்சி வரும்வரையில் புத்த சமண சமயங்களின் மேம்பாடே இருந்துவந்தது. அச்சமயத்தினர் அறவொழுக்கத்தையே மும்முரமாகக் கொண்டனர். தவமே அவர்களது சிறந்த குறிக்கோளாதலால், இசையையும் நாடகத்தையும் அவர்கள் இன்பப் போக்கெனக் கருதி வெறுத்திருந்தனர் போலும். ஆகவே, அவர்களிடம் இயல்மாத்திரம் முன்னேற்ற மடைந்தது; இசை உறங்கிற்று; நாடகம் நடிப்பும் துடிப்புமற்றுக் கிடந்தது.

இங்நிலையில் சைவ சமயம் ஏழாவது நூற்றாண்டில் தழைக்கத் தொடங்கிற்று. சமயாசிரியர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவரும் இன்னிசையின் துணைகொண்டு தேவாரங்களை ஓதி மக்களைத் தம்வழிப்படுத்தினர்; இசைக்குள்ள கவர்ச்சிப் பண்பை நன்கறிந்து அதனைச் சமயப் பிரசாரம் செய்வதற்குப் பயன் படுத்திக்கொண்டனர். வாய்ப் பாட்டுக்குத் துணையாக யாழ், தாளம் முதலிய இசைக் கருவிகளையும் பயன்படுத்திக் கொண்டனர். திருஞானசம்பந்தருடைய இனிய குரலோசையோடு திருநீலகண்ட யாழ்ப் பாணருடைய இனிய யாழோசையும் கலந்தது; திரள் திரளாக மக்களைக் கவர்ந்தது; பதினாயிரம் போன்ற பெருந்தொகையாகத் திருநீற்றுத் தொண்டர் குழாம் எப்போதும் தொடர்ந்து வரும்படியாகச் செய்தது. இவ்விசையின் ஆற்றலையுணர்ந்த சுந்தரர் “நாளும் **இன்னிசையால் தமிழ் பரப்பும்** ஞான சம்பந்தன்” என்று வாயாரப் புகழ்ந்தார்.

ஏறக்குறைய 600 ஆண்டுகள் வரையில் இசைக்கு நல்ல ஆதிக்கம் இருந்தது. இக்காலத்திலேதான் தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருவிசைப்பா முதலியன தோன்றின. இவை பண்ணோடு பாடப்பட்டன. பெண் சுமந்த பாகத்தன் இப்பண்சுமந்த பாடல்கட்கு விண்சுமந்த வியன் கீர்த்தியையே பரிசாகப் படைத்தருளினான். இப்பெருங்கீர்த்தி இன்றும் நின்று நிலவுகின்றது; என்றும் நின்று நிலவும் தன்மை

யுடையது. இக்காலத்தில் தமிழ் நாடெங்கும் இசைமயமாகவே காணப்பட்டது. முதல் இராஜராஜ சோழன் தஞ்சைப் பெருவுடையார் திருத்தளியில் திருப்பதிகம் விண்ணப்பிக்க ஐம்பது ஓதுவார் மூர்த்திகட்கு மானியம் அளித்தனன். சிறப்புவாய்ந்த பல கோயில்களில் பெரிய திருப்பாட்டு ஓதவும் திருப்பதிகம் விண்ணப்பிக்கவும் திருநெடுந்தாண்டகம் திருவாய்மொழி முதலியன பாடுதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு, கல்வெட்டுக்கள் மூலம் சாசனங்களும் எழுந்தன. யாழ் வாசிப்பதற்கும், குழல் கொட்டி மத்தளம் முதலியவற்றை இசைப்பதற்கும் சாதனங்கள் பிறந்தன. ஏழிசையாய் இசைப்பயனாய்த் தமிழ்த் தெய்வம் விளங்கிற்று.

பிறகு சீவகசிந்தாமணி கம்பராமாயணம் போன்ற காவியங்களிலுள்ள கவர்ச்சியாலும், இராமாநுஜர் போன்ற சமயப் பெரியார்கள் நிகழ்த்திய தத்துவ ஆராய்ச்சியின் வலியாலும் தமிழ் மக்கட்கு இசையிலிருந்த ஈடுபாடு குறையத் தொடங்கிற்று. துறவிகட்கும் மடங்கட்கும் செல்வாக்கு அதிகரிக்கவே, இசைக்குள்ள ஆதரவு குறைந்துவந்தது.

பிறகு பதினைகாம் நூற்றுண்டில் தமிழ்நாடு விஜயநகர மன்னர் ஆட்சிக்குள்ளாயிற்று. அம்மன்னர் பிரதிநிதிகளாக வடவேங்கடத்திருந்து தென்குமரிவரையில் பல வடுகக் குறுநில மன்னர் ஆண்டனர்; இவர்களே நாயக்க அரசர்கள் எனப்படுவோர். இவர்கள் வடுகநாட்டிலிருந்து தங்களுடன் கருநாடக இசையையும் தெலுங்கு பாஷையையும் கொண்டு வந்தனர். தமிழ் நாடெங்கணும் கருநாடக இசையும், தமிழும் தெலுங்கும் ஆரியமும் கலந்த பாடல்களும் பரவின. இக்காலத்தில் விளங்கிய அருணகிரிநாதர் பாடல்களில் மிகுதியான வடசொற்களும் புதிய புதிய சந்தங்களும் மிளிர்கின்றன.

பின்வந்த மகாராஷ்டிர மன்னர்களும் கருநாடக இசையையும் வடமொழி விரவிய பாடல்களையுமே ஆதரித்தனர். பிற்காலத்திய தமிழ்ப் புலவர்களும் கீர்த்தனை, பதம், குறவஞ்சி, சிந்து முதலிய இசைப் பாடல்களைக் காலத்துக் கேற்றவாறு பாடினுர்கள். ஆகவே, 'செங்கோலுக்கு விஞ்சிய சங்கீதமில்லை' என்ற பழமொழிக்கு ஒரு புதிய உரை கூறுவது

போலவே, தமிழ்நாட்டின் இசை பரதேச உடைபோர்த்துப் பரதேச உணவருந்தி மறைந்தது. இக்காலத்தில் பற்பல இசைமன்றங்களும் இசைவாணர்களும் தோன்றியும் பண்டைய தமிழ்ப்பண் உயிர்பெற் றெழவில்லை. இனியேனும் இதையறிந்து இக்குறையைப் போக்குவோமாக.

இசைக்கு இன்றியமையாத பண்புகள் அளபெடையும் அடுக்குச் சொற்களுமேயாம். இப்பண்புகள் பண்டைக்கால முதல் வழங்கப்பெற்று வருகின்றன. இவை ஒவ்வொரு மொழியிலும் உள்ளன. அங்ஙனம் தமிழிலும் உள. அளபெடையைக் குறிப்பதற்கு ஒரு நெடுங்கணக்கு உண்டு. அதனை மேற்கு நாடுகளில் ஒரு தனி எழுத்துத் தொடராகவே கொண்டிருக்கின்ருர்கள். நமது நாட்டில் அதனை வடமொழிச் சார்பான மொழிகளில் ச, ரி, க, ம, ப, த, நி என்ற ஏழு எழுத்துக்களால் குறிக்கின்ருர்கள். தமிழில் முற்காலத்தில் அவ்வாறு இல்லை. அளபெடையை உயிர் எழுத்தானுல் நெடிலுக்குப்பின் அதைச் சார்ந்த குறில் எழுத்தின் சேர்க்கையாலும், மெய் எழுத்தானுல் அடுக்கிய ஒற்றுக்களாலும் குறித்து வந்தார்கள். உதாரணமாக, "பைந்தொடீஇ" "நமச்சிவாய வாஅழ்க", "அவனருளாலே அவன்ருள் வணங்கி" என்பவைகளில் காண்க. இசையில் அளபெடையின் மாத்திரை இன்னமும் நீளும். அளபெடையை வடமொழியில் ஆலாபனம் என்னலாம். அது, ச ரி க ம ப த நி என்ற எழுத்துக்களால் இக்காலத்தில் குறிக்கப்படும். அவ்வாறு குறிப்பதனுல் அதனை அநுசரித்து மற்றவரும் எளிதில் பாடலாம். மேற்கு நாட்டு மொழிகளிலும் மேற்கூறிய தனி எழுத்து மூலமாகவும் பாட முடியும்.

தமிழில் அளபெடையைத் தவிர வேறு குறியெழுத்துக்கள் பயிலாத நிலைமையினுல் பண்டைய இசைமுறைகளை நாம் அறிவதற்கு இடமில்லை. (ஆங்கிலத்தில் இதனை **Notation** என்பார்கள். கர்நாடகத்தில் சுவரம் என்பார்கள்.) ஆனுல் அடுக்குச் சொற்களோ எக்காலத்திலும் இருந்தன என்னலாம். பண்டைக் காலத்தில் அடுக்குச் சொற்கள் பாடல் நடுவிலே வரும். உதாரணமாக,

"திங்கள் மாலை வெண்குடையான் சென்னிசெங்கோ லதுவோச்சிக்
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி !
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கைமாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி !"

இறுதியில் வருவன :

"மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே." —சிலப்.

இக்காலத்தில் வடமொழி கருநாடகப் பழக்கத்தை அநுசரித்து, முதலில் அடுக்குச் சொற்கள் வருகின்றன. அந்த முறைக்குப் பல்லவி, அநுபல்லவி என்று பெயர்.

முற்காலத்தில் மோனை, எதுகை முதலியவையே யன்றி இயைபுத் தொடையும் இருந்தது ; ஆனால் மிகக் குறைவு. கலம்பகச் செய்யுட்களில் அவை வரும்.

"ஆலநீழ லுகந்த திருக்கையே
ஆனபாட லுகந்ததி ருக்கையே
பாலினேர்மொழி யாளொரு பங்கனே
பாதமோதலர் சேர்புர பங்கனே
கோலநீறணி மேதகு பூதனே
கோதிலார்மன மேவிய பூதனே
ஆலநஞ்சமு துண்டக ளத்தனே
ஆலவாயுறை யண்டர்க ளத்தனே. —தேவாரம்

இக்காலத்தில் சிந்துக்களில் அது பெரும்பாலும் வருகின்றது.

செய்யுள் நடையிலும் மிகுந்த மாறுதல் உண்டு. முற்காலத்து இசையிலும் செய்யுணடை சிறந்திருந்தது. இயலுக்கு இருந்த முழுச் சிறப்பும் இசைச்செய்யுளுக்கும் இருந்தது. அருணகிரிநாதர் காலத்தில் வடமொழிக் கலப்பு அதிகமாயிற்று. அண்மைக் காலத்திலே வெறும் பேச்சு நடையையே இசைக்கும் கொள்ளுகிறார்கள்.

அருஞ்சொற் பொருள்

புறக்கணித்து - வெறுத்து. கவர்ச்சிப் பண்பு - தன் வசமாக்கும் இயல்பு. ஆதிக்கம் - ஆட்சி. பெண் சுமந்த பாகத்தன் - பார்வதியைத் தன் பாதியில் கொண்டுள்ள சிவபெருமான். திருத்தளி – கோயில். திருப் பதிகம் - பத்துப் பாடல்கள் கொண்ட பகுதி. மானியம் - இறும் நிலம். . ஏழிசை - குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்னும் ஏழு இசைகள். விஞ்சிய - மேற்பட்ட. அளபெடை - எழுத்துக்கள் மாத்திரை மிகுந்து ஒலித்தல். சென்னி - சோழன். புலவாய் - பிணக்குக் கொள்ளா திருப்பாயாக. கயல் கண்ணாய் - மீன் போன்ற கண்ணையுடையவளே. சோவரணும் - 'சோ' என்னும் பெயருடைய வாணனது மதில். சேவகன்- வீரன். பங்கன் - பங்கிலிருப்பவன். பங்கன் - அழித்தவன். களத்தன் – கண்டத்தையுடையவன். ஆலவாய் - மதுரை. அண்டர்கள் அத்தன் - தேவர்களுக்குத் தலைவன்.

பயிற்சி வினாக்கள்

1. முத்தமிழ்ப் பகுதிகளும் ஒருங்கே அமைத்த நூல் எது ?
2. புத்த சமண சமயங்களின் வளர்ச்சியால் முத்தமிழ் அடைந்த நிலையை வரைக.
3. சைவ சமயம் தழைத்தமையால் தமிழிசைக் குண்டான பெருமையை வரைக.
4. இசைக்கிருந்த ஆதரவு குறையக் காரணம் என்ன?
5. தமிழ் நாட்டின் இசை பரதேச உடை போர்த்து மறைந்த தன்மையை வரைக.

4. குண்டலகேசி

திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், எம். ஏ.

சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டல கேசி, வளையாபதி என்ற இவை ஐந்தும் ஐம்பெருங்காவியங் கள் எனப்படும். இந்த ஐந்தினுள் சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற இரண்டும் மற்ற மூன்று நூல்களுக்கும் காலத்தால் முற் பட்டன. அவ்வாறு இருந்தும் சுவை காரணத்தாலோ அன்றிப் பிற காரணத்தாலோ சிந்தாமணி முன்னர் வைக்கப்பட்டுள் ளது. பஞ்சகாவியம் என்ற தொகுதி வடமொழியில் உண்டு. ஹர்ஷகவி இயற்றிய நைடதம், பாரவி இயற்றிய கிராதார் ஜுனீயம், காளிதாச கவி இயற்றிய இரகுவம்சம் குமாரசம்ப வம், மாககவி இயற்றிய சிசுபாலவதம் ஆகிய இவை வட

மொழியில் பஞ்சகாவியம் எனப்படும். காவியத்தின் இலக்கணம் யாது என நோக்குவோம். கவியால் செய்யப்படுவது காவியம். தமிழில் பொருள் தொடர்நிலைச் செய்யுளையே காவியம் என வழங்குவர். காவியம், பெருங்காவியம், சிறு காவியம் அல்லது காப்பியம் என இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இனி, பெருங்காவியத்தின் இலக்கணத்தைக் காண்போம். பெருங்காவியம் பாயிரத்தில் வாழ்த்து, தெய்வ வணக்கம், எடுத்துக்கொண்ட பொருள் முதலியவற்றுள் ஒன்றினை ஏற்றுவரும். அறம் பொருள் இன்பம் வீடு என நாற் பொருளைப் பற்றியும் கூறும். காவியத்திற்குச் சிறந்த தலைவன் ஒருவன் உண்டு. இதில் மலை, கடல், நாடு, நகர், பருவம், ஞாயிற்றின் தோற்றம், திங்களின் தோற்றம் முதலியவை பற்றிய வருணனைகள் கூறப்பெற்றிருக்கும். இது திருமணம், முடிசூட்டு விழா, புனல் விளையாட்டு, பொழில் விளையாட்டு, மக்கட்பேறு, தூது, போர் முதலிய இன்னோரன்னபிற பொருள்களைப் பற்றிக் கூறுவதுடன் சருக்கம் இலம்பகம் முதலிய பிரிவுகளைக் கொண்டு எண்வகைச் சுவைகளும் நிரம்பப்பெற்றதாகும். இதுவே பெருங்காவியத்தின் இலக்கணமாகும். அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கனுள் ஒன்றுவது பலவாவது கூறப்படாவிடில் அது சிறு காப்பியமாகும்.

ஐம்பெருங் காவியங்களுள் சிந்தாமணியும் சிலப்பதிகாரமும் சைன சமயச் சார்பான காவியங்களாம். மணிமேகலையும் குண்டலகேசியும் பௌத்த சமயக் காவியங்கள். வளையாபதியைச் சைன சமயக் காவியம் என்பர். அதனைப் பௌத்த சமயக் காவியம் எனக் கூறுவாருமுளர். ஐம்பெருங் காவியங்களுள் சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற மூன்றினையும் மகா மகோபாத்தியாய, டாக்டர் உ. வெ. சாமிநாத ஐயர் அவர்கள் சிறந்த முறையில் பதிப்பித்துள்ளனர். குண்டலகேசி வளையாபதி என்ற இருகாவியங்களும் இதுவரையில் முற்றும் தனிப்பட்ட நூல்களாக வெளி வரவில்லை. எனவே, நமக்குக் கிடைக்காது மறைந்து போன நூல்களுள் குண்டலகேசியும் ஒன்றாகும். புறத்திரட்டு என்ற நூலின் வாயிலாக 19 குண்டலகேசிச் செய்யுட்கள் நமக்குத் தற்போது அகப்பட்டுள்ளன. தொல்காப்பிய உரை, வீரசோழிய உரை, யாப்பருங்கல

விருத்தியுரை முதலிய இலக்கண நூல்களில் குண்டல கேசியைப்பற்றிச் சில குறிப்புகள் காணப்படுகின்றன. சைவ சித்தாந்த சாத்திரம் 14-ல் ஒன்ருன சிவஞான சித்தியார் பர பக்கத்திற்கு ஞானப்பிரகாசர் இயற்றிய உரையில் குண்டல கேசிச் செய்யுள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இதற்குக் குண்டலகேசி விருத்தம் என்ற ஒரு பெயரும் உண்டு என்பதும், இதில் கலித்துறைகள் வந்துள்ளன என்பதும் வீர சோழிய உரையினுல் விளங்குகின்றன. யாப்பருங்கல உரையாசிரியர் குண்டலகேசியைத் தருக்க நூலில் அடக்குவர். ஆகவே இது வைதிக சமயத்தினையும் சைன சமயத்தினையும் தருக்க முறையில் கண்டித்துள்ளது என்பது பெறப்படுகின்றது. இந்நூலை இயற்றியவர் நாதகுத்தனுர் என்பது நீலகேசி உரையால் அறியப்படும். இவரது காலம் கி. பி. 5-ஆம் நூற்ருண்டு என்பர். இந்நூலில் விளங்காத சொல்லும் பொருளும் பல இருந்தன என்பது வீர சோழிய உரையால் விளங்குகின்றது. அவ்வுரையாசிரியர் இதனை அகலக்கவி என்பர். மணி மேகலை என்ற காவியம் அக்காவியத் தலைவியின் பெயரால் வழங்கபடுவதுபோல் குண்டலகேசியும் அக்காவியத் தலைவியான குண்டலகேசியின் பெயரால் வழங்கப்படுகின்றது. குண்டலகேசியின் வரலாறு பாளிமொழியில் எழுதப்பட்ட "தேரிகாதை" என்ற பௌத்த நூலிலும், தம்மபாதா என்ற பௌத்த நூலிலும் காணப்படுகின்றது. இனி அவளது வரலாற்றினை நோக்குவோம்.

இராசகிருகம் என்ற நகரத்தை ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவனது ஆட்சியில் பொருட் காப்பாளனுக இருந்த ஒருவனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்குப் பத்திரை எனப் பெயரிட்டனர். மங்கைப் பருவம் எய்திய பத்திரை ஒரு நாள் தன் மாளிகையின் மேல் மாடியில் உலாவிக்கொண்டிருந்தாள். அதுபோழ்து அவ்வூர்ப் புரோகிதன் மகன் சாதுகன் என்பவன் வழிபறித்தல் என்ற குற்றத்தைச் செய்ததால் அவனைச் சேவகர்கள் கொலைக்களத்திற்கு அழைத்துச் சென்றனர். நீலகேசியில் சாதுகனுடைய பெயர் காளன் எனக் குறிக்கப்பட்டுள்ளது. கட்டழகு மிக்க சாதுகனைக்

கண்ட பத்திரையின் மனம் பள்ளத்துட் பாயும் வெள்ளம் போல் சாதுகனை அடைய எண்ணியது. அவள் சாதுகனையே மணம் புரிந்துகொள்ள வேண்டுமென்றும் அன்றேல் உயிர் விடப்போவதாகவும் கூறினள். அவளது வார்த்தையைக் கேட்ட அவள் தந்தை தனது மகளிடத்தே கொண்டுள்ள அன்பின் மிகுதியால் அச்சேவகர்களுக்குக் கைக்கூலி கொடுத்துச் சாதுகனை மீட்டு, அவன் பத்திரையை மணம் புரியுமாறு செய்தான். பத்திரையும் சாதுகனும் சிறிது காலம் வாழ்க்கையை இன்பமாக நடத்தி வந்தனர்.

ஒருநாள் அவர்களுக்குள் ஒரு ஊடல் நேர்ந்தது. அப்போது பத்திரை சாதுகனை நோக்கி "நீ முன்பு கள்வன் அல்லனோ" எனக் கூறினள். இதைக் கேட்ட சாதுகன் மிக்க கோபங்கொண்டானேனும் தனது கோபத்தை வெளிக்காட்டாது அடக்கிக்கொண்டான். மனைவி அணிந்திருந்த அணிகலன்களை எல்லாம் எடுத்துக்கொண்டு அவளை விட்டு விலகவேண்டும் என்ற தீய எண்ணம் அவன் உள்ளத்தில் குடிகொண்டது. இதனால் அவன் ஒரு நாள் தன் மனைவியை நோக்கி "பத்திரை! என் உயிரை முன்பு காப்பாற்றிய தெய்வத்திற்கு யான் காணிக்கை கொடுத்து வழிபடுவதற்காக ஒரு மலை உச்சிக்குப் போகப் போகின்றேன். நீயும் அதற்குக் காணிக்கை கொடுத்து வழிபடுவதற்கு என்னுடன் வருதல் வேண்டும்" என்றனன். இதைக்கேட்ட பத்திரை உயர்ந்த அணிகலன்களை அணிந்து கொண்டு சாதுகனுடன் மலை உச்சிக்குச் சென்றனள். கள்ளத்தனமுடைய சாதுகன் தன் தலைவியை நோக்கி, "பத்திரை! நீ அன்று என்னைக் கள்வன் என்று கூறினாய். ஆதலால் யான் உன்னை இப்போது கொல்லப் போகிறேன். நீ இறப்பதற்கு முன் உன் வழிபடு கடவுளை நினைத்துக்கொள்" என்றான். இதனைக் கேட்ட அவள் "தற்கொல்லியை முற்கொல்லிய" என்பதற்கேற்ப அவன் தன்னைக்கொல்வதன் முன் தான் அவனைக் கொல்ல வேண்டுமென்ற கருத்தினை உட்கொண்டு அவன் கட்டளைக்கு அடங்கி நடப்பவள்போல் நடித்து "ஐயனே! எனது கணவராகிய தங்களைத் தவிர வேறு தெய்வம் எனக்கு இல்லை, ஆதலின் யான் உங்களை வலம் வந்து பணிகின்றேன்" எனக் கூறி வலம் வருவதுபோலப் பின் சென்று அவனை

மலையுச்சியினின்றும் தள்ள அக்கள்வன் கீழே விழுந்து இறந்தான்.

கணவன் இறந்த பின்னர்ப் பத்திரை இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டு சைன மதத்தின் ஒரு பிரிவாகிய நிகண்டவாதிகளின் கூட்டத்தைச் சேர்ந்தாள். அவர்கள் அவளைத் தம் மதத்துள் சேர்த்துக் கொண்டனர். அம்மத வழக்கப்படி பத்திரையின் கூந்தல் நீக்கப்பட்டது. ஆனால் அக் கூந்தல் மீண்டும் சுருண்டு வளர்ந்ததால் அவளை எல்லோரும் குண்டலகேசி என அழைத்தனர். குண்டலகேசி என்பது சுருண்ட கூந்தலையுடையவள் எனப் பொருள்படும்.

சைன சமயத்தினைச் சார்ந்த குண்டலகேசி அந்தச் சமயத்தின் கொள்கைகளையும் சாத்திரங்களையும் நன்கு கற்றுச் சமய வாதம் புரியப் புறப்பட்டுப் பல ஊர்களுக்குச் சென்றாள். சமயவாதம் செய்பவர் ஊர் நடுவில் மணல் மேட்டில் சமயவாதம் செய்யப் போவதாகக் குறிப்பிடவேண்டி ஒரு நாவல் மரக் கிளையை நடுவது அக்கால வழக்கமாகும். அவ்வாறே குண்டலகேசி சிராவஸ்தி என்ற ஊரின் நடுவில் ஒரு மணல் மேட்டில் சமய வாதத்தின் நிமித்தம் ஒரு நாவல் மரக்கிளையை நட்டுவிட்டுத் தான் உணவு பெறுதற்கு வெளியே சென்றாள். புத்தரின் சீடருள் ஒருவரான சாரிபுத்தர் என்பவர் குண்டலகேசியுடன் வாதம் புரிவதற்குச் சில சிறுவர்களைக் கொண்டு அம் மரக்கிளையைப் பிடுங்கி எரியும்படி செய்தார். வெளியே சென்ற குண்டலகேசி திரும்பி வந்து நடந்ததைக் கண்டு சாரிபுத்தருடன் வாதம் புரிந்து தோற்றுப்போய் அவரது குருவாகிய புத்தரைக் கண்டு வணங்க, புத்தர் அவளுக்கு உபதேசம் செய்து குண்டலகேசியைப் பௌத்த மதத்தில் சேர்த்துக்கொண்டார். இதுவே குண்டலகேசியின் வரலாற்றுச் சுருக்கமாகும். சூடாமணிப் புலவர் என்பவர் இயற்றிய வைசிய புராணத்தில் 34-வது சருக்கமாகிய "பஞ்சகாவியத் தலைவரில் காவேரி குண்டலகேசி பெற்ற சருக்கம்" என்பதில் மேலே காட்டிய குண்டலகேசி வரலாற்றிற்கு ஒரு சிறிதும் பொருத்தமில்லாத வேறு ஒரு கதை கூறப்பட்டுள்ளது. குண்டலகேசி என்பது பௌத்த சமயச்சார்பான நூலாகும். இதில் கண்ட பௌத்த

சமயக் கொள்கைகளை மறுப்பதற்காகவே நீலகேசி என்ற சைன நூல் தோன்றிய தென்பது சிறு காப்பியங்கள் ஐந்தனுள் ஒன்ருன நீலகேசியால் அறியலாகும். தற்போது நீலகேசி என்ற நூல் நமக்குக் கிடைத்துள்ளது. ஆனல் நாம் குண்டலகேசியை இழந்து விட்டோம்; இதனைத் தேடிக் கண்டுபிடித்து வெளி யிடுதலே தமிழ்த் தாய்க்கு நாம் செய்யும் தலையாய பணியாகும்.

அருஞ்சொற் பொருள்

பஞ்ச காவியம் - ஐந்து காவிய நூல்கள். இன்னோரன்ன - இவை போன்ற. எண்வகை - எட்டு வகை. சுவை எட்டு: நகை, அழுகை, இளி வரல், மருட்கை, அச்சம், பெருமிதம், உவகை, வெகுளி. அணிகலன் - ஆபரணம்.

பயிற்சி வினுக்கள்

1. ஐம்பெருங் காப்பியங்கள் யாவை ?
2. வடமொழி பஞ்ச காவியங்கள் எவை ?
3. காவியத்தின் இலக்கணம் யாது ?
4. சிறு காப்பியம், பெருங் காப்பியம் - இவற்றின் வேறுபாடு என்ன ?
5. குண்டலகேசி வரலாற்றைச் சுருக்கி வரைக.

5. தம்பிக்கு—கடிதம்

டாக்டர். மு. வரதராசனர், எம். ஓ. எல்.

அன்புள்ள தம்பி,

இனி எந்த முயற்சி செய்தாலும், தமிழராகிய நாம் சிறு பான்மையோர் என்பது நினைவில் நிற்கவேண்டும். கிணற்றுக் குள் இருக்கும் தவளை கடலில் வாழ்வதாக எண்ணுமாம். அதுபோல், வடவேங்கடம் தென்குமரி எல்லைகளைப் பார்த்துக் கொண்டு நாம் பெரிய இனம் என்று இறுமாப்புக் கொண்டால் அது வீழ்ச்சிக்கு வித்தாகிவிடும். அந்த எண்ணம் நீராவி கண்டு பிடிக்கப்படுவதற்கு முன்பு இருந்திருக்கலாம்; தவறு இல்லை. அந்தக் காலத்தில் போக்கு வரவு குறைவு; ஒரு நாட்டுக்கும் மற்ற நாடுகளுக்கும் தொடர்பு குறைவு. வடவேங் கடம் தென்குமரி என்ற எல்லைகளை மட்டும் அன்று பார்த்துப்

பெருமிதம் கொண்டிருந்ததால் தீங்கு ஒன்றும் இல்லை. இன்று நிலைமை முற்றிலும் மாறியுள்ளது. வடதுருவத்தையும் தென் துருவத்தையும் ஆப்பிரிக்காவையும் அமெரிக்காவையும் பார்த்து நாம் எம்மாத்திரம் என்று எண்ணவேண்டிய காலம் இது. நாம் சிறுபான்மையோர் என்று உணர்வதற்கு உலகத்தைப் பார்க்கத் தவறினும் இந்தியாவைப் பார்த்தால் போதும். இந்தியர் முப்பத்தைந்து கோடி. தமிழர் மூன்று கோடி. சிறுபான்மையோர்தானே?

சிறுபான்மையோர் எந்த முயற்சி செய்தாலும் ஒற்றுமையும் கட்டுப்பாடும் கட்டாயம் தேவை. இந்த இரண்டும் இருந்திருந்தால், தமிழர் வல்லமையான இனம் என்ற எண்ணம் டில்லிக்கு ஏற்பட்டிருக்கும். அதற்கு மாருகவே இப்போது உள்ளது. இப்போது தமிழரைப் பற்றிப் பிறர் என்ன நினைக்கின்ருர்கள்? மூளையர் சிலரும், முரடர் சிலரும், ஏமாளிகள் பலரும் உள்ள கூட்டம் தமிழர் என்றுதான் நினைக்கின்ருர்கள். ஆங்கிலேயர் லண்டனில் தலைமை நிலையமும் டில்லியில் கிளை நிலையமும் வைத்து ஆட்சி நடத்திய போதும் அப்படித்தான் நினைத்தார்கள். தமிழரில் மூளையரை விலை கொடுத்து வாங்கி விடுவது, முரடரை நயத்தாலும் பயத்தாலும் அடக்கிவிடுவது— இந்த இரண்டும் செய்தால் போதும்; மற்றத் தமிழர் பேசாமல் கிடப்பார்கள். இப்படித்தான் வெளியார் நம்மைப் பற்றிக் கருதுகிருர்கள்.

அதற்கு ஏற்ருற்போலவே, நாம் நம்முடைய பொதுத் தேவைகளுக்காக ஒன்றுபட்டுப் போராடுவதில்லை. ஆனால் நமக்குள் இருக்கும் கட்சி வேறுபாடுகளுக்காகப் பிரிந்தும் பிளந்தும் போராடுவதில் மட்டும் வீரம் காட்டி வருகிருேம். இந்த வேறுபாடுகளும் இருக்கலாம்; ஒரு மூலையில் இருக்கலாம்; மேடையில் இருக்கவேண்டியதில்லை. இங்கிருக்கும் பத்திரிகைகளும் பொதுப் போராட்டங்களுக்கு விளம்பரம் தருவதில்லை; சில்லறைப் பூசல்களையே விளம்பரப்படுத்துகின்றன; சேர்ந்து தாளமும் போடுகின்றன.

தமிழரிடையே பொதுவாகப் பிரிக்கும் ஆற்றல் வளர்ந்துவிட்டிருக்கிறது; பிணைக்கும் ஆற்றல் வளரவில்லை. ஒருமேடை

யில் இரண்டு கட்சிகள் சேர்ந்து பொதுத்தேவை பற்றிப் பேசுவது தமிழகத்தில் கண்டு வியக்கும்படியான புதுமையாகவே உள்ளது. அது என்றைக்குப் பழக்கமான-இயல்பான-நிகழ்ச்சியாகப் பெருகுமோ, தெரியவில்லை.

தேர்தல் காலங்களில் தமிழரைக் கண்டு மற்றவர்கள் சிரிக்கிறார்கள். ஓர் இடத்திற்குப் பத்துப் பதினைந்துபேர் நின்று போட்டியிடுவார்கள். கடைசியில் தமிழரல்லாத ஒருவன் தன்னைச் சார்ந்தவர்களின் ஓட்டுக்கள் எல்லாவற்றையும் சிதறாமல் ஒருசேரப் பெற்று இத்தனைத் தமிழரையும் தோற்கடித்து விடுவான். பிறகு அந்தப் பொது எதிரியைக் கண்டு இத்தனைப் பேரும் நாணித் தலைகுனிந்தாலும் ஒருபடி முன்னேற்றம் என்று கருதலாம். அவன் வென்றானே என்று கவலைப்படுவதற்கு மாறாக, தன்னோடு போட்டியிட்ட தமிழர்கள் தோற்றதை நினைந்து ஒவ்வொரு தமிழனும் தனித்தனியே மகிழ்வான். பொதுவாகத் தமிழினம் தோற்கிறதே என்ற உணர்ச்சி தோன்றுவதில்லை; மற்றத் தமிழரை வீழ்த்தியது பற்றிய வீணான வீர உணர்ச்சியே தோன்றுகிறது. தன் இரண்டு கண்களும் போனாலும் சரி, தன் எதிரியின் ஒரு கண்ணாவது போகவேண்டும் என்று ஒருவன் முயன்றதாகக் கதையில் படித்திருப்பாய். அத்தகைய வீண்வீரம்-வீரம் அல்ல, ஆணவம்-தமிழரிடையே மிகுதியாக உள்ளதே!

இவற்றை எல்லாம் எண்ணிப் பார். தமிழன், பொதுவாக, தன்னலம் மிகுந்தவன் என்று உணரலாம். தனித்தனியே தன்னலம் நாடிப் பொதுநலம் மறக்கும் கூட்டம் எப்படி ஒற்றுமை அடைய முடியும்? மற்ற இனத்தாரை விடத் தமிழர்க்குள் தன்னலம் மிகுதியா என்று நீ கேட்கலாம். ஆம் என்றே மறுமொழி சொல்லத் தோன்றுகிறது.

எண்ணிப்பார்; நான் தோற்றாலும் சரி, நம்மவன் எவனாவது வெற்றி பெறட்டும் என்ற உயர்ந்த எண்ணம் எத்தனைத் தமிழரிடையே காணமுடியும்? என் சொந்தக் கொள்கை புறக்கணிக்கப்பட்டாலும் சரி, தமிழினம் வளர்ந்து செழிக்கட்டும் என்ற உயர்ந்த நோக்கம் எத்தனைத் தமிழரிடையே காணமுடி

யும்? என் கட்சி அழிந்தாலும் சரி, தமிழ்நாடு வாழ்ந்து விளங்கட்டும் என்ற உயர்ந்த குறிக்கோள் எத்தனைத் தமிழரிடையே காணமுடியும்? தமிழரிடையே தன்னலம் மிகுதியா, பொதுநலம் மிகுதியா என்று ஆராய்ந்து அறிவதற்கு இந்த மூன்று 'பரீட்சை' வைத்துப்பார். நான் சொல்வதன் உண்மை தானாகவே விளங்கும்.

விதிவிலக்கு உண்டு. உயர்ந்தவர்கள் தமிழினத்தில் இல்லாமற் போகவில்லை; ஆனால் அத்தகையவர்கள் மிகச் சிலரே; ஒரு சிலரே. அவர்களால் மட்டும் நாடு முன்னேறி விட முடியுமா? ஒற்றுமை ஏற்பட முடியுமா? பொதுவாக மக்களின் மனம் சீர்ப்பட்டால்தானே முடியும்?

பொதுவாக, தமிழன் முதலில் தன்னை நினைக்கிறான்; தன்னையே நினைக்கிறான். பிறகுதான் சில வேளைகளில் மேற்போக்காக மொழியையும் நாட்டையும் நினைக்கிறான். இவ்வளவு தன்னலம் முதிர்ந்திருப்பதால்தான், மிகப் பழங் காலத்திலிருந்தே பண்பாடு மிக்க இனமாக விளங்கி யிருந்தும் இன்று தாழ்வான நிலையில் கிடக்கின்றது.

தன்னலம் மிகுந்தவனாக முதலில் தன்னையே நினைப்பவனாகத் தமிழன் இருக்கிறான் என்பதற்கு இன்னொரு சான்று சொல்லட்டுமா? தமிழன் ஒருவன் அதிகாரி ஆனால், தான் அதிகாரி என்ற எண்ணமே அவனுக்கு எப்போதும் இருக்கிறது. அலுவலகத்தை விட்டு வெளியே வந்த பிறகும் மாலை 5 மணிக்குப் பிறகும், ஞாயிற்றுக்கிழமை முதலிய விடுமுறை நாட்களிலும், கோயில் முதலிய பொது இடங்களிலும், விருந்து முதலிய பொது நிகழ்ச்சிகளிலும் அதிகாரி என்ற எண்ணமே நிறைந்து, மற்றவர்களிடமிருந்து விலகி உயர முயல்கின்றான். குடும்பத்தில் மனைவிமக்களின் முன்னும் அதிகாரியாகவே விளங்குவான் போலும்! ஆங்கிலேயன் அப்படி அல்ல என்பது சொல்லாமலே அறிவாய். அலுவலகத்தில் ஆங்கிலேயன் கடுமையாக நடந்துகொள்வான்; மாலை 5 மணிக்குப்பின் விளையாட்டுக் கழகத்தில் தோழன்போல் பழகுவான்; விருந்தில் களித்து மகிழ்வான்; கோயிலில்

அமைந்து ஒழுகுவான். காரணம் என்ன? அவன் மனம் இடத்திற்கும் வேளைக்கும் சூழ்நிலைக்கும் நெகிழ்ந்து மாறி அமைகின்றது. அவன் உள்ளத்திலும் தன்னலம் உண்டு; ஆனால் குறைவு; அதனால்தான் அவன் நெகிழ்ந்து தோழனாக, மனிதனாக, அன்பனாக மாறி அமைய முடிகின்றது. தமிழனுடைய தன்னலமோ, இடம் வேளை சூழ்நிலை மொழி நாடு எதுவும் ஊடுருவி இடம் பெறாதவாறு இறுகியுள்ளது. அதனால் தமிழரில் அதிகாரி எங்கும் அதிகாரியாகவே இருக்கிறான்; கட்சி ஆள் எங்கும் (பொதுமேடையிலும் பொது இடங்களிலும்) கட்சி ஆளாகவே இருக்கிறான்.

தமிழனைத் தனியே பெயர் சொல்லிப் பழித்துப்பார் உடனே சீறி விழுவான். ஆனால், அவனுடைய நாட்டையும் மொழியையும் இனத்தையும் பழித்துச் சொல்; பொறுமையோடு கேட்பான். ஆங்கிலேயனைத் தனியே பழித்துப் பார்; உன்னைப் புறக்கணிப்பான். அவனுடைய நாட்டையும் மொழியையும் பழித்துச் சொல்; பகையுள்ளம் கொள்வான். காரணம் மேலே சொன்னதுதான். தன் மொழியைவிடத் தன் நாட்டைவிடத் தானே முக்கியம் என்ற எண்ணம் தமிழனிடம் அவனை அறியாமல் ஊறிக்கிடக்கிறது. அது மட்டும் அல்ல; கட்சிப் பற்று மிகுந்தவனாய்த் தோன்றும் தமிழனும், நெருக்கடி நேருமானால், கட்சி நலத்தைவிடத் தன்னலத்தையே பெரிதாக நாடுவான். கட்சி சீர்குன்றினாலும் தான் வாழ வேண்டும் என்று முயலவும் முயல்வான். இந்நிலையில் இவனுடைய நாட்டுப் பற்றையும் மொழிப்பற்றையும் என்ன என்று சொல்வது?

உண்மையான நாட்டுப் பற்று இருக்குமானால், நாட்டை நினைக்கும்போதாவது தன்னை-தன்னலத்தை-மறக்க வேண்டாமா? அவ்வாறு மறக்கும் பண்பு இருந்தால், நாட்டின் பொதுத் தேவைகளுக்காகப் போராடும்போது ஒற்றுமை தானே ஏற்படாதா? ஒற்றுமை இல்லாதிருப்பதற்குக் காரணம் இப்போது விளங்கும் என எண்ணுகிறேன். பொதுத் தேவையை முதன்மையாக எண்ணும் மனம்தான் பலரையும்

பிணைக்க முடியும். தன்னையே முதன்மையாக எண்ணும் மனம் சேர்ந்தவர்களையும் பிரிக்கவே முயலும்.

தேர்தல் சில ஆண்டுகளுக்கு ஒருமுறை வருகிறது. அன்றுமட்டும் திடீரென்று ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக் கும் உரிய வகையில் கடமையைச் செய்ய முடியுமா ? எதுவும் பழக்கத்தில் வந்திருந்தால்தான் முடியும். ஒற்றுமைக்கும் முன் னேற்றத்துக்கும் உரிய வகையில் பலநாளும் பழகியிருந்தால், ஒருநாள் கூத்தாக நடைபெறும் தேர்தலிலும் அவ்வாறு நடந்து வெற்றி காணமுடியும்.

ஒரு கதை சொல்வார்கள். இரும்பைப் பொன்னாக்கும் கல் ஒன்று ஒரு மலையோரத்தில் இருப்பதாக ஒரு மந்திரவாதி சொன்னானாம். ஒரு சிறு இரும்புத் துண்டைக் கையில் வைத் துக்கொண்டு, அங்கிருக்கும் கற்களை ஒவ்வொன்றாக எடுத்து அதன்மேல் வைத்துப் பார்க்கச் சொன்னானாம். எந்தக் கல்லை வைத்தவுடன் அந்த இரும்பு பொன்னாகிறதோ அதுவே மந்தி ரக்கல் என்றானாம். கேட்டவன் அவ்வாறே மலையோரத்தில் நின்றுகொண்டு ஒவ்வொரு கல்லாக எடுத்து இரும்பின்மேல் வைத்து, அது பொன்னாகாதது கண்டு உடனே வீசி எறிந்து வந்தானாம். வீசிய கற்கள் குவியல் குவியலாகக் குவிந்தன வாம். அவனும் இரவு பகலாகக் கற்களை எடுத்து எடுத்து எறிந்து களைத்துவிட்டானாம். கடைசியில் ஒருநாள் திடீரென இரும்புத் துண்டு பொன்னாக ஒளிவீசியதாம். ஆனால், பாவம், அதற்குள் பொன்னாகிய அந்தக் கல் கையைவிட்டுப் போய் விட்டதாம். எறிந்து எறிந்து பழகிய பழக்கத்தால் உடனே அந்த மந்திரக் கல்லையும் கை எறிந்துவிட்டதாம். அவன் கதி என்ன ஆயிற்று? அப்படித்தான் தேர்தலிலும் பிரிக்கும் ஆற்றல் வளர்வதைக் காண்கின்றோமே தவிர, பிணைக்கும் ஆற்றலைக் காணோம். காரணம், பழக்கம்தான். மற்றக் காலங்களில் பிறர்மேல் பொறாமை கொண்டும், பிறர் மனத் தைப் புண்படுத்தியும், சேர்ந்தவர்களைப் பிரித்தும் தமிழர் வாழ்கின்றனர். இந்தப் பழக்கம் அன்றாட வாழ்க்கையில் ஊறிப்போன பிறகு, திடீரென ஒருநாள் காலையில் மாற்றிவிட முடியுமோ? முடியாது. அதனால் தேர்தலிலும் பொறாமை,

இடையூறு, பகை இவைகளே விளைகின்றன. மந்திரக்கல் தேடியவனைப் போல் களைத்துச் சோர்வடைவதே கண்ட பயன்.

உன் அன்புள்ள,
வளவன்.

அருஞ்சொற் பொருள்

இறுமாப்பு - செருக்கு. வீழ்ச்சி - அழிவு. வித்து - காரணம். பெருமிதம் - பெருமை. பிணைக்கும் - சேர்க்கும். புறக்கணித்தல் - வெறுக்கப் படுதல். குறிக்கோள் - நோக்கம். சான்று - எடுத்துக் காட்டு.

பயிற்சி வினாக்கள்

1. தற்காலம் தமிழர் சிறுபான்மையோர் என்று எண்ண வேண்டிய காலம்—விளக்குக.
2. தற்காலத்தில் தமிழரைப்பற்றிப் பிறர் என்ன நினைக்கின்றார்கள்? அவர்கள் நினைப்பதற்கேற்பத் தமிழர் எங்ஙனம் நடந்து வருகிறார்கள்?
3. தமிழரிடை எப்படிப்பட்ட ஆணவம் மிகுந்துள்ளதாக எடுத்துக் காட்டப்படுகிறது?
4. தமிழன் தன்னலம் மிகுந்தவனா பொதுநலம் மிகுந்தவனா என்று அறியத்தக்க மூன்று பரீட்சைகள் யாவை?
5. பண்பாடு மிக்க இனமென விளங்கிய தமிழினம் இன்று தாழ்வான நிலையிலிருக்கக் காரணமென்ன?
6. ஆங்கிலேய அதிகாரிக்கும் தமிழ் அதிகாரி ஒருவனுக்குமுள்ள வேறுபாடுகள் யாவை?
7. தமிழனுக்கு உண்மையான நாட்டுப்பற்று இல்லை என்பது எங்ஙனம் விளக்கப்படுகிறது?
8. இரும்பைப் பொன்னுக்கும் கல்லைப்பற்றிய கதையைச் சுருக்கி வரைக. இதிலிருந்து நீவிர் அறிவதென்ன?

6. யாதுமூரே யாவருங் கேளிர்

(திருமதி. மேரி. மாசில்லாமணியம்மையார், எம்., ஏ.)

புறநானூற்றுப் பாடல்களொன்றில் கணியன் பூங்குன்றனார் மேற்காட்டிய மொழிகளை யமைத்துள்ளார். பண்டைத் தமிழ் மக்களைத் தமது அறிவுரைகளாற்றிருத்திய நல்லிசைப் புலவருள் இவரும் ஒருவர். உண்மைத் தமிழனொருவனுக்கு, உலகின்கண்ணுள்ள ஊரெல்லாம் தன் ஊரே, உலக மக்களெல்லோரும் உறவினரே என்பது இவ்வடியின் கருத்து; சாதி மத பேதமகற்றி மக்கட்டொகுதியை ஒரே தொகுதியாய்க் கண்டவரிவர். வானத்தைக் கிழித்துச் செல்லும் ஆகாய விமானங்களும், திரை பொருங்கடலை நீந்திச் செல்லும் மரக் கலங்களும் பெருகிய தற்காலத்தில், இப்புலவர் பெருமான் கூறியவப்பொன் மொழிகள் முன்னையைக் காட்டிலும் உண்மை மொழிகளாய்த் திகழவழியுண்டு. இப்புலவர் அன்றறிந்த நாடு தமிழ்நாடும் அந்நாட்டை யடுத்த நாடுகளுமே. இன்றோ இவ்வுலக கோளத்திலடங்கியுள்ள நாடுகளுடனெல்லாம், வியாபாரம், பொருளாதாரம், அரசியல், கல்வி முதலியவை சம்பந்தமான தொடர்பு நாம் பூண்டுள்ளோம்.

பல்வகைக் கேளிக்கைகட்கும் வேடிக்கை விநோதத்திற்கும், உறைவிடமாய்த் திகழ்வது பாரிஸ் நகரம். எனினும், அந்நகரே, மேல்நாட்டுச் சரித்திரத்தில் மத்திய கால (Mediaeval ages) நாகரிகத்திற்கும், கல்வி நிலைக்கும் நுண்கலைகட்கும் இருப்பிடமானது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மூன்று குறிக்கோள்களையும் ஒரு பெரும் புரட்சியால் சாதித்து, உலகினர்க் கவைகளைத் திரவியப் பொருளா யீந்த நகர் அப்பாரிஸ் நகரே. கோடைக்கால மாதங்களில், குவலயத்து மக்களுள், பணம் பதவி படைத்த மக்கள் பலருங்கூடி விநோதமாய்ப் பொழுது போக்கும் நகர் அது. மண்ணுலகில் மாபெரும் நிலையமெனப் பெயர் பெற்ற நூல் நிலையம் (Bibliotheque nationale) அங்குண்டு. அந்நிலையத்துள் நின்று கொண்டு, பல்லாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள தண்டமிழ் நாட்டை என்றடைவோ மென்றேங்கினேன். ஆனால், அங்கு

நான் கண்ட காட்சி என்னைத் திகைக்கவைத்தது. நூற்றுக் கணக்கான தமிழ்ச் சுவடிகள், சங்கத் தமிழ் நூல்கள், கம்பர் பாடல்கள், பெரிய புராணப் பாடல்கள், பிரபந்த நூல்கள்—இவையாவுமடங்கிய பழஞ் சுவடிகள் ; காந்தி மகான் கற்பித்த சொற்பொருட்களின் விளக்கமடங்கிய நூல்கள்—பண்டைத் தமிழர் சித்திரத்தைப் பாராட்டும் நூல்கள்—இவைகள் யாவும் கண்டேன்.

இந்தவுலகினுக் கோர் நாடு—அது
என்னை மகிழ்விக்கு மோர் நாடு—அது
கம்பன் கபிலன் கணக்கறு பாவலர்
கண்டு க்ளித்த தமிழ் நாடு.

என்று பாடித் தமிழின் பெருமையை வியந்தேன். பல்லாயிரம் மைல்களுக்கப்பாலிருந்த அந்நகர், அந்நேரத்தில் எனது நாடாய்த் தோன்றிற்று. "யாது மூரே" என்று நான் முணு முணுத்துக்கொண்டேன்.

மற்றொரு நாள் அந்நகரின் உயர்ந்த மேடையில் கட்டப் பட்டுள்ள சாக்ரே கர் (Sacre Coeur) என்ற கோவிலைப் பார்க்கச் சென்றேன். அன்று பூரணச்சந்திரன். ஆனால் மங்கிய ஒளிதான். மேகப்படலம் அடிக்கடி சந்திரனை மறைத்தது. கோவிலை நோக்கி, எண்ணற்ற கற்படிகளை ஒன்றன்பின் ஒன்றாய்க் கடந்து ஏறிச் சென்றேன். படிகள் மீது ஏறும்போதே திரும்பித் திரும்பி, கீழேயிருந்த நகரையும், அந்நகர்ப் பெருவீதிகள் அமைக்கப்பெற்ற ஒழுங்கையும் எல்லையில்லா மின்சார விளக்குகள் பல வர்ணத்துடன் விளங்கியதையும் கண்டேன். கோவில் அடிவாரத்தை யடைந்தேன். அங்குப் பல்வேறு மொழி பேசும் பல தேசத்தாரு மிருந்தனர். அந்த மங்கிய நிலவொளியில் மௌனமாய் நின்று, அக்கோவிலின் கண்கொளாக் காட்சியையும், அந்நகர் மக்கள், அவ்வெழில் சிகரத்தை இறைவனுக்கிருப்பிடமாயளித்த செயலையும் வியந்தோம். சீனன், ஆப்பிரிக்கன், அமெரிக்கன், இந்தியன்—யாவருக்கும் உரிமையான அவ்வழகையும் அமைதியையும் ரசித்துக்கொண்டு, சொல்லொணு மகிழ்ச்சிக் கடலிலிருந்தோம். அந்த ஒன்று பட்ட மனப்பான்மையில், ஒருவர் மனத்துடன் மற்றொருவர்

மனம் கலந்த அங்நிலையில், "யாதும் ஊரே, யாவருங் கேளிர்" என்ற தண்டமிழ்ப் புலவர் மொழியில் எத்தனை உண்மை! என்று நினைத்துக்கொண்டேன்.

மாதங்கள் கடந்தன. பின்னொரு நாள், ஜெர்மானிய தேசத்தில் பிராங்பட் (Frankfurt) என்ற பட்டணத்தின் தெருக்களொன்றில் நடந்து சென்றேன். ஐயோ! அந் நகரில் எங்கெங்கே நோக்கினும், அங்கெல்லாம் பாழடைந்த வீடுகள், கோவில்கள், குண்டு வீழ்ந்து உடைந்த பாலங்கள், விறுவிட்ட சன்னல்கள், சுவர்கள்; யுத்த வரக்கன் தாண்டவமாடிச் சீரழித்த நாடென்பதை அத் தெருக்களே காட்டின. போன உலகப் பெரிய யுத்தத்தில், எமக்கெதிர்ப் புறத்திருந்து போர் புரிந்து இந் நிலையடைந்தவரல்லரோ இவர் என்றதோ ரெண்ணம் என் மனக்கோட்டையில் நுழைந்தது. ஆனால், தங்கள் நாட்டை இப்பொழுது அயலகத்தாராகிய நான்கு பெரும் நாடுகள் பங்கிட்டு உரிமையாக்கிக் கொண்டதையும், தங்கள் மக்கள் பல்வகைச் சுதந்திரங்களையும் இழந்து, அளவற்ற பழிச்சொல்லை ஏற்றுக்கொண்டதையும் அறிந்தும், தோல்வி மனப்பான்மையை எடுத்தெறிந்துவிட்டுத் தம் நாட்டை மீண்டும் உயர்நிலைக்குக் கொண்டுவரத் திட சித்தம் கொண்ட அம்மக்களின் உயர்வுதான் என்னே! ஆடவரும் பெண்டிருமாகிய அவர்கள், பகல்தொட்டு இரவுவரை உழைத்து உண்டாக்கியுள்ள எண்ணிறந்த ஆப்பிள் மரத் தோட்டங்கள், திராட்சைச் செடித் தோட்டங்கள் இவைகளைக் கண்டேன். "ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித் தாழா துஞற்று பவர்" என்ற திருக்குறட்கு அரிய எடுத்துக் காட்டாய் விளங்குபவர் இவரன்றோ என்று வியந்து நின்றேன். காடு வெட்டி நாடாக்கி, குளம் தொட்டு வளம் பெருக்கி, சலிப்படையா உழைப்பால் சிறந்த தமிழரசர்கள் ஆண்ட நாட்டிலிருக்கும் எனக்கு, அம்மக்களுடன் ஒரு நெருங்கிய தொடர்பு இருந்ததாகத் தோன்றியது. அங்நிலையில், "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்று அறிந்தேன்.

உலகத்தில் பெரும் பகுதியை யொரு காலத்தில் தமக்கே உரிமையாக்கிக்கொண்ட ஆங்கிலேயர்—பாரத நாட்டைத்

தமக்கடிப்படுத்தி, இந்தியமாதாவின் சுதந்தர வுணர்ச்சியை யழித்து, தேசத்தொண்டர் பலருக்கும் சிறைவாசமளித்த ஆங்கிலேயர் நாட்டின் தலைநகராகிய லண்டன் பட்டணத்தில் பக்கிங்காம் அரண்மனையை அடுத்தொரு வீதியில், வழி தெரியாது திகைத்துப்போய் நின்றுகொண்டிருந்தேன். எண்ணற்ற ஆங்கில மக்களும், அயல் நாட்டு மக்களும், அங்குமிங்கும் ஓடுவதும் சாடுவதுமா யிருந்தனர். அவரவர் தத்தம் பணியாற்ற விரைந்து சென்றுகொண்டிருந்தனர். ஒரு நொடியில் சோவென்று மழை பிடித்துவிட்டது. என் கையில் குடையுமில்லை, மழைச் சட்டையுமில்லை. கனமான தோல் பெட்டியொன்று வைத்திருந்தேன். மழைக் கொதுங்குவோமென்று அந்நியர் வீட்டில்போய் நுழைகிற வழக்கம் ஆங்கிலேயரிடத்திலில்லை. அச்சமயத்தில், ஓரிளைஞன் ஓடிவந்தான். "மன்னித்துக் கொள்ளுங்களம்மா. நீங்கள் எங்கே போக வேண்டும்" என்றான். நான் மஸ்வல் ஹில் (**Muswell Hill**) போகவேண்டுமென்றேன். "அப்படியானால் நீங்கள் 134-ஆம் நம்பர் வண்டியில் ஏறவேண்டும். இரண்டடி யெடுத்து வைத்தால் அவ்வண்டி நிற்குமிடத்தைப் போய்ச்சேரலாம். இவ்விடத்தில் அவ்வண்டி நிற்பதில்லை. உங்கள் பெட்டியை நான் தூக்கிக்கொண்டு வர எனக்கு அநுமதியளிப்பீர்களா?" வென்று மிகவும் விநயமாய்க் கேட்டுவிட்டு, பெட்டியைத் தூக்கிக்கொண்டு நடந்தான். நாங்கள் வண்டி நிலையத்தைப் போயடைந்ததும் 134-ஆம் நம்பர் வண்டியும் வந்துவிட்டது. என்னை வண்டியில் ஏற்றிவிட்டுப் "போய்வாருங்கள்" என்று மலர்ந்த முகத்துடன் இனிய சொற் கூறி நகர்ந்தான் இளைஞன். ஊரும் பேரும் தெரியாத அவ்வாங்கில இளைஞனின் உதவியை எங்ஙனம் மறக்கவியலும்? "யாது மூரே, யாவருங் கேளிர்" என்ற நம் தமிழ்ப் புலவர் பொன்மொழியை வியந்து கொண்டே சென்றேன்.

உயர்தரப் புலவனொருவன் கூறிய கூற்று, அவன் காலத்திற்கு மாத்திரமே பொருந்தியதன்று. அது முக்காலத்திற்கும் பொருந்தியதாகும். இதற்கு உலகப் பெரும் புலவர்களாகிய செகப்பிரியர் (**Shakespeare**) தாந்தே (**Dante**), ஹோமர் (**Homer**) முதலியோர் இயற்றியுள்ள நூல்களில்

அழுந்திக்கிடக்கும் அரிய கருத்துக்களே சிறந்த சான்ருயமைகின்றன. இக்கருத்துக்களை, உலக மக்கள் யாவருக்கும் பொருந்திய உயர்தரக் காவியக் கருத்துக்கள் எனலாம். இந்த வகையில் அமைவதே நம் கணியங் குன்றனுர் "யாது மூரே, யாவருங் கேளிர்" என்று கூறிய கூற்று.

அருஞ்சொற் பொருள்

நல்லிசைப் புலவர் - சிறந்த புகழ் மிக்க புலவர், பேதம் - வேறுபாடு, திரை பொரும் - அலைமோதுகின்ற, கோளம் - உருண்ட, கேளிக்கை - நடனம் முதலிய இன்ப விளையாட்டுக்கள், திரவியம் - செல்வம், குவலயம்- உலகம், சொல்லொணு - சொல்ல முடியாத, தண்டமிழ் - குளிர்ந்த தமிழ், திடசித்தம் - உறுதியான உள்ளம், உப்பக்கம் - பின்புறம், உஞற்றுபவர் - முயற்சி செய்வோர், பணியாற்ற - வேலை செய்ய, விநயமாய் - பணிவாய், கேளிர் - உறவினர்.

பயிற்சி வினுக்கள்

1. யாதும் ஊரே யாவரும் கேளிர் - இது யார் கூற்று? எந்த நூலிலுள்ளது? இக் கூற்று இன்றும் உண்மையாய்த் திகழ்கிறது என்று எங்ஙனம் கூறலாம்?
2. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கூற்று ஆசிரியருக்கு நினைவு வரக் காரணமாயிருந்த பாரிஸ் நகரக் காட்சிகள் யாவை?
3. ஊழையும் உப்பக்கம் காண்பவர் ஜர்மனிய மக்கள் - விளக்குக.
4. லண்டன் பட்டினத்தில் யாதுமூரே யாவருங் கேளிர் என்ற தொடரை நினைக்கக் காரணமாயிருந்த நிகழ்ச்சி யாது?

7. சக்தி

திரு. ஜி. ஆர். தாமோதரன்

உலகம் சக்தியால் இயங்குகிறது. சக்தி இல்லையென்றால் உலகம் இல்லை. உலகத்தில் ஒவ்வொரு பொருளும் சக்தி வாய்ந்ததாய் விளங்குகிறது. சக்தி என்ற தத்துவமும் இதனையே விளக்குகின்றது. சக்தியை முதன்மையாகப் போற்றி வணங்கிவருகிறோம். அதைப் பெண்ணாக உருவகப் படுத்தி வழிபடுகிறோம். ஏன்? ஒரு குடும்பத்திற்குப் பெண் மிகவும் இன்றியமையாதவள். அதுபோல உலகம் இயங்கு வதற்குச் 'சக்தி' இன்றியமையாததாகிறது.

'சக்தி' என்பது யாது? சக்தியின் பொருளையும் பெருமை யையும் வரையறுத்துக் கூறுவது கடினம். சக்தி பலவகையாகக் காட்சி அளிக்கிறது. உழவன் வயலை உழுகிறான். தொழிலாளி இயந்திரத்தை இயக்குகிறான். குதிரை வண்டியை இழுத்து ஓடுகிறது. எஞ்சின் ரயில் வண்டியை வேகமாக இழுத்துச் செல்கிறது. ஆகாய விமானம் பறக்கிறது. பல்வேறு பணிகளுக்குப் பல்வேறு கருவிகள் அமைந்த போதிலும், அப்பணிகள் யாவும் ஆற்றப்படுவதற்குப் பொதுவாக வேண்டப்படுவது 'சக்தி' எனப்படும் **பண்பு**. எனவே 'சக்தி' என்பது பணி, உழைப்பு, வேலை இவை களுடன் இணைக்கப்படுகிறது. மின்சாரமும், வெப்பமும் உழைப்பிற்குத் துணை செய்கின்றன. ரயில்வண்டி, கப்பல் போன்றவை செல்வதற்கும், பொருள்களின் சலனத்திற்கும் 'மின்சாரமும்' 'வெப்பமும்' கருவிகள் வாயிலாக உதவுகின்றன. நிலக்கரி, பெட்ரோல், மண்ணெண்ணெய் இவைகள் வெப் பத்தை உண்டு பண்ணி யந்திரங்களை இயக்குகின்றன. நிலக் கரி, பெட்ரோல், மண்ணெண்ணெய் இவை பல பணிகளை ஆற்றுவதற்குக் காரணம் அவைகளில் புதைந்து கிடக்கும் 'சக்தியே.'

சக்தியின் வகைகள்: ஒரு அணையின் நீர்த்தேக்கத்தில் தண்ணீர் அசைவற்றிருப்பதுபோல் காணப்படுகிறது. அவ்

வணையின் தண்ணீரைக் குழாய்களின் வாயிலாகச் செலுத்தினால் அது பெரிய சக்கரங்களைச் சுழற்றி மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. இந்த மின்சாரம் வீடுகளில் விளக்கு எரிவதற்கும், தொழிற்சாலைகளில் யந்திரங்கள் இயங்குவதற்கும் துணைபுரிகின்றது. சக்கரத்தைச் சுழற்றும் சக்தி அசைவற்றுத் தேங்கியுள்ள தண்ணீருக்கு இருக்கிறது. தேக்கத்தின் தண்ணீரில் சக்தி புதைந்து கிடக்கிறது. இது நிலைச்சக்தி எனப்படுகிறது. சக்கரத்தைச் சுழற்றும் சக்திக்குச் சலனச் சக்தி எனப்பெயர். தண்ணீருக்கு நிலைச்சக்தி சலனச் சக்தி ஆகிய இருவகையான சக்திகள் இருப்பதை அறிகிறோம். மற்றொரு உதாரணம் கூறலாம். வில்லில் அம்பைத் தொடுத்து வில்லை வளைக்கிறோம். அம்பு விடுவிக்கப்படுகிறது. அம்பு விசையுடன் பாய்கிறது. அம்பின் சலனச்சக்தி வில்லிலிருந்து விடுவிக்கப் பட்டவுடன் புலனாகிறது. வில்லில் இருக்கும் வரையில் அவ்வம்பிற்கு 'நிலைச் சக்தி' இருக்கிறது. பெட்ரோல், நிலக்கரி போன்ற **எரி பொருள்**களில் சக்தி புதைந்து கிடக்கிறது. இவை எரிக்கப்படும்போது சக்தி வெளிப்பட்டு யந்திரங்களை இயக்குகின்றன.

சக்தி முன்னேற்றம் : சக்தியின் தத்துவத்தையும் மகிமையையும் இந்த ஒரு நூற்றுண்டாகத்தான் மனிதன் உணர்ந்திருக்கிறான். பொருள்கள் யாவும் இயங்குவதற்குச் 'சக்தி' அடிப்படையானது. ஏன், வாழ்க்கைக்கே இன்றியமையாததா யிருக்கிறது 'சக்தி.' இச் சக்தியை மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு பயன்படுத்தக் கற்றுக்கொள்கிறானே அவ்வளவுக் கவ்வளவு வாழ்க்கையில் இன்பங்களைப் பெருக்கிக் கொண்டு முன்னேறுகிறான். மனிதன் தோன்றியதிலிருந்து அவனுடைய வரலாற்றை ஆராய்வோமானால், இவ்வுண்மை புலனாகிறது. மனித யாத்திரையின் வரலாற்றில் பல படிவங்கள் காணப்படுகின்றன. இந்த யாத்திரையில் பல மைல் கற்களைக் கடந்து மனிதன் முன்னேறியிருக்கிறான். சுகவாழ்வு வாழ மனிதன் ஆதியிலிருந்து சாதனங்களை ஒன்றன்பின் ஒன்றாகப் பெருக்கிக்கொண்டு வந்திருக்கிறான். இச்சாதனங்கள் சக்தியை இயன்ற அளவு பயன்படுத்த அறிந்துகொண்ட வகைகளே யாகும்.

மனிதன் தன்னுடைய அறிவின் திறமையால் சக்தியை நாளுக்கு நாள் அதிகமாகப் பயன்படுத்தி, தன் வாழ்க்கை முறையை மேம்படுத்திக்கொண்டிருக்கிறான். ஆதியில் மனிதன் பல்லாயிர ஆண்டுகளாக இயற்கையை வசப்படுத்தாமல் வாழ்ந்து வந்தான். இயற்கைக்குச் சேவகனாக இருந்தான். என்று இயற்கையைத் தன் தேவைகளுக்காக மனிதன் பயன் படுத்தக் கற்றுக்கொண்டானோ அன்று முதல் மனிதனுடைய முன்னேற்றம் துவங்கி, இன்றைய சமூகம் பரிணமித்திருக் கிறது.

சக்தி—நேற்று: 'நெருப்பு', 'வெப்பம்' என்றவற்றை அறியாமல் மனிதன் வாழ்ந்த காலம் உண்டு. தனக்குக் கிடைத்த உணவைப் பச்சையாக உண்டு வாழ்ந்தான். குளிர் காலங்களில் குளிரை வெப்பத்தால் தடுக்கும் முறையை அறி யான். நாளடைவில் நெருப்பைக் கண்டுபிடித்தான். ஒரு கல்லை மற்றொரு கல்லுடன் மோதி நெருப்பை வேண்டும் போது உண்டாக்கும் வகையை அறிந்துகொண்டான். நெருப் பில் உணவைச் சமைக்கவும், நெருப்பைக் கருவியாகக் கொண்டு கொடிய விலங்குகளிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் நெருப்பைப் பயன்படுத்தலானான்.

மனிதன் தான் செய்யும் வேலையைச் சுலபமாகச் செய்வ தற்கும், விரைவாகத் திறம்படச் செய்வதற்கும் தன் கைகள், தசைக்கட்டுகள், கால்கள் இவைகளைத் தவிரப் பிற கருவிகளை நாடுகிறான். தன் யூகத்தால் புதிய புதிய கருவிகளைப் பழங் காலத்திலிருந்து ஒவ்வொன்றாகக் கண்டுபிடித்து உபயோகப் படுத்தி வந்திருக்கிறான். இன்று எத்தனை கருவிகள் காண் கின்றோம்! 'மனிதன் என்பவன் கருவிகளைக் கையாளும் ஒரு விலங்கு' என்றே கூறலாம். கருவிகள் இல்லை என்றால் மனி தன் என்பவனும் இல்லை. கருவிகளின் துணையைக் கொண் டால்தான் மனிதன் ஆற்றலுடைய மனிதனாக விளங்குவான்.

மனித வரலாற்றினைப் பல யுகங்களாகப் பிரித்திருக்கிறார் கள். முறையே கற்காலம், தாமிர யுகம், இரும்பு யுகம் என்று வகைப்படுத்தியுள்ளார்கள். கற்காலம் மிகப் பழமையானது.

அக்காலத்தில் மனிதன் கல், மரம், எலும்பு இவைகளாலான கருவிகளையும் ஆயுதங்களையும் தன் வாழ்க்கைக்காகப் பயன் படுத்தினன். அம்பெய்து தன் உணவிற்காக விலங்குகளைக் கொன்ருன். மாடு, குதிரை முதலிய பிராணிகளை வசப்படுத்தித் தனக்காகப் பணியாற்றச் செய்தான். கற்காலம் பல்லாயிர ஆண்டுகள் நீடித்து, உலோகங்களைக் கண்டு பிடித்ததும் முடிவுற்றது.

வெண்கல யுகத்தில் தாமிரத்தாலும் வெண்கலத்தாலும் செய்யப்பட்ட கருவிகள் மிகவும் திறமையுடையனவா யிருந்தன. இதனை அடுத்து இரும்பு யுகம் தோன்றியது. வெண்கலத்தைவிட இரும்பு கடினமான உலோகமாதலால் வேலைக்கு மிகுதியாகப் பயன்பட்டது. தாமிரம், வெண்கலம், இரும்பு ஆகிய உலோகங்கள் ஒன்றன்பின் ஒன்ருகக் கண்டுபிடிக்கப் பட்டதால், அவைகளில் கருவிகள், ஆயுதங்கள், யந்திரங்கள் முதலியவை செய்வதற்கும், கனிகளிலிருந்து எடுக்கப்படும் உலோகத்தினை உருக்குவதற்கும் தேவையான சக்தியை நாட வேண்டியதாயிற்று. சூளைகளும் எரிபொருள்களும் மனிதனின் யூகத்தால் தோன்றின. இரும்பை உருக்குவதற்கு அடுப்பங்கரிக்குப் பதிலாகக் கோக் எனப்படும் பாதி சுடப்பட்ட நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டது. சூட்டை வீணுக்காமல், சூட்டினை மீண்டும் இரும்பின்மீது வீசும் சூளை கட்டப்பட்டது.

இன்று—சக்தியின் இயந்திர வடிவம்: இதுகாறும் கைகளைக் கொண்டு செய்த வேலையை யந்திரத்தின் உதவியால் இலகுவாகவும் விரைவாகவும் செய்யவேண்டுமென அறிஞர்கள் முயன்றனர். கெலிலியோ, நியூடன் என்ற பல விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகள் யந்திரத்தின் நுட்பத்தினைப் புலப்படுத்தின. யந்திரப் பறவை போன்ற பல பயனற்ற யந்திரங்கள் உண்டாக்கப்பட்டன. வாழ்க்கையின் நலன்களைப் பெருக்க விஞ்ஞானமும் செல்வமும் ஒத்துழைத்தன; விளையாட்டு யந்திரங்களை விடுத்து, பல புதிய பொருள்களை உண்டாக்க யந்திரங்களைக் கண்டுபிடித்தன. தொழில், வீட்டைவிட்டு வெளியேறி யந்திரசாலைகளை அடைந்தது.

கைகளுக்குப் பதிலாகச் சிறிது சிறிதாக யந்திர சக்தி புகுத்தப்பட்டது. யந்திரசக்தி செல்வாக்குற்ற காலம்— அதாவது 1760-1790—'தொழிற் புரட்சி' எனப்படுகிறது. நெசவுத் தொழிலில் சுலபமாகவும் துரிதமாகவும் பல வேலைகளைச் செய்ய யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

சக்தியின் சரித்திரத்தில் பெரிய மாறுதலை உண்டாக்கியது நீராவி யந்திரம். இதனைக் கண்டுபிடித்த பெருமை வாட்ஸ் என்ற ஆங்கிலேயரைச் சாரும். தண்ணீர் கொதிக்குங்கால் நீராவி வீணுகப் போவதை வாட்ஸ் உணர்ந்தார். குறித்த அளவுத் தண்ணீர் எவ்வளவு நீராவியை உண்டாக்குகிறதென்று கணக்கெடுத்தார். ஒரு கன அடி நீராவிக்கு அதனைவிட ஆறு மடங்கு எடையுள்ள தண்ணீரைக் கொதிக்கவைக்கும் சக்தி இருக்கிறதென்பதைக் கண்டுபிடித்து மருண்டார். நீராவியைக் குழாய்களில் விட்டு அறையைச் சூடாக்கினர். நீராவியில் பதுங்கிக் கிடக்கும் சூட்டினை அறிந்தார். மூடப்பட்ட ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்க வைத்தபோது அதனுடைய மூடி நீராவியால் தூக்கி எறியப்பட்டதைப் பார்த்த வாட்ஸ் நீராவியின் சக்தியை உணர்ந்தார். இதனை ஆராய்ச்சி செய்து நீராவியில் இயக்கப்படும் இயந்திரத்தைச் செய்தார். இந்நீராவி யந்திரம் தொழிலுலகத்திற்கு ஒரு புத்துயிர் அளித்தது. முதல் முதலாகச் சுரங்கங்களில் நீராவி யந்திரம் வேலை செய்தது. மக்கள் நீராவி எஞ்சின்கள் மீது மோகங்கொண்டனர். நீராவியின் சக்தியைப் பயன்படுத்தும் வகை அறிந்து கொண்டதிலிருந்து தொழிலுற்பத்தி பெருக ஆரம்பித்துவிட்டது. பல தொழிலாளிகள் செய்யும் வேலையை ஒரே யந்திரம் செய்கிறது. தொழிற்சாலைகள், பஞ்சாலைகள், இரும்பு நிலக்கரிச் சுரங்கங்கள் இவைகளில் நீராவி எஞ்சின்கள் வேலை செய்தன. நீராவியின் சக்தியால் இயங்கும் போக்குவரத்துச் சாதனம் ஒன்றை ஜார்ஜ் ஸ்டீபன்சன் 1830-ஆம் ஆண்டில் செய்தார். மணிக்கு 30 மைல் வேகம் ஓடிற்று. இதற்கு ராக்கெட் எனப் பெயரிடப்பட்டது. இந்த ராக்கெட்டுதான் மணிக்கு 3600 மைல் செல்லும் ரயில் எஞ்சின்களாக வளர்ந்திருக்கிறது. இன்று ரயில்வேக்கள், நீராவிக் கப்பல்கள் முத

லியவை போக்குவரத்துக்களே எவ்வளவு அபிவிருத்தி செய்திருக்கின்றன என்பதை நாம் அறிவோம். மிகத் தொலைவான இடங்களுக்குக் குதிரை வண்டியிலும், மாட்டுவண்டியிலும் நாள்கணக்கில் அல்லல்பட்டு பிரயாணம் செய்த மக்கள், இன்று சில மணிநேரத்தில் சுலபமாகவும் விரைவாகவும் பிரயாணம் செய்கிறார்கள். கச்சாப் பொருள்களையும், உற்பத்திப் பொருள்களையும் நாட்டில் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்கு எடுத்துச் செல்லவும், உலகத்தில் நாடுகளிடையே வியாபாரம் ஓங்கவும் நீராவிச் சக்தியினால் இயங்கும் ரயில்வேக்களும், கப்பல்களும் உயிர்நாடிகளாக விளங்குகின்றன.

வெப்பத்தைச் சக்தியாக மாற்றும் யந்திரங்களைப் பயன்படுத்த அறிஞர்கள் ஆராய்ச்சி செய்தனர். வெப்ப யந்திரங்கள் சம்பந்தப்பட்ட அறிவு வளர்ந்தது. பிரிட்டனைப் பின்பற்றி மற்ற நாடுகளிலும் தொழிற்சாலைகள் தோன்றின. வெப்பத்தை உண்டுபண்ணும் சக்தி நிலக்கரிக்கு இருப்பதால் நிலக்கரி அதிகமாகச் செலவாயிற்று. 1850-ஆம் ஆண்டில் 100 டன் செலவாகிக் கொண்டிருந்த நிலக்கரி ஆயிரம் டன்னுக அதிகரித்தது. விஞ்ஞானமும் தொழிலும் நட்புக்கொண்டதால் புதிய புதிய யந்திரங்களும், சீர்திருத்தங்களும் தோன்றின. சக்தியின் தேவை அதிகரிக்க அதிகரிக்க நீராவி யந்திரமும் பண்பட்டு வளர்ச்சியுற்றது.

இன்னொரு புதிய சக்தி 1859-ம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. முதல் முதலாக அமெரிக்காவில் பிட்ஸ்பர்க் என்னுமிடத்தில் எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்பட்டன. இந்த எண்ணெயை எரிபொருளாகக் கொண்டு யந்திரங்களை இயக்க டீஸல், டெய்ம்லர் என்ற அறிஞர்கள் கண்டுபிடித்தார்கள். இந்த எஞ்சின்கள் இன்று பிரபலமாகப் பல விதமாக மக்களுக்குப் பயனளித்து வருகின்றன. பெட்ரோல் முதலிய எண்ணெய்கள் யந்திரத்தினுள் எரிக்கப்பட்டுச் சக்தியாக மாற்றப்படுவதால் இந்த யந்திரம் 'அக எரி யந்திரம்' எனப்படுகிறது. போக்கு வரவுச் சாதனத்தில் மிக முக்கியமாக விளங்கும் மோட்டார்கார் ஓடுவதற்கு இந்த எஞ்சின் பயன்படு

கிறது. இவ்வாறு பெட்ரோலும் அதனுடன் சேர்ந்த மற்ற எண்ணெய்களும் சக்தியாக மக்களுக்கு உதவுகின்றன.

மற்றொரு முக்கியமான சக்தி மின்சாரம். 1831-ஆம் ஆண்டில் பாரடே என்ற அறிஞர் பல தடவை முயன்று மின்சாரத்தைத் தூண்டும் வகைகளைக் கண்டறிந்தார். இதுவே மின்சார விஞ்ஞானத்தையும் மின்சாரத் தொழிற்சாலைகளையும் உருவாக்கியது. அறிஞர்கள் பலர் தொடர்ந்து ஆராய்ச்சி செய்ததால் மின்சார விஞ்ஞானம் வளர்ந்தது. தொழிலுக்காகவும், ஒளிக்காகவும் மின்சாரத்தைப் பயன்படுத்தலாயிற்று. பெட்ரோலும் மற்ற எண்ணெய்களும், மின்சாரமும் ஆற்றும் பணிகள் எண்ணற்றவை. இவை உலகத்தின் சமூக அமைப்பையே திருத்தி அமைத்துவிட்டன. இவ்விரு சக்திகளும் தொழில் வளத்திற்கு இன்று இன்றியமையாதவைகளா யிருக்கின்றன.

20-ஆம் நூற்றாண்டில் சக்தி : இந்த இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானத்திலும், தொழிலிலும் பல புரட்சிகரமான மாறுதல்களைப் பார்க்கிறோம். இம்மாறுதல்களுக்குக் காரணம் மனிதன் புதிய புதிய சக்திகளைப் பயன்படுத்த அறிந்துகொண்டதேயாகும். பொருள்களுக்கும் சக்திக்கும் உள்ள சம்பந்தம் புலனாயிருக்கிறது. பெக்கரல் என்ற அறிஞர் சில பொருள்களுக்குக் **கதிர் வீசும்** சக்தி உண்டு என்பதைக் கண்டுபிடித்தார். ரோண்ட்ஜன் எக்ஸ் கதிர்களின் பெருமையை அறிந்தார். தாம்ஸன் எலக்ட்ரானின் அபூர்வ சக்தியைக் கண்டார். ஐன்ஸ்டீன், பிளாங்க், ரூதர் போர்டு என்ற பேரறிஞர்கள் பல விஞ்ஞான உண்மைகளை நிரூபித்துள்ளனர். இவை யாவும் இயற்கையின் விந்தைச் செயல்களை மனிதன் அறிந்துகொள்ளத் துணை செய்கின்றன. இதன் விளைவாகப் புதிய முறைகளையும் புதிய கருவிகளையும் புதிய சக்திகளையும் மனிதன் பயன்படுத்த முடிந்தது.

நீரருவிகளில் நீர் வீழ்ச்சியின் சக்தியால் மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. தொழிற்சாலைகளும், வீடுகளும் மின்சாரத்தை முன்னைவிட நூறு மடங்கு அதிகமாக இப்பொழுது உபயோகிக்கின்றன. இந்நூற்றாண்டின் துவக்கத்தில் மண்ணெண்ணெய் 2 கோடி டன்தான் எடுக்கப்பட்

டது. இன்று 15 கோடி டன் எண்ணெய் மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்டு உலகத்திற்கு விநியோகிக்கப்படுகிறது எண்ணெய் எடுப்பதற்கும் சுத்தம் செய்வதற்கும் திறமையான முறைகள் கையாளப்படுகின்றன. இச்சக்தி அதிகமாகவும் எளிதாகவும் கிடைப்பதன் விளைவால் மோட்டார் கார்களும் உலகத்தில் பெருகிவிட்டன. 1900-ஆம் ஆண்டில் 20000 மோட்டார் கார்கள் இருந்தன. இன்று 15 கோடி மோட்டார் கள் சாலைகளில் ஓடுகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் இந்த மோட்டார்ச் சாதனம் சமூக உறவை மேம்படுத்தி வாழ்க் கைக்கு உயிரை அளித்திருக்கிறது.

மனிதன் அடைந்திருக்கும் இன்னொரு மகத்தான வெற்றி விண்ணில் பறப்பதே—ஆகாய விமானம். விமானங்கள் தோன் றியதிலிருந்து உலகத்து நாடுகளிடையே தொடர்பும் உறவும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. ஜெட் விமானத்தில் ஒலி அலைகளைவிட வேகமாகச் செல்ல முடியும். இதைவிட வேகமாகக் கம்பியில்லாத் தந்தி நம்முடைய குரலை ஒருவிநாடிப் பகுதியில் தொலைவிலுள்ள நாடுகளுக்கு எடுத்துச் செல்கிறது. தொலைவில் நடக்கும் காட்சிகளை டெலிவிஷன் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது.

இச்சக்திகள் விவசாயத்திலும் கையாளப்படுகின்றன. குதிரைகளுக்கும், மாடுகளுக்கும் பதிலாக டிராக்டர், புல்டோ ஸர் முதலிய யந்திரங்கள், நிலத்தை உழுது பயிரிடுகின்றன. விவசாயம் யந்திரமய மாக்கப்பட்டதனாலும், மின்சார வசதிகளி னாலும் உற்பத்தி பன்மடங்கு பெருகிவிட்டது. அமெரிக்காவில் விவசாயியினுடைய உழைப்பு முக்கால் பாகம் குறைந்து விட்டது.

இப்புதுச் சக்திகள் வீடுகளிலும் பெரிய புரட்சியை உண்டு பண்ணிவிட்டன. சுகமாக வாழ்வதற்கு வேண்டிய வசதிகள் பல இருக்கின்றன. மின்சார அடுப்பு, யந்திரத் துடைப்பம் முதலியவை இல்லாள் செய்ய வேண்டிய வேலைகளைக் குறைத்துவிட்டன.

இவ்வாறு பல்வகையான சக்திகள் மக்களுக்குப் பயனளிக் கின்றன. உலகத்தில் மக்களின் தொகை அதிகரித்துக்

கொண்டே போகிறது. முறையே தேவைகளும் அதிகரிக்கின்றன. உணவின் தேவைக்கு ஓர் வரம்பு இருக்கிறது. ஓர் அளவுக்குமேல் வயிறு நிரம்பிவிடும். ஆனால், சக்திப் பசி என்றும் அடங்காது. ஒவ்வொரு நாளும் புதிய புதிய முறைகளில் சக்தி உபயோகிக்கப்பட்டு வருகிறது.

சக்தியின் எதிர்காலம் : உலகத்தின் தேவைகளுக்கு நிலக்கரி, மண் எண்ணெய் முதலிய மூலப் பொருள்கள் போதுமா? அல்லது பஞ்சம் தோன்றுமா? நிலக்கரி பல நூற்றாண்டுகளுக்குப் போதிய அளவு இருக்கிறதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். மண் எண்ணெயின் இருப்பு கண்டு பிடிப்பது கடினமானது. எனினும் புதிய புதிய இடங்களில் எண்ணெய் பெறப்படுவதால், எண்ணெய்ப் பஞ்சம் அண்மையில் தோன்றாது. நிலக்கரியிலிருந்தும் எண்ணெய் இரசாயன முறையில் எடுக்க முயற்சிகள் செய்யப்படுகின்றன. பூமியடியிலுள்ள களிமண் பாறையில் ஏராளமாகத் தங்கி இருக்கும் எண்ணெயும் பயன்படுமென்று கருதப்படுகிறது. உலோகங்களில் இரும்பு, அலுமினியம், மெக்னீஷியம் இவைகளுக்குக் குறைவு ஏற்படாது. ஆனால் விலை உயரலாம். தாமிரம், காரீயம், வெள்ளீயம், துத்தநாகம் இவைகள் சில ஆண்டுகளுக்குத்தான் போதியதாயிருக்கும். அமெரிக்கா பயன்படுத்துவதுபோல், உலகம் யாவும் பயன்படுத்தினால் இந்த உலோகங்கள் 10 ஆண்டுகளுக்குத்தான் போதுமானது என்று பயப்படுகிறார்கள். நிலக்கரி, எண்ணெய், மின்சாரம் ஆகியவை எல்லா நாடுகளிலும் வேண்டிய அளவு கிடைப்பதில்லை. மேலும் யுனைடெட் ஸ்டேட்ஸில் ஆள் ஒன்றுக்கு 9 டன் வீதமும், பிரிட்டனில் 4 டன் வீதமும் இந்தியாவிலும் சீனாவிலும் ஒரு டன்னில் ஐந்தில் ஒருபங்குக்குக் குறைவாகவும் நிலக்கரி உபயோகிக்கப்படுகிறது. பின்னணியிலிருக்கின்ற நாடுகள் முன்னேறச் சக்திப் பொருள்கள் தேவை. அதிகரிக்கும் ஜனத்தொகைக்கு ஏற்றவாறு, தொழிற்சாலையிலும், விவசாயத்திலும் உற்பத்தி பெருகவேண்டும். சக்திப் பொருள்கள அதிகமாகத் தேவைப்படுகின்றன. சிறந்த முறைகளைக் கையாண்டு சக்தியை அதிக விகிதத்தில் பெறவும், சேதம் ஒன்றும் ஏற்படாமல் சிக்கனமாகச் செலவழிக்கவும் அறிஞர் முயன்று வருகிறார்கள்.

தேவைகளுக்குப் போதிய அளவு சக்தியைப் பெருக்க அறிஞர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

அருஞ்சொற் பொருள்

தத்துவம் - உண்மை. இணை - சேர். சலனம் - அசைவு. சாதனம் - துணைக் கருவிகள். பரிணமித்து - வளர்ச்சியுற்று. யுகம் - காலம். அல்லல் - துன்பம்.

பயிற்சி வினாக்கள்

1. சக்தியைப் பெண்ணாக உருவகப்படுத்தி வழிபடுவது ஏன் ?
2. சக்தி என்பது யாது ? அதன் வகைகள் யாவை ?
3. சக்தியின் முன்னேற்றத்தைப்பற்றி வரைக.
4. மனிதன் கருவிகளைக் கையாளும் விலங்கு—விளக்குக.
5. மனித வரலாற்றினை எத்தனை யுகங்களாகப் பிரித்திருக்கிறார்கள் ? அவை யாவை ?
6. தொழிற் புரட்சி என்றால் என்ன? அது தோன்றிய காலம் எது?
7. சக்தியின் சரித்திரத்தில் மாறுதலை உண்டாக்கியது எது? அதனைப் பற்றி நீவிர் அறிந்துள்ளதைப்பற்றி விவரிக்க.
8. தொழில் வளத்திற்கு இன்றியமையாத இரு சக்திகள் யாவை?
9. பாரடே, பெக்கரல்—குறிப்பு வரைக.
10. மின்சார சக்தியால் ஏற்பட்டுள்ள அற்புதங்களைத் தொகுத்துரைக்க.
11. சக்தியின் எதிர்காலத்தைப்பற்றிக் கூறப்படுவதென்ன?

8. உழவப் புலவன்

(நாடகம்)

புலவர். வ. சுப. மாணிக்கம் எம். ஏ.

காட்சி

களம் : *கிள்ளிவளவன் அரசவை*
காலம் : *காலை*
கூற்று : *கிள்ளிவளவன், நப்பசலையார், கோவூர் கிழார், கண்ணனார் முதலிய புலவர்களும் நாகனார் என்ற உழவப் புலவரும்*

[கிள்ளிவளவன் என்னும் சோழ மன்னன் புலவர்களுடன் அளவளாவிக் கொண்டிருக்கும்போது நாகனார் வருதல்]

கிள்ளி: *(நாகனாரை முன்னர் அறியாதவனாதலின் அவரை நோக்கி) நீங்கள் இவ்வரசைச் சேர்ந்தவர் தாமோ?*

நாகனார்: *(பெருமிதத்தோடு) தமிழகம் மூன்று அரசு உடையது. வான முடியும், மண் திருவடியும், கடலாடையும், முரசுச் சிலம்பும், தானை மக்களும் உடையது. என்று சிறப்பிக்கப்படும் அரசு எதுவோ, (சிறிது நின்று) அதனை சேர்ந்தவன் நான். (எல்லாரும் அது யாதென ஆராய்கின்றனர்)*

கிள்ளி : *நல்லது. வடநாட்டவரிற் பலர் தமிழ் கற்றிருக்கின்றனர். நீங்கள் வடநாட்டவரோ என்று ஐயுற்றேன். என் தமிழ் நாட்டவர் என்று அறிந்துகொண்டேன். மகிழ்ச்சி. தமிழ் நாட்டிலும் தங்கள் நாடு எதுவோ ?*

நாகனார் : *கதிரவன் கீழ்த் திசையில் தோன்றுது திசை நான்கினும் கெட்டுத் தோன்றுக ! வெள்ளி வடதிசையின் கீழ் நில்லாது தென் திசையில் திரிந்து செல்லட்டும்; இயற்கை மாறினும் என்? கரும்பின் வெண்பூ வேலின் கூட்டம்போல விளங்கும்படி செய்யும் தண்ணீரை என்றும் உடைய காவிரி எங் நாட்டிற்கு உடைமையோ ? (சிறிது தயங்கி) அந் நாட்டிற்கு உடைமை யான். (சோழன் குடி என எல்லாரும் அறிந்து*

கை தட்டுகிறார்கள். தன்னையும் தன்னாட்டையும் புகழ்வதற்குச் சோழன் உவகை அடைகின்றான்.)

கிள்ளி : உம் பேச்சு அவையோரையும் என்னையும் இன்புறுத்தியது......பேச்சால் மகிழ்வூட்டும் பெரும் புலவரே ! நீர் இன்று இவ்விடம் வந்த காரியம் யாதோ? அறிய விரும்புவல்!

நாகனார் : அரசே! என் சுற்றமும் பசித்துக் கிடக்கின்றது ; யானும் பசித்து மடிகின்றேன் ; ஆதலின், நெய்யிற் பொறித்த மானிறைச்சியையும், மணிக்கலம் நிறைந்த மதுவையும் அருளி என் பசிப்பிணி நீக்குக என்று உன்னிடத்து இரக்க வந்த இரவலன் அல்லேன்.

கிள்ளி : (அமைதியாக) அங்ஙனம் நீர் வந்ததாக யாம் நினைக்கவில்லை. அதற்கென வருவார், நீர் சொல்லியபடி காவிரி புரக்கும் இந்நாட்டில் யாருமில்லை.

நாகனார் : அற்றம் மறைத்தற்கு வேண்டிய ஆடை என் சுற்றத்திற்கும் எனக்கும் இல்லை. நீயே, பாம்புரித்தாற் போன்ற கலிங்கவாடை தந்து, என் உடல் மானத்தைக் காக்க வேண்டும் என்று உயிர் மானத்தை முன்விட்டுப், பின் இரக்க வந்த ஒரு பிறவியு மல்லன்.

கிள்ளி : (பின்னும் அமைதியாக) எம்மினும் நல்லாடை அணிந்த நீர் அங்ஙனம் வந்ததாக யாரும் நினைக்கவில்லை. யவனர் மானம் காக்கப் பட்டாடையும், பருத்தியாடையும் ஏற்றுமதி செய்யும் எம் நாட்டகத்து, ஆடையின்றி மானத்தை ஏற்றுமதி செய்வார் இன்னும் பிறக்கவில்லை.

நாகனார் : (முன்னைவிடக் கடுகடுத்த முகத்தோடு) என் கண்ணைப் பறிக்கும் ஒளியுடைய நின் குடை விண்ணளவு உயர்ந்திருக்கின்றது. வெயில் படாமைப் பொருட்டோ, அக்குடையை விரித்துக் கொண்டனை ?

கிள்ளி : (புன்முறுவலோடு) அதற்குக் கொண்டதாக யாம் கனவிலும் நினைக்கவில்லை. நினைக்கவும் மாட்டோம். எழுநிலை மாடத்தின் கீழே இருத்தலால், நினைப்பார் யாருமிலர்.

நாகனூர்: நின் குடை கொற்றக் குடை என்று பெயர் பெறு மென்பர். குடிமக்களின் இன்பத்தைக் கொல்லுவதோ, அக் குடைக்குக் கொற்றம்? நின்குடை வெண் குடை என்று பண்பு பெறு மென்ப. குடிகள் படுந்துயரை அறியாமலிருப் பதோ, அக் குடையின் வெண்மை? பழங்கணுற்ற உயிர்க ளின் துன்ப வெயிலைத் தொலைப்பேன்; இன்ப நிழலைக் கொடுப்பேன் என்பதற்குச் சுருக்காது என்றும் விரித்துவைத்த குடையல்லவா இது! (குடையைச் சுட்டிக் காட்டுதல்)

கிள்ளி: அதில் என்ன, ஐயம். என் குடை வெயிலைத் தடுத்து நிழல் கொடுக்கும். இதோ என் கைவாள் வெய்ய வனைக் கடலில் விழும்படி செய்யும். என் குடிகள் பட்ட துயர் உண்டேற் சொல்லும். இடுக்கண் படுத்துவார் வேந்தராயி னும், அவர் என் வாளுக்குப் பிணமாவர். ஐய! வருந்துங் குடி யாதோ? வருத்துவான் யாவனோ?

நாகனூர்: (*தன் நெஞ்சினைச் சுட்டிக் காட்டி*) வருந்துங் குடி நின்முன் நிற்கின்ற யானே!

கிள்ளி: (*கடுகடுத்த முகத்தோடு*) ஆ! நீவிரோ வருத்த முற்றீர்? புலவராகிய உமக்கா வருத்தம்? சொல்லேருழவ ராகிய உம்மையே வருத்திய ஒருவன் என் செய்யமாட்டான்! ஏனை உழவர்களை எளிதிற்றுன்புறுத்துவான். என்னுட்டுக் குடியும் புலவருமான உம்மை வருத்தினுன் யாவனோ?

நாகனூர்: (*அமைதியாக*) என்னை வருத்தினுன் என்முன் இருக்கின்ற நீயே. (*அரசன் தலைகுனிகிருன். அவைப் புலவர் கள் பாவை போலாயினர். அரசனைப் பாராது, அவைப் புலவர் களைப் பார்த்துப் பேசுகின்ருர்.*) என் நண்பிற்குரிய புலவர்களே! நம் கூர் வேல் வளவன் சின்னுட்களுக்கு முன் சேரனோடு கருவூர்ப் பறந்தலையிற் போரிட்டான் அல்லனோ? அப்போரில் யானைகளின் காலென்ன, கையென்ன எல்லாம் நால் வேறு கும்படி, சிறு சிறு பனந்துண்டம் போல வெட்டி வீழ்த்திச், சேரன் வீரர்கள் ஓடும்போது முதுகு கண்டு கைகொட்டி ஆர்த்தனர். நம் வேந்தன் மறவர் எனபது கேட்டு, மிக மகிழ்ந்து தருக்கினோம். அவ் வெற்றி இவன் படையாளர் மார்பை உழுத வேற்படையான் ஆயிற்று

என்று நினைக்கின்றீர்களோ? இல்லை, இல்லை. அந் நினைப்பு பிழை, பிழை. அம் மறவர் எலும்பு இரும்பாகவும், எதிர்த்தோர் அஞ்சக் கடித்துப் பேசும் அவர் தம் பல் கல்லாகவும், அவர் சுழற்றி எறியும் வேல் செய்த கொல்லன் கை கருங்கையாகவும் செய்தவர் யார்? யானையும் மறையும் நெற்கதிர், வானுற ஓங்கி வளரும்படி, கீழது மேலாகவும் மேலது கீழாகவும் மண்ணை மயக்கிய படை எது? யாங்கள் நிலமகளை மணந்திலமேல், அவள் பைங்கூழ் என்ற மக்களைப் பெறுது மூத்தகுமரி யாவள். ஆயின், அரசன் திருமகளை மணப்பதெங்கே? அகம்படியார்கள் வெற்றி மகளை மணப்பதெங்கே? புலவர்கள் தாம் நாமகள் நலத்தைப் பருகுவதெங்கே? அது கிடக்க. குடிமக்கள்தாம் தம் அம்மான் மகளை அத்தை மகளை வரைவதெங்கே? ஆதலின், உலகம் வாழ்வது படையாளர் வேலானுவதூஉமன்று; அரசன் கோலானுவதூஉமன்று; எம் நெல்லானுவது. உழவு ஒடுங்கின் ஏனையோர் தொழில் ஒடுங்கும். உழவின் சிறப்பினுல உலகம் சிறக்கும். நாகரிகத்தின் முதற்படி உழவெனவும், முடிவுப்படி உழவின்மை எனவும் அறியாதார், தாம் உண்மையே அறியாதார் ஆவர்.

கிள்ளி : (வருத்தத்தோடு) மூதறி புலவரே! உம் மனத்துடிப்பு, சொற்றுடிப்பு, மெய்த்துடிப் பெல்லாம் எமக்கு உயிர்த்துடிப்பை உண்டாக்குகின்றன. ஏனை நாடுகளைக் காட்டிலும் எம் நாடே உழவர்கள் நிறைந்த நாடு. அவர்கள் எம் முதற்குடிகள். இந்நாடு வளநாடு ஆவதற்கும், யான் வளவன் ஆவதற்கும் இந்நாடு காரணமன்று; யான் காரணமல்லன்; மண் தேய்த்த புகழை யுடைய உழவர்களே முதற் காரணம். அவர்கள் ஏர்ப் படையே துணைக் காரணம். ஆதலின், உழவப் புலவராகிய நீர் எம்மாற் படுதுயரைச் சொல்லுமாறு வேண்டுதும். செய்தி முழுதும் ஆர அமரச் சொல்லுவீர்.

நாகனுர் : வாழ்க, அரசே. எம்மூர் வெள்ளைக்குடி என்பது. பிறவூர் நிலங்கட் கெல்லாம் கால்வாய் வழியாக நீரளித்து வரும் காவிரித்தாய் இறுதியிலுள்ள எம்மூர்க்கு மட்டும் வறண்டு வரலாயினள். மேன் மழை இல்லாமையா

லும், நீர் வருஉங் கால்வாய் வழி தூர்ந்து மேடிட்டமையாலும் எம் நன்செய்ப் பரப்பு விளையா தொழிந்தது, இன்றன்று; ஆண்டுகள் மூன்றாயின. வரி வாங்க வந்த விருந்தினரிடம் வாய்க்கால் முற்றும் ஊமையாயிற்று என்று எங் குறையை எடுத்துச் சொல்லியும் பயன்படக் காணேம். அதன் மேலும் அவ்வினையாளர்கள் மூன்றாண்டுகளாக விளையா நிலத்திற்கு முழுவரியும் விதித்தனர். அவ்வரியை அளித்தருளத்தக்க செல்வ முடையே மாயினும், முறைகெட்ட வரி கட்டும் அறிவுடையே மல்லேம். வேந்தே! புலவர்களே! விளையா நிலை எமக்கு மட்டும் நேர்ந்ததன்று. ஒரு குடி தவறாமல் எம்மூர் முழுமைக்கும் நேர்ந்துளது. இங்கிலையில் அரசன் வினையாளர்கள் வரி கட்டா நிலங்களை ஏலம் போடவும் தமதாக்கவும் செய்வோ மென்று குடிகளை அச்சுறுத்துகின்றனர். இன்ன நாளைக்குள் வரி கட்டா விட்டால் நிலமும் ஏனை மனையும் இழக்கப் பெறுவீர்கள் என்று இழவுப் பறையறைகின்றனர். ஊர் முழுதும் படும் உள்ளத் துயரைப் பொறாது, விரைந்து வந்தேம். வினையாளர் தம் கொடிய செய்கைக்கு வேந்தனே பொறுப் பன்றோ?

கிள்ளி: அவர் செய்கை கொடிது; யானே பொறுப்பு. அதிலென்ன, ஐயம். (முகமாறி) இதுவரை கேளாச் செய்தி. நடவா நடப்பு. குற்ற மலிந்த கொடுமை. நிலம் விளையாமை காணாக் குருடர். காட்டியுங் காணமாட்டாக் கண் மூடிகள். ஊர் மக்கள் புகட்டியுங் கேளாச் செவிடர். உற்றது சொல்லாத ஊமையர். தெரிந்தும், இகழ்ந்து நடக்கும் வம்பர். கோலை வளைக்குங் கொல்லர். என் குடி மக்கள் வாழ்வே என் வாழ்வு. அவர் தம் தாழ்வே என் தாழ்வு. அவர்கள் என்னை ஒரு வேந்தனென உயர்த்தி மதியாரேல், நானும் ஒரு குடி தானே! மக்கள் மறவர்களாக, விலங்குகள் படைகளாக, இரும்புகள் கருவியாக நானொரு மனிதன் வேந்தனானேன். குடிகளின் மறத் தொகையே என் வெற்றி! அவர்தம் முயற்சித் தொகையே என் செல்வம். அவர்தம் உள்ளத் துணையே என் துணை. அவர் தம் உரிமைக் காப்பே என் அரசு. (மீண்டும் சினந்து) என்னுள்ளத்தைக் கல்லாத மானிட விலங்குகள். தமது கருத்தே அரசன் கருத்தென நினைக்கும்

அறிவறைகள். குடிகளின் ஆக்கமே அரசன் நோக்கமெனை அறிந்தும் வேறு செய்யும் குறும்பர்கள். என் உட்பகை; என் உடல் நோய்கள். எவ்வூர் மாக்களுக்கு அத் தீயவர் கொடுமை செய்தனரோ, அவ்வூர் மக்கள் கண்டு துயர் நீங்கவும் ஏனை யூர் மக்கள் என் முறை காணவும், தீய அவரை, அவ்வூரிடத்து, ஏனை வினையாளர் முன்பாகப் பல வகையால் ஒறுப்பேன்; பார் மின். (நாகனாரை நோக்கி) நல்ல புலவரே! உம் செய்திக்கு எம் நன்றி. உம்முடைய நன்செய்க்கும் ஊரார் நன்செய்க்கும் விளையாத காலம் தொட்டு விதித்த வரியெல்லாம் விதிக்கக் கூடா வரி. ஆதலின் நீங்கள் வரிக் கடன் கொடுத்தல் வேண்டா. கொடுக்காது எங்கோலைச் செங்கோலாக்கினீர் கள். கொடுத்திருப்பின், அது பொழுதே எங்கோல் கோடிய தாகுமன்றோ? நும் வரவு நல்வரவு. முறை கோடி வரும் வரிப்பொருள் அரசைக் கீழறுக்கும். ஆதலின், விளையாத நிலத்திற்கு வரி கொடுத்தல் வேண்டா என்று என் நாட்டு ஒவ்வொரு ஊரிலும் பறை யறையச் செய்வேன்.

கோவூரார்: (நாகனாரைப் பார்த்து) நண்ப! உம் அரசியலறிவு பெரிதும் பாராட்டற் குரியது:

கண்ணனார்: அதனைவிட இவர் அஞ்சாமை கண்டும் வினையாளர் அஞ்சவில்லை என்றால், அவர் கொடுமை அளத்தற் கரியது.

இறையனார்: நாகனார் பேசும் போது இளங்காளை போலத் தோன்றுகிறார்.

நாகனார்: எனக்கு என்ன தொண்ணூறு வயதுதானே ஆகின்றது.

கிள்ளி: வெள்ளைக் குடியில் உம்மைவிட இளமையான வர்கள் இன்னும் இருக்கிறார்களோ?

நாகனார்: நீங்கள் தாம் எல்லாரும் ஒரு நாளைக்கு வர வேண்டியிருக்குமே. அன்று பார்த்தால் தெரிகின்றது. என் பாட்டனாரைக் காட்டுகின்றேன். அவரால் ஒருகாத தொலை விற்கு மேல் நடக்க முடியாது. (எல்லாருஞ் சிரித்தல்) ஏன், எல்லாரும் சிரிக்கிறீர்கள்? எல்லாரும் வாழ வாழ்கின்ற

உழவன் எல்லாருஞ் சாகத்தானே சாவான். (உண்மை உண்மை.)

பசலையார் : வளவ! நம் நாகனூர் ஓர் உழவுத் தொழிலுடையவர். நான் வேண்டியபடி புலமைக் கல்வியும் உடையவர். ஆதலின், கண்ட குறையை அவை யேறி எடுத்துச் சொல்லி, அரசைச் செம்மைப்படுத்தினூர். இந் நிகழ்ச்சியால், குறை நீங்கிக் குடிகள் வாழ்வதற்குத் தொழிலொடு கல்வியும் வேண்டும் என்பது மிகத் தெளிவாகின்றது. கோல் கோடாமை வேண்டும் அரசனுகிய நீ ஆவன செய்க.

நாகனூர் : வேந்தே! நீ காட்சிக் கெளியன் ஆனுய்! நான் கடுஞ் சொல்லன் ஆனேன்! குறையை அமைதியாகக் கேட்டுக் கோடாது முறை செய்யும் குணம் கரிகாலன் வழித் தோன்றிய உனக்குக் குடிமை யொழுக்கங்காண். யான் எம் வேந்தனையும், புது நண்பர்களாகிய புலவர்களையும் காணுமாறு ஏவிய நின் வினையாளர்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன். (எல்லாருஞ் சிரித்தல்.)

கிள்ளி : அதனைப் பற்றிய கவலை தங்கட்கு வேண்டுவதில்லை. நான் பார்த்துக் கொள்கிறேன். உரிய கைம்மாறு செய்யத்தான் வேண்டும்.

அருஞ்சொற் பொருள்

தானை - சேனை. சிலம்பு - மகளிர்காலணி. கதிரவன் — சூரியன். விரும்புவல் - விரும்புவேன். மணிக்கலம் - அழகிய பாத்திரம். இரக்க - யாசிக்க. அற்றம் - மறைத்தற் குரியவிடம். கலிங்க வாடை - கலிங்க நாட்டு ஆடை. விண் - ஆகாயம். பழங்கண் - துன்பம். பாவை — பொம்மை. சின்னுள் - சில நாட்கள். ஆர்த்தனர் - ஆரவாரம் செய்தனர். நாமகள் - சரஸ்வதி. மூதறி புலவர் - முதுமை அறிவுடைய அறிஞர். மண் தேய்த்த புகழ் - நிலவுலகம் சிறிதென்னும்படி வளர்ந்த புகழ். அளித்தருளத் தக்க - கொடுத்துவிடத்தக்க. அச்சுறுத்துகின்றனர் - பயமுறுத்துகின்றனர். அறிவறை - அறிவற்றவர். முறை - நீதி. ஒறுப்பேன்- தண்டிப்பேன். கீழறுக்கும் - அழித்துவிடும். கோல் கோடாமை. செங்கோல் தவருமை.

பயிற்சி வினாக்கள்

1. நீவிர் யாரெனக் கேட்ட கிள்ளிக்கு நாகனார் கூறிய விடை யாது?
2. நாகனார் சோழநாட்டை எவ்வாறு சிறப்பித்துரைக்கின்றார்.
3. நாகனார் வளவனிடம் எதன் பொட்டு வந்ததாகத் தெரிவிக்கிறார்? அதனை அவர் எடுத்துரைக்கும் முறையைத் தெரிவிக்க.
4. உழவர்களின் பெருமையைப் பற்றி நாகனார் கிள்ளி வளவனிடம் எங்ஙனம் எடுத்துரைக்கின்றார்?

9. சிறையிருந்த செல்வி

திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல்.

பூவினை வெறுத்து, அயோத்தி மன்னன் பொன்மனை புகுந்து, கணவனுடன் நாடு துறந்து காடு புகுந்த மிதிலைச் செல்வியை, இலங்கை வேந்தன் தங்கை தன் கண்களால் நோக்கினாள். பெண்களும் பேதுறும் பேரழகு வாய்ந்த அப் பெருமாட்டியைப் பஞ்சவடியிலே கண்டபொழுது,

“ கண்பிற பொருளிற் செல்லா
கருத்தெனில் அஃதே கண்ட
பெண்பிறந் தேனுக் கென்றால்
என்படும் பிறருக் கென்று ”

அரக்கர்கோன் தங்கை திகைத்து நின்றாள். பின்னர் மான பங்கமடைந்த அம்மாது இலங்கைமா நகரில் இணையற்ற வேந்தனாக விளங்கிய தமையனிடம் தன் குறையை முறையிடும் வாயிலாகச் சீதையின் செவ்விய நலத்தைச் சிறிது சொல்லியும் சொல்லாமல் மறைத்தும் அரக்கன் மனத்தில் ஆசையென்னும் அனலை மூட்டினாள். ‘ஐயனே! அம் மங்கையின் தோள் அழகைச் சொல்வேனோ? அன்றி, அவள் ஒளி பொருந்திய முகத்தில் உலாவுகின்ற வாளனைய கண்களைச் சொல்வேனோ? மற்றைய அங்கங்களின் மாண்பைச் சொல் வேனோ? மங்கையின் நலங்களைக் கண்டு மனம் திகைப்ப தல்லால் அவை சொல்லுந் தகையனவோ? அன்றியும், நீ சென்று அந் நலங்களைக் காண்பா யாதலின் நான் சொல்வதும்

மிகையன்றோ?" என்று வீரன் தங்கை வினயமாக மொழிந்தாள். மேலும், மையலில் ஆழ்ந்த மன்னனை நோக்கி, "ஐயனே! அம் மங்கையின் நுதலை வில்லென்றாலும், விழியை வேலென்றாலும், பல்லை முத்தென்றாலும், இதழைப் பவழமென்றாலும் சொல் ஒக்குமே யன்றிப் பொருள் ஒவ்வாது. ஒப்புமை யில்லா அவ் அங்க நலங்களுக்கு உவமையும் சொல்ல இயலுமோ?" என்று மூக்கிழந்த நங்கை மிக நயமாகப் புனைந்துரைத்தாள். அம் மொழிகளைக் கேட்ட மன்னன் தங்கையின் பொருட்டு அமர் புரிந்து ஆவி துறந்த கரனையும் மறந்தான்; மானபங்கமுற்ற தங்கையால் தனக்கு நேர்ந்த கடும் பழியையும் மறந்தான்; வலிமை வாய்ந்த கோசல வீரனது வரிசிலையின் திறலையும் மறந்தான்; நிறையமைந்த மாதரை முறையிகந்து தீண்டினால் தலை வெடிக்குமென்று அயனார் அருளிய சாபத்தையும் மறந்தான்; செவியாரக் கேட்ட சீதையை மறவாது தன் உள்ளத்தில் அழகொழுக எழுதி, அவ் உயிரோவியத்தைக் கண்டு உளம் களித்தான். அழகிற் சிறந்த அம் மங்கையை அசோக வனத்திற் சிறை வைப்பதற்கு முன்னே, அரக்கர்கோன் தன் மனச் சிறையில் வைத்து மகிழ்ந்தான்.

"மயிலுடைச் சாய லாளை
வஞ்சியா முன்னம் நீண்ட
எயிலுடை இலங்கை நாதன்
இதயமாம் சிறையில் வைத்தான்"

என்று கம்பர் அரக்கன் செயலை அமைவுறக் கூறி யருளினார். இவ்வாறு, பூவினை நீத்துவந்த புனித நங்கை அரக்கன் புன் மனம் புகுந்தாள்.

தங்கையின் வாயிலாகக் கேட்ட மங்கையை மனத்தில் வைத்த மன்னவன், அவள் நலங்களையே நினைந்து நினைந்து நலிவாராயினன்; காதலின் வெம்மையைத் தாங்க மாட்டாது கலங்கினான். மணங் கமழும் மல்லிகைத் தென்றல், மன்னன் மேனியை வெதுப்பியது. தண்மை வாய்ந்த விண்மதியும் வெம்மை விளைத்தது. இவ்வாறு மையல் நோயால் நையலுற்ற

இலங்கை மன்னன், தன் மாமனை மாரீசனை மாய மானாக அனுப்பி, மங்கையின் மனத்தை மயக்கி, வீரர் இருவரும் இல்லாதபோது மாயத்தால் சீதையைக் கவர்ந்து இலங்கைமா நகரில் ஓர் அழகிய சோலையிற் சிறை வைத்தான். இங்ஙனம், நஞ்சனைய இலங்கை நாதன் மனத்திலும் மனையிலும் புகுந்து சிறுமை எய்திய தன் நிலையினை நினைந்து சிந்தையழிந்த சீதை, "அந்தோ ! பொன் மானாக வந்த மாய மானைக் கண்டு மயங்கி, அதனைப் பற்றித் தருமாறு என் தலைவனை அனுப்பினேன்; மானைத் தொடர்ந்து சென்ற மன்னனுக்குத் தீங்கு நேர்ந்ததென்று தவறாக எண்ணி, மனம் பதைத்து, காத்து நின்ற இளைய வீரனைக் கடிந்து கணவன் போனவழியே போக்கினேன். இவ்வாறு, எவரும் துணையின்றி எளியளாக நின்ற என்னைக் கள்ள அரக்கன் கவர்ந்து கடுஞ் சிறையிலிட்டான். நிறை யமைந்த மாதர் பிறர் நெஞ்சு புகார். ஆதலின், இலங்கை வேந்தன் மனத்திலும் மனையிலு புகுந்த என்னை இனி உலகம் ஏற்குமோ ?" என்று உலைந்து வருந்தினாள்.

" வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கி என்
மஞ்சனை வைதுபின் வழிக்கொள் வாயென
நஞ்சனை யான்அகப் புகுந்த நங்கையான்
உஞ்சனன் இருத்தலும் உலகம் கொள்ளுமோ ?"

என்று கம்பர் அருளிய கவிதையில் சீதை சிறையிலிருந்த அகச் சிறையும் புறச் சிறையும் ஒருங்கறியலாகும்.

கருங்கடல் சூழ்ந்த இலங்கைமா நகரில் கற்பக தருக்கள் நிறைந்த கனகச் சோலையில் மெலிந்த மேனியோடும், கலங்கிய கண்களோடும் சிறையிருந்த செல்வியை விடுவித்துத் தன் வீரத்தையும் மானத்தையும் காக்குமாறு, இராமன் வலிமை சான்ற தம்பியோடும் வானரத் துணைவரோடும் அரக்கர் நாட்டிற் போந்து போர்புரிந்து அவர் வெங்குலத்தை வேரறுத்தான். இலங்கை நாதனும் அயோத்தி அண்ணலும் நெடும்பொழுது கண்டவர்க் கன்றி கேட்டார்க்கு உரைப் பரிய கடும் போர் நிகழ்த்தினார்கள். விலக்கலாத விதியின் விளைவால் இலங்கை வேந்தன் ஆவி இழந்து அமர்க் களத்தில் விழுந்தான். போர் மகளைத் தழுவிய பொருப்பனைய தோள்களால் பார் மகளைத்

தழுவினன்; திருமகள் ஒளியும் கலைமகள் ஒளியும் ஒன்றித் திகழ்ந்த உயரிய முகங்களை நிலமகள் மீது நெடிது வைத்தான். வாளும் யாழும் தழுவிய வலிய கரங்கள் வெட்டுண்ட வாழை போல் வீழ்ந்து கிடந்தன. இலங்கை நாதனது எழிலார் மேனியை எள்ளிருக்க இடமின்றி இராம பாணம் துளைத்திருந்தது. இக்கோலத்தை மையறு மனத்தாளாகிய மண்டோதரி கண்ணுற்றாள். மரங்களும் மலைகளும் உருக வாய் திறந்து அரற்றினாள்:

" வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடனின்றி உயிரிருக்கும்
இடம்நாடி இழைத்த வாறோ
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச் சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல் புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி"

என்று மயன்மகள் பன்னிய மொழிகள் பண்பு வாய்ந்தனவாம். தேவர்க்கும் தெரிவரிய தெய்வக் கற்பு வாய்ந்த திருமகளைத் தன் மனச் சிறையில் வைத்த மன்னனது மேனியை அணுவணுவாக ஆராய்ந்து கரந்த காதலைக் கவர்ந்து செல்லக் கருதிய முறையில் வீரன் வாளி தலை முதல் தாள் வரை எள்ளிருக்கவும் இடமின்றித் துளைத்ததோ என்று மண்டோதரி வாயிலாகக் கவிஞர் கூறும் மொழிகளில் மனச் சிறை மீண்டும் நம் கண்ணெதிரே தோன்றுவதாகும். இன்னும், காவலன் மனத்தில் அழுந்தி யிருந்த காதலை அகழ்ந்தெடுத்துச் சீதையை அவன் அகச்சிறையி னின்றும் விடுவிக்கக் கருதி, இராம பாணம் தேடித் துருவியதாகக் கம்பர் அமைத்த கற்பனை கற்போர் மனத்தைக் கவர்கின்றது.

அன்றியும், ஒருவனுக்குரிய பொருளைக் களவு செய்த கள்வன் அதனை எவரும் அறியாதவாறு ஒளித்தும் மறைத்தும் பாதுகாக்கும் பான்மைபோல், இராமன் மனைவியாய சீதையைக் களவு செய்த இராவணன் அவ் வரும் பொருளின் அருமையை யறிந்து உள்ளத்தின் கண்ணே ஒளித்து வைத்தான் என்றும், அவ்வாறு மறைத்து வைத்த இடத்தை அறி

யாது மெல்ல மெல்ல வீரன் அம்பு தடவித் தடவிச் சென்றது என்றும் கவியரசர் அமைத்த அழகு ஆயுந்தொறும் அளவிலா இன்பம் அளிப்பதாகும். தவ முயன்று அரிதிற் பெற்ற தன் ஆயுளையும் காக்க மனமற்ற மன்னவன், மங்கையின் உருவினை மனத்திடை வைத்துக் காத்தா னென்றால், அத் திருமகளை உயிரினும் அருமையாக அவன் காதலித்துப் போற்றினன் என்பது சொல்லாமலே அமையு மன்றோ? இவ்வாறு அம்பினை ஏவி அயலானது அகச் சிறையி னின்றும் சீதையை மீட்ட மன்னவன் அநுமனை ஏவி, அம் மங்கையை அசோக வனச் சிறையினின்றும் விடுவித்தான். இவ்வாறு இருவகைச் சிறையி னின்றும் நீங்கிய நங்கை கற்பினுக் கணியாய் நிலமிசை நீடு வாழ்ந்தாள்.

6578

அருஞ்சொற் பொருள்

பூவினை – தாமரைப்பூவை. கமலச்செல்வி – இலக்குமி. விநயமாக – பணிவாக. கரன் - ஓர் அரக்கர் தலைவன். அயன் – பிரமன். சாயலாள்– சீதை. எயில் - மதில். நையல் - வருந்துதல். நிறை - கற்பு. உலைந்து- மனம் குலைந்து. மன்னை - இராமனை. மஞ்சனை - மைத்துனனை; இலக்குவனை. நஞ்சனையான் - இராவணன். உஞ்சனன் - உயிர் பிழைத்து. வலிமை சான்ற - பலம் நிறைந்த. வெங்குலம் - கொடிய குலம். பொருப் பனைய - மலையைப் போன்ற. யாழ் - வீணை. மண்டோதரி - இராவணன் மனைவி. மயன் - அசுரத்தச்சன். பன்னிய-சொல்லிய. அகழ்ந்து-தோண்டி. பான்மை - தன்மை. உள்ளம் - மனம். ஆயுந்தொறும் - ஆராயும்போ தெல்லாம்.

பயிற்சி வினாக்கள்

1. சீதையைக் கண்டபோது அரக்கர்கோன் தங்கைக்கு உண்டான உணர்ச்சிகள் யாவை?
2. சூர்ப்பனகை இராவணனிடம் சீதையைக் குறித்துக் கூறிய தென்ன?
3. பூவினை நீத்து வந்த நங்கை யார்? அவள் அரக்கர்கோன் மனம் புகுந்த விதம் யாது?
4. சீதை சிறையிருந்த அகச் சிறையும் புறச்சிறையும் அழகுற இலங்கும் விதம் யாது?
5. இராமனோடு போரிட்டு விழுந்த இலங்கை வேந்தன் உடல் நிலை எவ்வாறிருந்தது? அவனைக் கண்டு அவனது மனைவி புலம்பிய விதம் யாது?
6. கம்பர் சீதையைக் கற்பினுக் கணியாய்த் திகழவைத்த விதம் யாது?

10. தமிழ் இசைக் கருவிகள்

வித்துவான் திரு. ஐயன்பெருமாள் கோனார்

நம் தமிழ் மொழி இயல், இசை, நாடகம் எனத் தொன்று தொட்டு மூன்று பிரிவுகளாக வழங்கி வருகின்றது. இசைத் தமிழை முத்தமிழின் நடுநாயகமாக அமைத்த ஒன்றே நம் பண்டைத் தமிழரின் இசை உணர்ச்சிக்குப் போதிய சான்றாகும். இயற்றமிழ் நூல்கள் பெரும்பாலும் இசை தழுவிய பாக்களால் இயன்றவை; நெஞ்சையள்ளும் சிலப்பதிகார வரிப் பாடல்களும், தெய்வ மணக்கும் தேவார திருவாசகங்களும், தேனினுமினிய திவ்யப்ரபந்தங்களும் இசைத் தமிழின் அடிப்படையாகும். இசையைத் தன் அங்கமாகக் கொண்டு இயங்குவது நாடகம். எனவே, இயற்றமிழும் நாடகத் தமிழும் இயங்குவதற்கு இசை இன்றியமையாததாகும். இவ்விசைக்குப் பெருந் துணையாக இருந்த இன்னிசைக் கருவிகள் பல.

இசைக் கருவிகள் நான்கு வகைப்படும். அவை, தோற் கருவிகள், துளைக் கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக் கருவிகள் என்பன. தோலால் போர்த்து வாரினாலும் கயிற்றினாலும் இழுத்துக் கட்டப்பெற்று இசை முழக்கம் செய்வன தோற்கருவிகளாம். அவை பேரிகை, மத்தளம், பறைபோல்வன. நரம்புகளை இழுத்துக் கட்டி ஒலியுண்டாக்குவன நரம்புக் கருவிகளாம். அவை யாழ், வீணை, தம்புரா முதலியன. மூங்கில் முதலிய பொருள்களில் துளைகளையிட்டு அவற்றுள் காற்றைச் செலுத்தி ஒலி யுண்டாக்குவன துளைக்கருவிகளாம். அவை புல்லாங்குழல், நாதசுரம் முதலியன. ஒன்றோடொன்று தட்டி ஒலியுண்டாக்குவன கஞ்சக் கருவிகளாம். அவை தாளம், சேகண்டி, சப்பளாக்கட்டை முதலியன. இவற்றுள் இசை பாடும்போது மட்டும் பயன்படும் கருவிகள் சில. நாடகத்துக்கு மட்டும் பயன்படுவன சில. இசை, நாடகம் இரண்டுக்கும் பயன்படுவன சில.

தோற் கருவிகள்: பண்டைத் தமிழ் இலக்கியங்களில் தோற் கருவிகள் பல கூறப்படுகின்றன. அவை பேரிகை,

படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண் விடுதும்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, துடி, பெரும்பறை என்பனவாம். இவற்றின் பெயர்கள் யாவும் ஒலியாலும் உருவத்தாலும் அமைந்தனவாகத் தோற்றுகின்றன.

'மத்தளம்'—இதில் 'மத்து' ஓசைப் பெயர். இசைக்கு இடமாகிய கருவிகட்கெல்லாம் இக் கருவி தளமாதலின் மத்தளம் எனப் பெயர் பெற்றது. 'சல்' என்னும் ஒலி யுடையது 'சல்லிகை.' உறுமல் ஒலியை எழுப்புவது 'உறுமி.' 'பம் பம்' என்று ஒலிப்பது 'பம்பை.' 'முர் முர்' என்று ஒலிப்பது 'முருடு.' கரடிபோல முழங்குவது 'கரடிகை.' 'மொகு மொகு'. என்று ஒலிப்பது 'தமருகம்.'

தோற்கருவிகளில் மிகப் பெருமைவாய்ந்தது முரசமாகும் இது வீர முரசு, கொடை முரசு, மண முரசு என மூவகைப் படும். போரில் தோல்வியுற்ற பகையரசனின் காவல் மரத்தை வெட்டி முரசமாகச் செய்து வெற்றி முழக்கம் செய்வது **வீர முரசமாம்.** புலியோடு போராடி, அதனைத் தன் கூர்ங் கோட்டால் குத்திக் கொன்று கொம்பில் மண்ணுடன் பாய்ந்து சென்று உயிர் விட்ட இடபத்தின் மயிர் சீவாத தோலைப் போர்த்துச் செய்யப்படுவது மயிர்க்கண் முரசம் என்று நூல் கள் கூறும். இதுவும் வீர முரசத்தின் பாற்படும. பண்டைத் தமிழரசர் இம்முரசினைத் தெய்வத் தன்மையுடையதாகப் போற்றி வந்தனர். இதனை மலர் பரப்பிய கட்டிலிலே வைத் துச் சிறப்புச் செய்வர். நாளும் இசைமுழக்கத்துடன் நீர்த் துறைக்கு எடுத்துச் சென்று நீராட்டி, மாலை சூட்டி அலங்க ரித்து வழிபாடு செய்வர். இதற்குப் பலியிடுவதும் உண்டு.

போர்க்களத்தில் வீர வெறியூட்டும் தோற்கருவிகள் பல இருந்தன. அவற்றுள் சில பறையும் பம்பையும், திட்டையும் தடாரியும், முழவும் முருடும், கரடிகையும் திண்டியுமாம். இவ் விசைக் கருவிகள் யாவும் சேர்ந்து முழங்கும்போது வீரரது தலை சுழலும்; நரம்புகள் முறுக்கேறும்; போர் வெறி கொண்டு செருக்களம் நோக்குவர். 'செருப்பறை கேட்டு விருப்புற்று

மயங்கிநின்றுள் மறக்குடியிற் பிறந்த மகள்' என்று புறநானூறு கூறுவதால் போர் முரசின் இயல்பை அறியலாம்.

தமிழகத்தில் நானிலங்களுக்கும் நான்கு வகைப்பறைகள் இருந்தன. முல்லைப் பறை-தடாரி; குறிஞ்சிப் பறை-தொண்டகம்; மருதப்பறை-கிணை; நெய்தற் பறை- மீன்கோட்பறை என்பனவாம். பகைவரிடமிருந்து ஆநிரையைக் கவரும்போது வீரர்கள் முழக்குவது ஆகோட் பறை எனப்படும்.

துளைக் கருவிகள்: இசைக் கருவிகளி லெல்லாம் மிகப் பழமையானது குழலே. எல்லா வாத்தியங்களிலும் குழலையே முன்னதாகக கூறியிருக்கின்றனர். 'குழலினிது யாழினிது என்ப...' என்னும் குறளில் குழல் முன்னே வைக்கப்பட்டுள்ளதைக் காண்க. குழல்வழி நின்றது யாழே' என்பது சிலப்பதிகாரம். காட்டில் வளர்ந்திருக்கும் மூங்கில்களில் வண்டுகள் துளைத்த துளைகளின் வழியே காற்று வீசும்பொழுது இனிய ஓசை உண்டாகும். இவ் வினிய ஓசையைக் கேட்ட நம் பண்டைத் தமிழர் குழலை அமைத்தனர். முதலில் மூங்கிலிலே குழல் செய்தமைபற்றிப் புல்லாங்குழல் என்னும் பெயர் பெற்றது என்பர். இதற்கு 'வங்கியம்' என்றும் ஒரு பெயர் வழங்குகின்றது. இதற்குக் கொன்றையங் குழல், முல்லைக் குழல், ஆம்பலந்தீங்குழல் முதலிய பல பெயர்கள் இலக்கியங்களில் வழங்குகின்றன.

தற்காலத்தில் சிறப்புடன் விளங்கும் துளைக் கருவிகளில் நாதசுரம் ஒன்று. இதற்கு நாகசுரம், நாகசின்னம், நாயனம் என்னும் பெயர்களும் வழங்குகிறது. இக்கருவி தமிழகத்தில் பதினைன்காம் நூற்றாண்டிலிருந்தே வழக்கிலிருக்கின்றது என்பர். துணைக்கருவிகளில் பாம்பை ஆடவைக்கும் மகுடியும் ஒன்று. சங்கு, எக்காளம், கொம்பு, தாரை முதலியனவும் துளைக் கருவிகளாம்.

நரம்புக் கருவிகள்: நரம்புக் கருவிகளில் மிகப் பழமையானது யாழ். இது பலவகைப்படும். ஆதி யாழ் என்று ஒரு யாழ் இருந்தது. அதற்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட நரம்புகள் இருந்தனவாம். பேரியாழ் என்பது ஒன்று; அது இருபத்தொரு நரம்புகளையுடையது. மகர யாழ் என்பது பத்தொன்

பது நரம்புகளையுடையது. பதினன்கு நரம்புகளையுடையது சகோட யாழ். ஏழு நரம்புகளைக்கொண்ட செங்கோட்டி யாழ் என்று ஒன்றும் இருந்ததாகத் தெரிகின்றது. இவையாவும் வழக்காறற்றன. யாழின் பெயர் நூல்களிலிருந்து அறியப் படுகின்றனவே யொழிய அதன் உருவமே தெரியவில்லை. யாழை இயக்குவாரும் அருகினர். இந்நிலையில் தமிழ்த் தாயின் தவப் புதல்வராகிய விபுலானந்த அடிகளார் தோன்றி மறைந்த யாழைத் தமிழகம் காணப் புதுப்பித்தார். யாழ் மீண்டும் தமிழகத்தே தன் இசையைப் பரப்பத் தமிழர் முற்படுவார் களாக. தற்காலத்தில் வழங்கிவரும் வீணை யாழின் திரிபு என்பர். கோட்டு வாத்தியம், கெத்து வாத்தியம், பிடில், தம்புரா முதலியனவும் நரம்புக் கருவிகளாம்.

கஞ்சக் கருவிகள் : வெண்கலத்தினல் செய்து ஒலி யெழுப்பும், தாளம், ஜாலரா, சேகண்டி, கிண்கிணி முதலியன கஞ்சக் கருவிகளாம்.

இவையன்றி மண்ணினல் செய்த பானையையும் தற் காலத்தில் இசைக் கருவியாகக் கொண்டு வழங்குகின்றனர். இது கடம் எனப் பெயர் பெறும். இசைக் கருவிகளுக்கு 'இயம்' என்னும் பெயர் சங்க நூல்களில் காணப்படுகின்றது. பல வகை வாத்தியங்களுக்குப் 'பல்லியம்' என்னும் பெயர் வழங்குகின்றது. பல இசைக் கருவிகளையும் வாசிக்கத் தெரிந்த ஒரு புலவர் நெடும்பல்லியத்தனர் என்று வழங்கப்பெறு கின்றனர்.

சங்க காலத்தில் இசைவாணர் பலர் இசைக் கலையை வளர்த்துச் சிறந்த நூல்கள் பல இயற்றினர். அவை யாவும் காலச் சுழலில் பட்டு மறைந்தொழிந்தன. பல நுணுக்கங்களைக் கொண்டு பல்லுயிர்களையும் தன் வசமாக்கிவந்த நம் தமிழ்ப் பண்கள் வடமொழிப் போர்வை போர்த்துக் கருநாடக சங்கீத மாயின. இன்னிசைக் கருவிகள் பலவற்றுள் அன்னியரது படையெடுப்பினலும் அடிமைப்படுத்திய ஆட்சியினலும் சீரழிந் தவை போக இன்று வழக்கிலிருப்பன சிலவே. இவற்றை யாவது போற்றிக் காப்பது தமிழ்மக்களது கடமையாகும்.

அருஞ்சொற் பொருள்

முத்தமிழ் - மூன்று தமிழ். போதிய - போதுமான. சான்று - சாட்சி. வரிப்பாடல் - ஒருவகை இசைப் பாட்டு. கஞ்சம் - வெண்கலம். காவல் மரம் - பண்டைத் தமிழரசர் ஒவ்வொருவராலும் போற்றிக் காக்கப் பட்ட ஒவ்வொரு வகை மரம். இடபம் – காளை. செருப்பறை - போர்ப் பறை. நானிலம் - நான்கு வகை நிலம்: முல்லை, குறிஞ்சி, மருதம், நெய் தல். ஆநிரை - பசுக் கூட்டம். ஆகோட்பறை - பசுவைக் கைக்கொள் ளும்போது அடிக்கும் பறை. என்ப – என்பர்.

பயிற்சி வினாக்கள்

1. பண்டைத் தமிழர் இசையுணர்ச்சி மிக்கவர் என்று எதனாலறிய லாம்?
2. இசைத் தமிழுக்கு அடிப்படையான நூல்கள் யாவை?
3. இசைக் கருவிகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை? உதார ணங்களுடன் விளக்குக.
4. தோற்கருவிகள் சிலவற்றின் பெயர்களையும், அவற்றின் காரணங் களையும் தெரிவிக்க.
5. வீரமுரசத்தின் அமைப்பு பெருமை ஆகியவற்றைத் தெரி விக்க.
6. நானிலங்களும் அவற்றிற்குரிய பறைகளும் யாவை?
7. இசைக் கருவிகளில் பழமையானது எது? அது எவ்வாறமைக் கப்பட்டது?
8. நரம்புக் கருவிகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக. நரம்புக் கருவிகளில் பழமையானது எது? அது எத்தனை வகைப் படும்?
9. கஞ்சக் கருவிகள் யாவை?
10. நெடும் பல்லியத்தனார்—குறிப்பு வரைக.

11. சுப்பிரமணிய பாரதியார்

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

பிறந்த தேசம், பழகும் மனிதர்கள் முதலிய தொடர்புகளால் ஒருவருடைய வாழ்க்கையில் சில பழக்கங்கள் அமைகின்றன. ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் எட்டயபுரத்திற் பிறந்தவர். இவர் பிறந்த பாண்டி நாடு தமிழருக்கு உரிய நாடு. தமிழ் நாடென்று பழைய காலத்தில் அதற்குத்தான் பெயர். கம்பராமாயணத்தில் ஆஞ்சநேயர் முதலியவர்கள் சுக்கிரீவனால் தென் தேசத்துக்கு அனுப்பப்பட்டபோது அங்கே உள்ளவற்றைச் சுக்கிரீவன் சொல்லுவதாக உள்ள பகுதியொன்றுண்டு; அங்கே ஒரு பாட்டில்,

> " தென்தமிழ் நாட்டகன் பொதியிற் றிருமுனிவன்
> தமிழ்ச் சங்கம் சேர்கிற் பீரேல்,
> என்றுமவண் உறை விடமாம் "

என்று அவன் கூறியதாக இருக்கிறது; "நீங்கள் பாண்டி நாட்டை அடைந்தால், அங்கே உள்ள பொதியில் மலைக்கருகில் செல்லும்பொழுது போகும் காரியத்தை மறந்துவிடக்கூடாது; ஏனென்றால் அம் மலையில் அகத்தியருக்குரிய தமிழ்ச் சங்கத்தை அணுகினால் தமிழ் நயத்தில் ஈடுபட்டு விடுவீர்கள்" என்று அவன் சொன்னதாகத் தெரிகிறது. இதனால் பாண்டி நாட்டின் பெருமை வெளிப்படுகிறதல்லவா ?

பாரதியார் பிறந்த எட்டயபுர ஸமஸ்தானத்தில் பல வித்துவான்கள் இருந்தார்கள். அந்த ஸமஸ்தானத்து வித்துவானாகிய கடிகை முத்துப் புலவருடைய பெருமையை யாரும் அறிவார்கள். அவருடைய மாணுக்கருள் ஒருவராகிய உமறுப் புலவரென்னும் முகம்மதிய வித்துவான் முகம்மது நபியின் சரித்திரமாகிய சீறுப் புராணத்தை இயற்றியிருக்கிறார். அந்நூல் ஒரு தமிழ்க் காவியமாக இருக்கிறது. எட்டய புரத்தில் அங்கங்கே உள்ளவர்கள் தமிழ்ப் பாடல்களைச் சொல்லியும் கேட்டும் இன்புற்று வருபவர்கள். இதனால் பாரதியாருக்கு இளமை தொடங்கியே தமிழில் விருப்பம் உண்டாயிற்று. அது வர வர மிக்கது.

இவர் இளமையில் ஆங்கிலக் கல்வி கற்ருர். தம்முடைய தமிழறிவை விருத்தி செய்துகொள்ளும் பொருட்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து சில காலம் படித்தார். சிறு பிராய முதற்கொண்டே இவருக்குச் செய்யுள் இயற்றும் பழக்கம் உண்டாயிற்று. அக்காலத்திலேயே தேசத்தின் நிலைமை இவருடைய மனத்திற் பதிந்தது. தெய்வத்தினிடத்திலும், தேசத்தினிடத்திலும், பாஷையினிடத்திலும் அன்பில்லாதவர்களைக் கண்டு இவர் மிக வருந்திஞர். முயற்சியும் சுறு சுறுப்பும் இல்லாமல் வீணுகக் காலத்தைப் போக்குபவர்களை வெறுத்தார். புதிய புதிய கருத்துக்களை எளிய நடையில் அமைத்துப் பாட வேண்டுமென்ற உணர்ச்சி இவருக்கு வளர்ந்துகொண்டே வந்தது.

இவர் சில காலம் சேதுபதி ஹைஸ்கூலில் பண்டிதராக இருந்ததுண்டு. பிறகு, சென்னைக்கு வந்தார். இங்கே ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் இவரிடத்தில் ஈடுபட்டுச் ‘சுதேசமித்திரன்’ ஆசிரியர்களுள் ஒருவராக இவரை இருக்கச் செய்தார். கட்டுப்பாடான வேலைகளைச் செய்வதிற் பிரியமில்லாத பாரதியார் அந்த வேலையில் அதிக காலம் இருக்கவில்லை.

சென்னையில் இவர் இருந்த காலத்தில், நான் இவரோடு பலமுறை பழகியிருக்கிறேன். பிரசிடென்சி காலேஜில் வாரந்தோறும் நடைபெறும் தமிழ்ச்சங்கக் கூட்டத்துக்கு வருவார். பேசுவார்; புதிய பாட்டுக்களைப் பாடுவார். வருஷ பூர்த்திக் கொண்டாட்டங்களில் புதிய செய்யுட்கள் செய்து வாசிப்பார். ஒருமுறை, ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி ஐயர் தலைமையில் அச் சங்கத்தில் ஜி. ஏ. வைத்யராமையர் பேசிஞர். கிருஷ்ணசாமி ஐயருடைய தமிழபிமானமும், தமிழ் வித்துவான்களை ஆதரிக்கும் இயல்பும் தெரியாத பலர், “இவருக்குத் தமிழ்ப் பாஷையில் பழக்கம் இல்லையே, தமிழில் என்ன பேசப் போகிருர்?” என்று நினைத்தனர். அவரோ, “தமிழைப்பற்றி அதிகமாகப் பேசுவானேன்? உலகத்திலுள்ள பலபாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டு விளங்கும் திருக்குறளைத் திருவள்ளுவர் இயற்றிய பாஷை இந்தப் பாஷை. நவரசமும் பொருந்திய இராமாயணத்தைக் கம்பர் செய்த பாஷை இது. எல்லோருடைய மனத்தை

யும் கரைத்து உருக்கித் தெய்வ பக்தியை உண்டாக்கும் தேவாரத்தை நாயன்மார்கள் இயற்றிய பாஷை இது" என்று உற்சாகத்தோடு பிரசங்கம் செய்தார். கேட்ட யாவரும் ஆச்சரிய முற்ருர்கள். அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த பாரதியார் அந்தப் பிரசங்கத்தில் மிகவும் ஈடுபட்டார். பின்பு கிருஷ்ணசாமி ஐயர், பாஷையின் பெருமையையும், தேசத்தின் பெருமையையும் வெளிப்படுத்தி யாவருக்கும் விளங்கும்படியான பாட்டுகளைப் பாடியனுப்ப வேண்டுமென்று என்னிடம் சொன்ஞர். எனக்கு அவகாசம் இல்லாமையால் வேருெருவரை அனுப்பினேன். அவருடைய பாட்டுக்கள் அவருக்குத் திருப்தியை அளிக்கவில்லை. பிறகு பாரதியாரே அவருடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்தார். ஸ்ரீ கிருஷ்ணசாமி ஐயரது பிரசங்கத்தில் இருந்த கருத்துக்களே பாரதியார், "கம்பன் பிறந்த தமிழ் நாடு" என்பது போன்ற பகுதிகளை அமைத்துப் பாடுவதற்குக் காரணமாக இருந்தன.

தேசத்தின் பெருமையை யாவரும் அறிந்து பாராட்டும் படியான பாட்டுக்களைப் பாடவேண்டுமென்ற ஊக்கம் இவருக்கு நிரம்ப இருந்தது. அதனுல் இவர் பாடிய பாட்டுக்கள் மிகவும் எளிய நடையில் அமைந்து படிப்பவர்களைத் தம்பால் ஈடுபடுத்துகின்றன. இவர் உண்மையான தேசபக்தியுடன் பாடிய பாட்டுக்களாதலின் அவை இவருக்கு அழியாத பெருமையை உண்டாக்குகின்றன.

பாரதியார் தேசியப் பாட்டுக்களைப் பாடியதோடு வேறு பல துறைகளிலும் பாடியிருக்கிருர். இசைப்பாட்டுக்கள் பலவற்றைப் பாடியிருக்கிருர். இவர் சங்கீதத்திலும் பழக்கம் உடையவர். கவிகளின் தன்மையை உவமானமாக அமைத்து ஒரு புலவர்,

"கல்லார் கவிபோற் கலங்கிக்
கலைமாண்ட கேள்வி
வல்லார் கவிபோற் பலவானதுறை
தோன்ற வாய்த்துச்
செல்லாறு தோறும் பொருளாழ்ந்து
தெளிந்து தேயத்
தெல்லாரும் வீழ்ந்து பயன் கொள்ள
இறுத்த தன்றே"

என்று சொல்லியிருக்கிறார். அதற்கேற்ப விளங்குபவை இவருடைய செய்யுட்கள். இப்பாட்டில் " தேசத்து எல்லாரும் வீழ்ந்து பயன் கொள்ள " என்றது இவருடைய பாட்டுக்களுக்கு மிகவும் பொருத்த முடையதாகும்.

பாட்டுக்களின் பாகம் ஐந்து வகைப்படும். அவை நாளிகேர பாகம், இக்ஷு பாகம், கதலீபாகம், திராக்ஷா பாகம், க்ஷீரபாகம் என்பனவாம். நாளிகேர பாகமென்பது தேங்காயைப் போன்றது. தேங்காயில் முதலில் மட்டையை உரிக்க வேண்டும்; பிறகு ஓட்டை நீக்க வேண்டும்; அதன் பிறகு துருவிப் பிழிந்து வெல்லம் சேர்த்துச் சாப்பிட வேண்டும். இந்த வகையிலுள்ள பாட்டுக்கள் சில உண்டு. அதைப் பாடுபவர்கள் தம்முடன் அகராதியையும் எடுத்துக் கொண்டு போகவேண்டும். சில சமயங்களில் அவர் களுக்கே தாங்கள் செய்த பாட்டுக்களுக்கு அர்த்தம் விளங்காமற் போய்விடும்.

இக்ஷு பாகமென்பது கரும்பைப் போன்றது. கரும்பைக் கஷ்டப்பட்டுப் பிழிந்து ரஸத்தை அருந்த வேண்டும். கதலீபாக மென்பது வாழைப்பழத்தைத் தோலுரித்து விழுங்குவது போலச் சிறிது சிரமப்பட்டால் இன்சுவையை வெளிப் படுத்துவது. திராக்ஷா பாகம் முந்திரிப் பழத்தைப் போல எளிதில் விளங்குவது. க்ஷீரபாகம் அதனிலும் எளிதில் விளங்குவது. குழந்தை முதல் யாவரும் உண்பதற்குரிய தாகவும், இனிமை தருவதாகவும், உடலுக்கும் அறிவுக்கும் பயன் தருவதாகவும் இருக்கும் பாலைப்போல இருப்பது. பாரதியாருடைய கவிகள் க்ஷீர பாகத்தைச் சார்ந்தவை. சிலவற்றைத் திராக்ஷா பாகமாகக் கொள்ளலாம்.

ஆங்கிலம், வங்காளம் முதலிய பாஷைகளிற் பழக்க முடையவராதலால் அந்தப் பாஷைகளிலுள்ள முறைகளை இவர் தம் கவிகளில் அமைத்திருக்கிறார். இவருடைய கவிதைகள் ஸ்வபாவோக்தி யென்னும் தன்மை நவிற்சி யணியை யுடையவை. பழைய காலத்தில் இருந்த சங்கப் புலவர்கள் பாடல்களில் தன்மை நவிற்சிதான் காணப்படும். அனாவசியமான வருணனைகளும் சொல்லடுக்குகளும் கல்வி

யின் ரஸத்தை வெளிப்படுத்துவனவல்ல. சில காலங்களில் சில புலவர்கள் தங்கள் காலத்திலிருந்த சில ஜமீன்தார்கள், பிரபுக்கள் முதலியவர்களுடைய வற்புறுத்தலுக்காக அனுவசிய மான வருணனைகளை அமைத்ததுண்டு.

பாரதியாருடைய பாட்டுக்களில் தெய்வ பக்தியும், தேச பக்தியும் ததும்புகின்றன. தனித்தனியாக உள்ள பாட்டுக்கள் இயற்கைப் பொருள்களின் அழகை விரித்தும், நீதிகளைப் புகட்டியும், உயர்ந்த கருத்துக்களைப் புலப்படுத்தியும் விளங்கு கின்றன.

இவருடைய வசனத்தைப்பற்றிச் சில சொல்ல விரும்பு கிறேன். பாட்டைக் காட்டிலும் வசனத்திற்குப் பெருமை உண்டாயிருப்பதன் காரணம் அது பாட்டைவிட எளிதில் விளங்குவதனுல்தான். பாரதியாருடைய பாட்டும் எளிய நடையுடையது; வசனமும் எளிய நடையுடையது. வருத்த மின்றிப் பொருளைப் புலப்படுத்தும் நடைதான் சிறந்தது. பாரதியாருடைய வசனம் சிறு வாக்கியங்களால் அமைந்தது; அர்த்த புஷ்டியுடையது. இவருடைய கவிகளின் பொருள் படிக்கும்போதே மனத்துக்குள் பதிகின்றது. வீரரஸம், சிருங்காரரஸம் ஆகிய இரண்டும் இவருடைய பாட்டுக்களில் அதிகமாய்க் காணப்படுகின்றன. பாரதியார் அழகாகப் பேசும் ஆற்றல் வாய்ந்தவர்.

இவருடைய பாட்டுக்கள் எல்லோருக்கும் உணர்ச்சியை உண்டாக்குவன; தமிழ் நாட்டில் இவருடைய பாட்டை யாவரும் பாடி மகிழ்வதனுலேயே இதனை அறிந்துகொள்ள லாம். கடல்கடந்த தேசங்களாகிய இலங்கை, பர்மா, ஜாவா முதலிய இடங்களிலும் இவருடைய பாட்டுக்கள் பரவியிருக் கின்றன. அங்கே உள்ளவர்களில் சிலர் இவரைப்பற்றி எழுத வேண்டுமென எனக்குக் கடிதங்கள் எழுதியதுண்டு. "மணவைமன் கூத்தன் வகுத்த கவி, தளைபட்ட கடலேழையுந் தாண்டியதே" என்று ஒரு புலவருடைய கவியைப் பற்றி வேறொரு புலவர் பாடியிருக்கிருர். ஸ்ரீராமனுடைய கவியாகிய ஆஞ்சநேயர் ஒரு கடலைத்தான் தாண்டினுர்; மணவைக் கூத்தன் கவியோ ஏழு கடல்களையும் தாண்டிவிட்டது. ஸ்ரீராம

னுடைய கவி தளையில்லாமல் தாண்டியது; அங்ஙனம் செய்தது ஆச்சரியமல்ல. இந்தப் புலவர் கவியோ, தளையுடைய காலோடு ஏழு கடலைத் தாண்டியது என்கின்றார். தளை யென்பதற்கு விலங்கு என்னும் கவிக்குரிய லக்ஷணங்களுள் ஒன்றென்றும் பொருள். இந்தப் பாட்டுக்கு இப்போது இலக்கியமாக இருப்பவை பாரதியாருடைய கவிகளாகும்.

பாரதியார் தாம் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், ஜனங் களுக்கு நன்மை உண்டாக வேண்டுமென்ற கொள்கையை யுடையவர். தைரியமுடையவர். இவருடைய புகழ் தமிழ் நாட்டின் புகழாகும்.

அருஞ்சொற் பொருள்

ஆஞ்சநேயர் – அனுமார். பொதியில் - பொதிய மலை. திருமுனிவன் – அகத்தியன். பிராயம் - வயது. பாஷை – மொழி. வருஷ பூர்த்தி – ஆண்டு நிறைவு. நவரசம் – ஒன்பது வகைச் சுவை. அவகாசம் - ஓய்வு. மாண்ட– மாட்சிமைப்பட்ட. செல்லாறு தோறும் – செல்லுகின்றவழி ஒவ்வொன்றி லும். வீழ்ந்து - விரும்பி. நரளிகேரம்-தேங்காய். இக்ஷு – கரும்பு. கதலி - வாழைப்பழம். திராக்ஷா - முந்திரிப்பழம். க்ஷீரம் – பால். பாகம் – செய் யுள் நடை. தன்மை நவிற்சி - உள்ளதை உள்ளவாறே கூறுதல். கவியின் ரசம் - செய்யுளின் சுவை. அர்த்த புஷ்டி – பொருள் வளம். வீர ரசம் - வீரச்சுவை. சிருங்கார ரசம்-இன்பச் சுவை. தளை - விலங்கு; செய்யுளுறுப் புக்களில் ஒன்று. கால் - பாதம்; செய்யுள் அடி.

பயிற்சி வினாக்கள்

1. பாண்டிய நாட்டின் பெருமையைத் தெரிவிக்க.
2. பாரதியாருக்கு இளமையிலேயே தமிழில் விருப்பமும் பாட் டியற்றும் உணர்ச்சியும் உண்டானது ஏன்?
3. 'கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்பன போன்ற பகுதிகளைப் பாரதியார் பாடக் காரணமான நிகழ்ச்சிகளைத் தெரிவிக்க.
4. பாக்களின் நடை (பாகம்) எத்தனை வகைப்படும்? அவை யாவை? ஒவ்வொன்றைப் பற்றியும் விளக்கி வரைக.
5. பாரதியார் பாட்டுக்களில் விளங்கும் சிறப்பியல்புகள் யாவை?
6. பாரதியார் வசன நடையின் சிறப்பைத் தெரிவிக்க.
7. கடிகை முத்துப் புலவர், உமறுப் புலவர், குறிப்பு வரைக.

12. கிராமச் சிறு கைத்தொழில்

திரு. ச. முத்தையா, எம். ஏ.

நம் நாட்டினிரிடையே 'எல்லாம் கர்ம பலன்,' என்று முடிவு கட்டும் குணம் மிகவும் வலுத்து நிற்கின்றது; 'மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்,' என்ற வாழ்க்கைத் தத்துவமே தலையெடுத்து உலவுகிறது. 'எல்லாம் அவன் செயல்,' என்று எந்தக் காரியத்திற்கும் வியாக்யானம் கொடுப்பது சர்வ சாதாரணமாய் இருக்கிறது. கஷ்டப்படுவோர் அக்கஷ்ட நிவர்த்திக்கான முயற்சி செய்வதில்லை. அக்கஷ்டம் தலையெழுத்தின்படியாம் என்று அநேகர் சும்மா இருப்பது கண் கூடு. இப்படிப்பட்ட போலி வேதாந்தம் பேசிப்பேசி நம்மவர் பலர் வீண் பொழுது போக்குகின்றனர். அவர்கள் தங்கள் பொருள் நிலையை விருத்தி செய்ய விரும்புகிறார்களில்லை; அதற்காக முனைந்து முயற்சி செய்கிறார்களில்லை. நகரங்களிலிருக்கும் மாந்தர்களை விடக் கிராமவாசிகள் இந்த விஷயத்தில் பெரிய குற்றவாளிகளாய் இருக்கிறார்கள்.

கிராமவாசிகள் ஓர் ஆண்டில் சுமார் 4 அல்லது 6 மாதங்களே வேலை செய்கிறார்கள். தக்க இயந்திரங்களின் உதவியைக் கொண்டு சாஸ்திரீயமான முறையில் அதே வேலையை 40 நாட்களுக்குள் செய்துவிடலாமென்று அறிஞர் கூறுகின்றனர். நல்ல நீர்ப்பாசன வசதிகள் இல்லாத இடங்களிலே வருஷத்துக்கு 150 முதல் 270 நாட்கள் வரையில் வீண் பொழுது போக்க வேண்டியிருக்கிறது எனக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவைப் பற்றி ஆராய்ச்சி செய்த டாக்டர் சிலேட்டா என்பார், 'வருஷத்தில் பன்னிரண்டில ஐந்து பங்கு (5/12) காலத்தைத்தான் விவசாயி பயனுளதாகச் செலவிடுகிறான்,' எனக் குறிப்பிட்டிருக்கிறார். அரசாங்க விவசாயக் குழுவின் அங்கத்தினர், "பொதுவாகக் கூறுமிடத்து விவசாயி மிகக் குறைந்தபட்சம் இரண்டு முதல் நான்கு மாதம் வீண்பொழுது போக்குகின்றான்," என அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். பம்பாய் டெக்கானைப்பற்றி எழுதியுள்ள திரு. கீட்டிஞ்சு, 'விவசாயி சாதாரணமாக 180 முதல்

190 நாட்களுக்குமேல் வேலை செய்யக் காணேன்,' என எழுதியுள்ளார். திரு. கால்வர்ட் என்பவர், 'பஞ்சாபு மாகாணத்தில் சுமார் 150 நாட்கட்கு மேல் விவசாயிகட்கு வேலை இல்லை,' எனக் கண்டிருக்கிறார். ஐக்கிய மாகாண பாங்கு விசாரணைக் கமிட்டியார், 'விவசாயிகளுக்கு 200 நாட்கட்கு மேல் வேலை இல்லை,' எனக் கூறியுள்ளார்.

எனவே, வேலை செய்த நாட்கள் தவிர ஏனைய நாட்களை விவசாயிகள் வீணே கழிக்கின்றனர்கள். விவசாயத்தில் மாத்திரம் போதிய வரும்படி கிடைப்பது அரிதாயிருக்கிறது. எனவே, திரு. டார்லிங்கு என்பார் கூறியுள்ளபடி விவசாயி கடனுண்டு வாழாமல், வறுமையால் வருந்தாமல் இருக்கவேண்டுமானால், ஏதேனுமோர் உதவிக் கைத்தொழிலைக் கைக்கொள்ள வேண்டும். ஐரோப்பிய நாடுகளில், முக்கியமாகப் பிரான்சு, ஜெர்மனி, இட்டலித் தேசங்களில், ஆடுமாடு போஷணை செய்தல், பன்றி வளர்த்தல், கோழியைப் பெருக்கல் முதலியவை முக்கியமான கிராமக் கைத்தொழில்களாகும். அவை நல்ல பயனையும் தருகின்றன.

இந்திய விவசாயிகட்கு ஏற்றனவாக, அவர்களின் விவசாய முயற்சிக்கு இடையூறு இல்லாதனவாக, வருவாய் தரத்தக்கனவாக, சில கைத் தொழில்களை ஏற்படுத்த வேண்டும். சர் ஆல்பிரட் சேடர்டன் (Sir Alfred Chatterton) கூறியுள்ளது போல இந்தியாவில் அநேக சிறு கைத்தொழில்கள் விருத்தியாவதற்கு ஏற்ற வசதிகளுள்ளன. கடந்த நூறு ஆண்டுகட்கு முன்பு இந்தியாவில் எல்லா இடங்களும் எல்லாக் கைத்தொழிலிலும் சிறந்திருந்தன. கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆதரவில் டாக்டர் புக்கனன் (Dr. Buchanan) என்பவர் வட இந்தியா தென்னிந்தியா முழுவதையும் சுற்றிப் பார்த்துக் கைத்தொழில்களின் நிலையைப் பற்றி விவரமாய் எழுதியிருக்கிறார். அக்குறிப்புகள் 1838-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன. அவற்றைப் பார்த்தால், நாடெங்கும் எல்லாத் தொழில்களும் செய்யப்பட்டன என்பதை அறியலாம். குறித்த சில ஜாதியாரே குறித்த தொழில்களைச் செய்யலாம் என்ற கட்டுப்பாடு அவ்வளவாக அப்போதில்லை. உதா

ரணமாகப் பார்ப்பனப் பெண்டிர் தவிர மற்ற எல்லாச் சாதிப் பெண்களும் நூல் நூற்பதையும், பட்டு இழைப்பதையும், தமது வேலையாக வீடுகளில் செய்து வந்தார்களென அவர் குறிப்பிட்டிருக்கிறார். அத்தொழில்களெல்லாம் அரசினர் நோக்கு முறை வேறுபாடுகளாலும், மில்களின் போட்டியாலும் அழிந்தொழிந்து போயின. வறுமை மிகுந்தது. எனவே, அக் கைத்தொழில்களைப் புத்துயிர் பெற்று எழுந்துலவும்படிச் செய்ய வேண்டுவது இன்றியமையாதது.

கைத்தொழில்களை உயிர்ப்பிக்கும் போதும், துவக்கும் போதும் சில விஷயங்கள் கவனிக்கற்பாலன. சிறு கைத் தொழிற்சாலைகளில் உண்டாக்கப்படும் பொருள்கள் மிக பிரயோஜனமானவையாக இருக்கவேண்டும். திரு. உல்பு **(Mr. Wolf)** என்பவர், "இங்கிலாந்தில், இந்தியப் பொருள்கள் ஜப்பான் பொருள்களைப்போல அவ்வளவு நன்றாக விற்பதில்லை. இந்தியப் பொருள்கள் அழகியவாகவும் செவ்வையாகவும் செய்யப்பட்டிருப்பினும், ஜப்பான் பொருள்களைப் போல அத்துணை உபயோகமானவையாக இல்லை" எனக் குறிப்பிட்டிருக்கிறார். எனவே, கிராமங்களில் செய்யப்படும் பொருள்கள் மிகவும் பிரயோஜனமானவைகளாக இருத்தல் வேண்டும்.

இரண்டாவதாகக் கிராமங்களில் செய்யப்படும் பொருள்களின் மதிப்பில் பெரும்பாலான பாகம் தொழிலாளியின் உழைப்பினால் ஏற்பட்டதாய் இருத்தல் வேண்டும். அப்படிப் பொருள்களை உண்டாக்கின்றவன் தொழிலாளிக்குத் தக்க ஊதியம் கிடைக்கும். அந்தந்த இடத்தில் எந்த மூலப் பொருள்கள் எளிதில் கிடைக்கின்றனவோ, அவற்றிற்கேற்ற பண்டங்களை உற்பத்திசெய்யவேண்டும். இங்குக் குறிப்பிட்டவைகளில் இரண்டாந் தன்மையைப் பெற்றுள்ளவை கண்ணாடி வளையல் தொழில் போன்றவை.

மூன்றாவதாகக் கவனிக்கவேண்டிய விஷயம் கிராமங்களில் மிக அழகிய, தனிப்பட்ட மனிதர் விரும்பத்தக்க, பொருள்களையே உற்பத்தி செய்ய வேண்டுமென்பதே. சாதாரணமான, பெருவாரியான மக்கள் உபயோகிக்கிற, ஒரே மாதிரி

யான பொருள்களை இயந்திர உதவியால் அபாரமாக உற்பத்தி செய்து குறைந்த விலைக்குக் கொடுக்கக்கூடும். அப்படிப்பட்ட பொருள்களைக் கிராமத்தினர் உற்பத்தி செய்ய முயலுவதில் பயனில்லை. விசேஷ தன்மையதாய், ஒன்றைப் போல மற்றொன்றில்லாததாய் தனவந்தர் விரும்பக் கூடியதாய் உள்ள பொருள்களைக் கிராமங்களில் உற்பத்தி செய்தால், பெரும் பயன் கிட்டும். உதாரணமாக, இரத்தினக் கம்பளத்தை எடுத்துக் கொள்வோம். நெய்வோன் திறமைக்கேற்றவாறு பல வேறு விதமான அழகிய கம்பளங்கள் நெய்யலாம் அல்லவா ?

சமீப காலம் வரையில் நீராவியையே இயந்திரங்களை இயக்குவதற்கு உபயோகித்தனர். இப்போதோ, மின்சார சக்தியின் உதவியால் கிராமங்களில் சிறு கைத்தொழிற்சாலைகள் பலவற்றை எளிதில் ஏற்படுத்தலாம்.

கிராமங்களில் மிக முக்கியமாக வளர்க்கக்கூடிய கைத்தொழில், ஆடு மாடு சம்ரக்ஷணை. பால், பாலேடு வியாபாரத்தில் டென்மார்க்குத் தேசத்தினர் மிக்க இலாபம் அடைகின்றனர். அவர்களைப்போல நாமும் நல்ல பசுக்களைச் செவ்வையாகப் போஷித்து, திரண்ட பாலைப் பக்கத்திலுள்ள பட்டினங்கட்கு அனுப்பலாம். வெண்ணெயை டின்களில் அடைத்து, நீண்ட தூரத்திலுள்ள இடங்கட்குக் கூட அனுப்பலாம். அம் மிருகங்களின் சாணம் முதலியவை தக்க எரு ஆகும். திரு. கீட்டிஞ்சு என்பவர், விவசாயிகட்கு இதுவே மிகச் சிறந்த தொழிலாகும் எனக் கூறுகிறார்.

‘கோழி வளர்த்தல்’ நல்ல தொழில். வற்றிய உடம்புடன் ஊர் முழுதும் திரிந்து வரும்படி கோழிகளை வளர்த்தல் அறிவுடைமையன்று. கோழிகட்கெனக் கூண்டுகள் தயாரித்து, நல்ல போஷணையில் வைத்து, நல்ல ஜாதிக் கோழிகள் வளர்த்தால், முட்டைகளைப் பக்கத்து ஊரிலோ அல்லது சற்று தூரத்தில் உள்ள ஊரிலோ விற்று நல்ல ஊதியம் பெறக் கூடும்.

‘தேனீ வளர்த்தல்’ இலாபகரமான ஒரு தொழில். தேனீக்கட்கென நல்ல கூண்டுகள் தயாரித்து, நல்ல பூச்சிகளை விட்டுவிட்டால், நிறையத் தேனைப் பெறலாம். சென்னையி

லுள்ள கோகுலத்தாரும், சென்னை விவசாய டிபார்ட்மென்டாரும் இதைப்பற்றிய முழு விவரங்களையும் மகிழ்வுடன் தெரிவிப்பார்கள்.

விவசாயத்திற்கு வேண்டிய சிறு கருவிகளை ஆங்காங்குச் சிறு தொழிற்சாலைகளில் கிராமவாசிகள் செய்ய முயலவேண்டும். அப்போது தொலை தூரத்திலிருந்து கொண்டுவரும் தூக்குக் கூலி இல்லாது போகும். நமது இஷ்டப்படி வேண்டிய கருவிகளைச் செய்து கொள்ளலாம்.

'பட்டுப் பூச்சி வளர்த்தல்' மிக நல்ல கைத்தொழிலே; ஆனால், அதை எல்லா விடத்திலும் செய்ய முடியாது. சீதோஷ்ண ஸ்திதி முதலியவை ஏற்றவையாக இருக்குமிடங்களிற்றான் அத்தொழிலைச் செய்ய முடியும்.

'பூ, பழத் தோட்டங்கள் வைத்தல்' மிகப் பிரயோசனகரமானது. பல இடங்களில் காய் கறிகளைப் பயிராக்குவதில்லை; இனிய பல பழங்களை உண்டாக்குவதில்லை; அழகிய மணமுடைப் பூச் செடிகளை வளர்ப்பதில்லை. இந்தத் துறையில் கிராமவாசிகள் முயன்றால், நல்ல இலாபம் பெறலாம்.

இவையல்லாமல், குறிப்பிடத்தக்க சிறு கைத்தொழில்கள் எத்தனையோ உள. சரிகை தைத்தல், துணிகளில் பூ வேலை செய்தல், அரக்கு வேலை செய்தல், நெட்டி வேலை செய்தல், விளையாட்டுச் சாமான்கள் செய்தல், மூங்கில் பிரம்பு சாமான்கள் செய்தல், கயிறு திரித்தல், பின்னல் வேலை செய்தல், பீடி, சுருட்டு, சிகரெட்டுச் செய்தல், கண்ணாடி வளையல் செய்தல், மரச் சாமான்கள் செய்தல், தித்திப்புத் தின்பண்டங்கள் பெப்பர்மிண்டு முதலியவை செய்தல், கம்பளி, ஜமக்காளம் நெய்தல், மா அரைத்தல், நெல் குற்றல், எண்ணெய் ஆட்டல், பழங்களையும் பழங்களாலான பண்டங்களையும் டின்களிலடைத்து அனுப்பி வியாபாரஞ் செய்தல், மண் பாண்டங்கள் செய்தல், தாவரப் பொருள்களிலிருந்து சாயம் இங்கி வர்ணம் முதலிய பொருள்களை உற்பத்தி செய்தல், பொத்தான்கள் செய்தல், பென்சில் பேனாக்கட்டை முதலியன செய்தல், எனாமல் சாமான்கள் செய்தல், சோப்பு வாசனைத் திரவியங்களைச் செய்தல், சர்க்கரை செய்தல், கத்தி முதலிய

சாமான்கள் செய்தல், தீக் குச்சி செய்தல், தோல் சாமான்கள் செய்தல், பனியன், கால் மேல்ஜோடு முதலியவைகளைப் பின்னல், காகிதஞ் செய்தல், பிரஷ் செய்தல் **Brush Making** முதலிய பலவாகும். ஒவ்வொரு தொழிலையும் பற்றிய குறிப்பு களையும் இங்கே விரிவாக எழுதுவதற்கிடமில்லை. * *

எனவே, கிராமவாசிகள், தங்கள் நேரத்தை வீணுக்காது, பல துறைகளில் புகுந்து பல தொழில் மூலமாகவும் பொருள் விருத்தி செய்தால், இல்லாமை இல்லாததாகி விடும்.

அருஞ்சொற் பொருள்

வியாக்யானம் - விளக்கவுரை. மாந்தர் – மக்கள். குழு - கூட்டம். சம்ரக்ஷணை - பாதுகாப்பு. போஷித்து – பேணி; ஆதரித்து. இல்லாமை - வறுமை.

பயிற்சி வினாக்கள்

1. **நம் நாட்டவர் பொழுது போக்கப் பேசும் போலி வேதாந்தம் எனப்படுவன யாவை ?**
2. **இந்திய விவசாயிகள்மீது கூறப்படும் குறைகள் யாவை ?**
3. **புக்கனன் என்பார் இந்தியக் கைத்தொழில் நிலைமையைப் பற்றி எழுதிய குறிப்புக்கள் யாவை ?**
4. **கிராமக் கைத்தொழில்களை உயிர்ப்பிக்கும்போது கவனிக்க வேண்டியன யாவை ?**
5. **கிராம மக்கள் மேற்கொள்ளத் தக்க சிறு தொழில்களாகக் குறிக்கப்படுவனவற்றைத் தொகுத்துரைக்க.**

TAMIL MANI MALAI

FORM V PART I

BY

VIDWAN T. AIYANPERUMAL K

&

VIDWAN T. K. KUPPUSWAMI A

★

PALANIAPPA BROT

TRICHY & MADI

Price: Re. 1-[illegible]-0

Asian Printers Madras-5.